Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20



இலங்கை
சுமந்திரன்

NAZHIKAI
London

OCTOBER 2015

# நாழிகை

International Tamil Newsmagazine




இங்கிலாந்து

## ஜெரெமி கோபின்: புதிய கார்ல் மார்க்ஸ்...?


Niru BRAND®
Bringing Great Food to Life.
Quento
SURYAA
Niru Frozen Ready to Eat
Vegetable Briyani
Vada
Idly
Special Offer £4.99
Tamarind Purée
Coconut Milk
Nelli
Ice Cream Soda
Aqua Coco
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk





08 | இலங்கை
நல்லிணக்கமான ஓர் எதிர்காலம்

11 | இலங்கை
சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு


20 | இந்தியா
கருத்து சுதந்திரத்தை கருவறக்க முயலும் மோடி அரசு

24 | இந்தியா
- தமிழ் நாடு
புதிய விடியலை நோக்கி பட்டத்து இளவரசரின் பயணம்

28 | உலக விவகாரம்
- சிரியா
இரண்டாம் உலக யுத்தத்துக்கு பின்னர் பாரிய இடப்பெயர்வு


12 | அட்டை செய்தி
ஜெரெமி கோபின்
புதிய கார்ல் மார்க்ஸ்


46 | விளையாட்டு
- கிரிக்கெட்
'ஆஷஸ்' தொடர்
ஆச்சரியமும் அதிர்ச்சியும்


32 | கலை
ஆடலின் உயர்நிலை





36 | சினிமா
தமிழிசையில் மெல்லிசை

40 | சினிமா
ஒரு நீண்ட பாய்ச்சல்




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: X, No: 3
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews Limited 123 Twyford Road Harrow Middx HA2 0SJ
**Tel: 00 44 208 422 5699 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
**www.nazhikai.com**
**Anual Subscription** (12 issues)**: UK** £22.00 **Europe** £30.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews Limited**
**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6 **Tel: 416 613 2770**

# அநுகூல நம்பிக்கை

பிரிட்டிஷ் முடியாட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம்பெற்ற காலம்முதல் அந் நாட்டில் தமிழரின் உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகளையும், அவற்றின் வெற்றி, தோல்விகளையும், விளைவுகளையும் இன்றுவரை நேரடியாகவே, தங்கள் அநுபவத்தில் கண்டவர்கள், தெரிந்தவர்கள், புரிந்தவர்கள், இவற்றில் ஈடுபட்டவர்கள் கணிசமான வீதத்தினர் அந் நாட்டில் வாக்காளர்களாக இப்போதும் இருக்கிறார்கள். இவர்களின் வாக்கைக் கேட்பவர்களிலும் பலர் இத்தகையோராகவிருக்கிறார்கள்.

இந்திய சுதந்திரத்தில் கண்ட காந்தீய வழிமுறைகளில் பெரிதும் ஈர்ப்புற்று, இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் தங்களது உரிமைகளுக்காக இலங்கை அரசுடனான போராட்டத்துக்கு, அந்த காந்தீய வழிமுறையையே தமிழர்கள் அங்கு தேர்ந்தார்கள். தங்களுடைய சாத்வீக வழிப் போராட்டத்தில் ஒரு வரலாற்றை அவர்கள் எழுதியேவைத்திருக்கிறார்கள்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்த காந்தீய வழிமுறைகள் பயனளிக்காத விரக்தியில், பொதுவாக இளைய தலைமுறையினர், பின்னர் ஆயுத வழிமுறைகளில் துணிந்ததில் தீவிரமடைந்த தீவிரவாதம், அடுத்த முப்பது ஆண்டுகளில் இன்னொரு சரித்திரத்தை எழுதி முடிந்தது.

ஆக, இந்த அநுபவங்களுடனும், அதன் பின்னரான ஆறு ஆண்டுகால நிதானித்த சிந்தையிலும் அந்த மக்கள் மூன்று தேர்தல்களில் வாக்களித்தார்கள். 2013இல் வடமாகாண சபைக்கான தேர்தலில் வாக்களித்தவர்கள் பின்னர், இந்த ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதி தேர்தலிலும் இலங்கையின் பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும் வாக்களித்தார்கள்.

இந்த மூன்று தடவைகளிலும், தமது நிதானத்தில் அவர்கள் எதனாலும் தளம்பவில்லை. மூன்று தடவைகளிலும் ஒன்றையே உணர்த்தினார்கள்; ஓங்கி உணர்த்தினார்கள். அது, அவர்களை அடையாளப்படுத்தும் தாக்கங்களை இலங்கையின் அரசியல் அரங்கத்தில் தோற்றுவித்திருக்கிறது.

தங்களின் வாக்கை இந்த மூன்று தேர்தல்களிலும், ஒரே கட்சிக்கு அவர்கள் உறுதியாக அளித்தார்கள். அதுவும், ஒன்றேயொன்றுக்காகவே அளித்தார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அவர்கள் இத் தேர்தல்களில் தொடர்ந்து அளித்த வாக்கு, நிச்சயமாக அக் கட்சியை அல்லது அமைப்பை முற்றுமுழுதாக அவர்கள் எல்லாவிதங்களிலும் விரும்பியேற்று, அதனால் அளித்த வாக்குகளாக நிச்சயம் கருதிவிட இயலாது. தமிழ் தேசிய கூட்டமைப்பும்கூட அப்படி நம்பிவிடுமோ என்னவோ, ஆனால், அது அப்படி நம்பிவிடக்கூடாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின்மீது நியாயமான, அவசியமான விமர்சனங்கள் நிச்சயம் உண்டு. நடைபெற்ற பொதுத் தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் வென்றிருக்கக்கூடிய மேலுமோர் ஆசனத்தை அது இழந்தமை, கூட்டமைப்பின் மீதான விமர்சனத்துக்குரிய ஒன்றின் விளைவானதாக கருதப்படலாம். இந்த ஆசிரிய தலையங்கமும்கூட, அந்த வேளையில் இந்த விமர்சன எண்ணத்தை தெரிவித்தது.


ஆக, அநுகூலமான ஒரு வேளையில், அநுகூலமான ஒன்று என்று தமது அநுபவங்களில் தாம் நம்புவதை தமிழ் தேசிய கூட்டமைப்பும் நம்புவதான நம்பிக்கையில், மக்கள் தங்களின் ஒரு தியாகமாகவே தங்கள் வாக்கை அந்த அமைப்புக்கு அளித்திருக்கிறார்கள். தங்களின் அந்த தியாகத்தில், அந்த அமைப்புக்கு ஓர் அரசியல் பலத்தை அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

மக்கள் அளித்த அந்தப் பலத்துடன், அந்த மக்களின் எதிர்பார்ப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு வெல்லவேண்டும்.

இதேவேளை, நம்பிக்கையுடன் மக்கள் அந்த அமைப்புக்கு அளித்த பலத்தைப் பலவீனமாக்கும் எண்ணங்கள், நடவடிக்கைகளையும் மக்கள் விரோத நடவடிக்கைகள் என்றேதான் கொள்ளலாம். ■

சில வரிகளில்

# உலகம்



## ஆப்கானிஸ்தான்

### அமெரிக்க படைகள் தொடர்ந்து நிலைகொள்ளும்

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படையினர் முற்றாக விலக்கிக்கொள்ளப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த முடிவை அமெரக்கா மாற்றிக்கொண்டுள்ளது.

இது குறித்த விரவான திட்டங்களை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விரைவில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2017ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியிலிருந்து தான் விலகும்போது, ஆப்கானில் தொடர்ந்தும் 5 ஆயிரத்து 500 படையினரை நிலைநிறுத்த ஒபாமா திட்டமிட்டுள்ளார்.

தலிபான்களின் அச்சுறுத்தல் அதிகரத்துவரும் நிலையில், ஆப்கான் படையினருக்கு உதவிகளை வழங்க மேலதிக படையினர் அங்கு தேவைப்படுவதாக அமெரிக்க தரப்பு பரிந்துரைத்ததைத் தொடர்ந்து காபூல், பக்ராம், ஜலாலாபாத் மற்றும் கந்தார ஆகிய இடங்களில் படையினரை தொடர்ந்தும் நிலைநிறுத்த ஒபாமா இணங்கியுள்ளார்.

2001ஆம் ஆண்டு தலிபான் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர், இப்போது முதல் தடவையாக குந்துஸ் நகரை தலிபான்கள் கைப்பற்றியிருந்தமையே அமெரிக்க நிலைப்பாட்டில் மாறுதல்கள் ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நெதர்லாந்து

### ரஷ்ய ஏவுகணையில் மலேசிய விமானம்

ஐரோப்பிய வான்வெளியில் விபத்துக்குள்ளான மலேசியன் ஏயர்லைன்ஸ் விமானம், ரஷ்ய தயாரிப்பு ஏவுகணை தாக்கியே வீழ்த்தப்பட்டதாக நெதர்லாந்து பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

மலேசிய விமானம், உக்ரைன் வான்பரப்பில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்த சம்பவம் குறித்து ஓர் ஆண்டுக்கு மேலாக விசாரணை நடத்திவரும் நெதர்லாந்து பாதுகாப்பு சபை, விபத்துக்குள்ளான விமானப்பாகங்களிலிருந்து பெறப்பட்ட உலோகத் துண்டுகளை ஆதாரமாகக்கொண்டே விமானம் ஏவுகணை தாக்குதலுக்கு இலக்கானதை உறுதிசெய்வதாக தெரவித்துள்ளது.

உக்ரைனில் போராட்டம் நடத்திவரும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளரகளே விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக குற்றஞ்சாட்டப்படுகின்ற போதிலும், குறித்த ஏவுகணை உக்ரைன் அரச கட்டுப்பாட்டு பகுதியில் இருந்தே ஏவப்பட்டதாக ரஷ்யா தெரிவிக்கிறது.

கடந்த 2014ஆம் ஆண்டு உக்ரைன் வான்பரப்பில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் விமானத்தில் பயணித்த 298 பேரும் கொல்லப்பட்டனர்.



மியன்மார்

## ஆயுத குழுக்களுடன் சமாதான ஒப்பந்தம்



நாடாளாவிய ரீதியிலான சமாதான ஒப்பந்தம் என்று மியான்மார் அரசாங்கத்தினால் கூறப்படும் ஒப்பந்தம், எட்டு ஆயுத குழுக்களுக்கும் மியன்மார் அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முடிவிலேயே, இந்த ஒப்பந்தம் மியான்மார் தலைநகர் நேபிடோவில் கைச்சாத்தாகியது.

தற்போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம், நீடித்த அரசியல் தீர்வுக்கான முதற்படியாக இருக்குமென்று மியான்மார் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், களத்திலுள்ள பல போராளிக் குழுக்கள் இந்த சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

சமாதான பேச்சுவார்த்தைகளில் 15 குழுக்கள் பங்குபற்றியபோதும், அதில் ஏழு குழுக்கள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத குழுக்கள், பெரும்பாலான பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.

1948ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றதுமுதல், மியன்மாரில் ஆயுதக்குழுக்கள் அரச படையுடன் மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தியா

## புதிய நுண்ணுயிருக்கு கலாம் பெயர்



விண்வெளி ஆய்வு மையத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் (பக்டீரியா) வகைக்கு, இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும் மறைந்த விஞ்ஞானியுமான அப்துல் கலாமின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

வேற்று கிரகங்களில் உயிரினங்கள் வாழ்வதுகுறித்து ஆய்வு மேற்கொண்டுள்ள 'நாசா' விஞ்ஞானிகள் அண்மையில் கண்டுபிடித்துள்ள புதிய நுண்ணுயிர் வகைக்கு அப்துல் கலாமின் நினைவாக 'சொலிபசிலஸ் கலாமி' என்று பெயர் சூட்டியதாக தெரவித்துள்ளார்கள்.

காமா கதிர்வீச்சை தாங்கும் சக்தி கொண்ட இந்த நுண்ணுயிர் வகையானது, மனிதர்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்றும், அப்துல் கலாமின் அறிவியல் எண்ணங்களை மதித்து, அவரது பெயரைச் சூட்டுவதாகவும் நாசா தெரிவித்துள்ளது.

சுவீடன்

## உலகில் முதல் நாடு

உலகில் பணப் புழக்கத்தை இல்லாதொழித்த முதலாவது நாடு என்ற பெருமையை சுவீடன் பெற இருக்கிறது.

வரத்தக பரிமாற்றத்துக்காக பணத்தை கைகளால் பரிமாறிக்கொள்ளும் வழக்கத்தை முற்றிலும் மாற்றியமைத்து, வங்கி அட்டை அல்லது நேரடி கணக்கு மாற்றம் மூலமாக பரிமாறுவதை பெரும்பாலான சுவீடன் மக்கள் கடைப்பிடித்து வருவதால், அங்கு பணப்புழக்கம் முற்றாக இல்லாததொழியும் நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்வீடிஷ் குரோணரை அந்த நாட்டு மக்கள் பெருமளவில்



பயன்படுத்துவதில்லை என்றும், சிறு தொகை பணமாற்றம்கூட வங்கி அட்டைகள் மூலமாகவே நடைபெறுவதாகவும், சுவீடனின் மொத்த பணத்தில் 40 சதவீதம் மட்டுமே தற்போது புழக்கத்தில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

சுவீடனின் வங்கிகள் பலவும் ரொக்கப் பணத்தை ஏற்பதில்லை என்று அறிவித்துள்ளன.

# காசைத் திருப்பிக் கொடுக்கலாம், கை தட்டலை...

**'நரேந்திர மோடி நடந்துகொள்வது சரியில்லை. திருப்பிக்கொடு சாகித்ய அக்கடமி விருதை'**

"என்ன இருந்தாலும் நரேந்திர மோடி நடந்துகொள்வது சரியில்லை. திருப்பிக் கொடு சாகித்ய அக்கடமி விருதினை," என்று எழுத்தாளர்கள் எல்லோரும் சொல்லி விருதுகளைத் திருப்பிக்கொடுக்க ஆரம்பித்துவிட்டதால் சாகித்ய அகடமி அலுவலக அறைகளில் விருதுப் பத்திரங்களும் விருது வாங்கும்போது போடப்பட்ட சால்வைகளும் நிரம்பி வழிந்தன. அவற்றிற்கு இடம் கொடுத்துவிட்டு, டெல்லி சாகித்ய அக்கடமி அலுவலர்கள் பகதூர்ஷா ஜாபர் மார்க் தெருவில் பிளாட்பாரத்தில் தங்கள் அலுவலகத்தை நடத்தவேண்டியிருந்தது. பொதுமக்கள் அவர்களை ஆம் ஆத்மி கட்சிக்காரர்கள் என்று நினைத்து, மனுக்கள் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இது ஒருபுறம் என்றால், சாகித்ய அக்கடமியின் தலைமைக் கணக்காயருக்கு தலை சுற்றிப் பைத்தியம் பிடிக்காத குறையாக பிரச்னைகள் வந்தன. அவர் 'எய்ம்ஸ்' மருத்துவ மனையில் அநுமதிக்கப்பட்டார். காரணம் பரிசை, விருதை திருப்பிக் கொடுத்தவர்கள் அப்போது தாங்கள் வாங்கியிருந்த ரொக்கப் பணத்தையும் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். சிலர் ரொம்பவும் நாணயஸ்தர்கள், அந்தப் பணத்திற்கு வங்கி சதவிகிதப்படி வட்டியும் சேர்த்து அனுப்பியிருந்தார்கள்.

பரிசு பெற்றவர்களில் மூன்றாவது ரகத்தினர், இப்போது ரொக்கத்தை அனுப்பிவிட்டோம்; அப்புறம் வட்டியை அனுப்பிவைக்கிறோம். 1962இலிருந்து வட்டி விகிதம் என்ன என்பதை சாகித்ய அக்கடமி அறிவித்தால் விருது பெற்ற மற்றையவர்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்று, வருடவாரியாக வட்டிப் பட்டியல் கேட்டிருந்தனர்.

இந்த நிலையில் பொழுதுபோகாத ஒரு பத்திரிகையாளர், பரிசைத் திருப்பிக் கொடுக்க விரும்பாதவர்களிடம், 'திருப்பிக் கொடுப்பது சரியா' என்று பேட்டி கண்டார். அவர்களில் ஒருவர் "ஐயா, பணத்தைத் திருப்பிக் கொடுப்பதுடன் பிரச்னை முடிந்துவிடுமா, என்ன? இவர்களுக்கு ஊர்ஊராக பாராட்டு விழாக்கள் நடைபெற்றனவே, அந்தந்த ஊர்களில் விழா ஏற்பாடு செய்தவர்களை அழைத்து, அல்லது அவர்களில் சிலர் இறந்து போயிருந்தால் அவர்களது வாரிசுகளை அழைத்து, பழையபடி மீட்டிங் போட்டு, பாராட்டுரைகளையும் திருப்பிப்பெறுவதை உணர்த்த, பொது நிகழ்ச்சியாக 'பாராட்டு மறுப்பு விழா' நடத்தலாமே," என்று சொன்னார்.


பத்திரிகையாளர் ஒரு 'கொனஷ்டை'. "அந்த பாராட்டு மறுப்பு விழாவில் ஏற்கெனவே கலந்துகொண்ட எல்லோரும் கலந்து கொள்ளவேண்டுமே, அவர்களில் யாராவது வெளியேயோ, மேலேயோ போயிருந்தால் என்னசெய்வது?'' என்று கேட்டார். விருதுபெற்றவர் இதற்கு பதில் சொல்வது எப்படி என்று திகைத்துக் கொண்டிருந்தபோது, அவரது 15 வயதுப் பையன், "அப்பா, நான் பள்ளிக்கூடத்தில் கோலி குண்டு விளையாட்டில் முதல் பரிசு வாங்கினேனே. அதை மந்திரிதானே கொடுத்தார், அவரிடம் திருப்பிக் கொடுத்துவிடட்டுமா," என்று கேட்டான். "இந்தப் பாராட்டு மறுப்பு விழாவில் கலந்துகொள்பவர்கள் கை தட்டலாமா, கூடாதா?" என்று நிருபர் கேட்க, கொஞ்சம் யோசித்துப் பார்த்த எழுத்தாளர், "ஓ, கை தட்டலாமே, அதில் என்ன தவறு?" என்றார். "அது எப்படி? ஏற்கெனவே பெற்ற பரிசைத் திருப்பிக் கொடுத்தாயிற்று. அன்று வாங்கிய கைதட்டலை எப்படித் திருப்பிக் கொடுப்பது? மறுப்பு விழா கைதட்டலை டேப் ரெகார்டு செய்து அனுப்பினாலும் அது பழைய கைதட்டல் ஆகிவிடுமே" என்று நிருபர் சொல்லவும், "நல்ல வேளை, நான் பரிசைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அதனால் கைதட்டைத் திருப்பிக்கொடுக்கும் பிரச்னை இல்லை'' என்று அந்த எழுத்தாளர் திருப்திப்பட்டுக்கொண்டார்.

எழுத்தாளரின் பையன் பத்திரிகையாளரைப் பார்த்துக் கேட்டான், "ஸார், உங்களுக்கு ஒரு கேள்வி; அன்று இவர்களைப்பற்றி எந்தெந்தப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததோ அதே பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைத் திரும்பப்பெறுக் கொள்கிறோம் என்று பத்திரிகைகளும் அப்படி மறுப்புச் செய்தி வெளியிடுவதுதானே நியாயம்?''

கெட்டிக்காரப் பத்திரிகையாளர், "தம்பி உள்ளே போய் எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாயேன்'' என்று கேட்க, பையன் வீட்டுக்குள்ளே போனான். அதுதான் சாக்கு என்று, தலைதெறிக்க ஓடிப் போனார் பத்திரிகையாளர். அலுவலகத்தில் கொஞ்சம் ஆசுவாசப்படுத்தி உட்கார்ந்துகொண்டதும், ஆசிரியரைப் பார்த்து, "ஸார், நாம் இதுபற்றித் தலையங்கம் எழுதலாமே'' என்று யோசனை சொன்னார்.

பத்திரிகை ஆசிரியரும் "எழுதலாம் தானய்யா, நானே யோசிச்சேன். பிரமுகர்களைவிட அதிகமாக விழாக்களில் நானே கலந்துகொண்டு பிரபலமாகி விட்டதால் எனக்கு பத்மஸ்ரீ விருது கொடுக்கப்போகிறார்கள் என்று எதிர் பார்க்கிறேன். இந்த நேரத்தில் எதையாவது எழுதி அந்த வாய்ப்பைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை'' என்று உண்மையைப் போட்டு உடைத்தார்.

"அதற்காகக் கவலைப்படாதீர்கள்.




Sahitya Akademi, India's national academy of letters established in 1954. It is an organisation committed for promoting Indian literature, throughout the world & it recognise twenty four Indian Languages Including English.

**பொழுதுபோகாத ஒரு பத்திரிகையாளர், பரிசை திருப்பிக் கொடுக்க விரும்பாதவர்களிடம், 'திருப்பிக் கொடுப்பது சரியா?' என்று பேட்டி கண்டார்**

பத்மஸ்ரீயை வாங்குங்க, அது பெருமை. திருப்பிக் கொடுப்பது, அதைவிடப் பெருமையானது. அந்த சமயத்தில் மற்ற பத்திரிகைகள் உங்க போட்டோவைப் போடுமோ, போடாதோ தெரியாது. உள்ளூர், வெளியூர் விழாக்களில் நீங்கள் கலந்துகொள்ளமுடியாத நாள்களில் நீங்கள் பத்மஸ்ரீ விருதைத் திருப்பிக் கொடுப்பதாக அறிவித்துவிடலாம். இதனால், ஏற்கெனவே பத்மஸ்ரீ விருதுபெற்ற சக பத்திரிகை ஆசிரியர்களை தர்மசங்கடப்படுத்தலாம். அதனால் அந்த விருது வாங்கும்வரை அடக்கி வாசியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே உள்ளே வந்த பத்திரிகையின் பிரதான போட்டோகிராபர், "ஸார், இவர்கள் எல்லாம் சாகித்ய அக்கடமி பரிசு வாங்கியிருக்கிறார்கள் என்பதே திருப்பிக் கொடுக்கும்போதுதான் தெரியவருகிறது. ஜனங்க நம்மை மறந்திடக் கூடாதேன்னு இவங்க ஏதேதோ ஸ்டண்ட் செய்யிறாங்க. கண்டுக்காம விட்டுடுவம் சார்" என்று சொல்ல, டெல்லியிலிருந்து ஓர் ஏஜென்ஸி பத்திரிகைச் செய்தி வந்தது. அது இதுதான்:

விருதுகளைத் திருப்பிக் கொடுத்தல் பரபரப்பான செய்தியாக மாறியபோது மத்திய பண்பாட்டுத் துறைச் செயலாளர் சாகித்ய அக்கடமி, லலித் கலா அக்கடமி, சங்கீத நாடக அக்கடமிகளின் தலைவர்களை அழைத்து 'இனி எழுத்தாளர்களை, கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும்போதே விருதைத் திருப்பிக் கொடுக்கமாட்டேன் என்று உறுதிமொழி எழுதி வாங்கிக் கொள்ளுங்கள்' என்றார். அகடமிகளின் தலைவர்கள் விடைபெற்ற சமயத்தில் செயலாளர் சொன்னார்; "நீங்களும் முன்பு ஏதோ விருது பெற்றவர்கள் தான். பிற்காலத்தில் ஏதாவது காரணங்களுக்காக நீங்கள் ஏற்கெனவே பெற்ற விருதுகளை திருப்பிக் கொடுக்காமல் இருப்பீர்களா? அப்படிச் செய்தால் இதுவரை நீங்கள் வாங்கிய சம்பளத்தையும் சலுகைகளையும் திருப்பித் தரவேண்டி இருக்கும்," என்று எச்சரித்தார். எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் இனி எப்படி சமாளிப்பது என்று, அக்கடமித் தலைவர்களுக்கு அப்போது புரியவந்தது.

**(கட்டுரையாளர், சாகித்ய அக்கடமி தமிழ் ஆலோசனைக் குழுவின் முன்னாள் உறுப்பினர்)**

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம்

# நல்லிணக்கமான ஓர் எதிர்காலத்தை ஏற்படுத்துமா?

**போர்க் குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச அநுசரணையுடனான விசாரணை, சிங்கள கடும்போக்காளர்களின் எதிர்ப்பை மாத்திரமன்றி, தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் பெரும் சவாலை ஏற்படுத்துகிறது**

தண்டாயுதன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட இலங்கைமீதான அமெரிக்க பிரேரணைபற்றிய வாதப்பிரதிவாதங்களே இப்போது இலங்கையில் முனைப்படைந்துள்ளன.

2012ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டுவரை, மூன்று தடவைகள் ராஜபக்ஷ அரசுக்கெதிராக ஐ. நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களை அமெரிக்கா கொண்டுவந்திருந்தது. அம் மூன்று தீர்மானங்களும் வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற ராஜபக்ஷ அரசின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை அத்துமீறல்களைச் சுட்டிக்காட்டுபவையாக இருந்தன.

ராஜபக்ஷ அரசைப் பொறுத்தவரை, ஜெனிவா அவருக்கு ஒரு சிம்மசொப்பனமாகவே இருந்தது. அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை எதிர்கொள்வதற்கு, தேர்தல் பிரச்சாரங்களுக்கு ஆட்களை பஸ் வண்டிகளில் இடத்துக்கிடம் கொண்டுசெல்வதுபோல, ஜெனிவாவுக்கு விமானத்தில் தனது ஆட்களை பெருமளவில் ராஜபக்ஷ அரசு அனுப்பிவைத்தது. சர்வதேச நடைமுறைகள், சர்வதேச அமைப்புக்களின் அணுகுமுறைகள் என்பவற்றை ஆழமாக அறிந்து செயல்படும் ராஜதந்திரம் ராஜபக்ஷ அரசிடம் காணப்பட்டிருக்கவில்லை.

சராசரித் ‘தெருச்சண்டித்தனம்’ போலவும், இலங்கையில் தனது ‘அடாவடித்தனத்தை’ காண்பிப்பதுபோலவுமே சர்வதேச சமூகத்தை ராஜபக்ஷ அரசு அணுகியிருந்தது.

ஜெனிவாவில், 2012ஆம் ஆண்டுமுதல் 2014ஆம் ஆண்டுவரை இலங்கைக்கு எதிராக மனித உரிமைப் பேரவையில் கொண்டுவந்திருந்த தீர்மானங்கள் ராஜபக்ஷ அரசை சர்வதேச ரீதியில் படிப்படியாக பலவீனப்படுத்துவதோடுமட்டும் நின்றுவிடவில்லை. அவை, இலங்கையிலும் ராஜபக்ஷவை நிலைதளர வைத்திருந்தன.

ஆயினும், இத்தடவை ஜெனிவா




ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர்
சைட் அல் ஹுசைன்

வில் பெரும் எதிர்பார்ப்புடன் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு எதிரானது என்பதைவிட, கடந்தகாலத் தவறுகளிலிருந்து விடுபட்டு பொறுப்புக்கூறல், அடிப்படை மனித உரிமைகளைப் பேணுதல், நல்லிணக்கத்தை பலப்படுத்துதல் என்பவற்றை வலியுறுத்துவதாக அமைந்திருக்கின்றது.

அமெரிக்க தீர்மானத்துக்கு முன்பதாக வெளியான ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தலைவரது இலங்கை குறித்த அறிக்கை, 'கலப்பு நீதிமன்றம்' பற்றிக் குறிப்பிட்டது. இலங்கையில் போர்க்குற்றங்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச அநுசரணையுடனான இக்கலப்பு நீதிமன்ற விசாரணைபற்றிய ஆலோசனையே இன்று சர்ச்சைக்குரியதாக இலங்கையில் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை, கடந்த முப்பது வருடகாலமாக போரினால் அநுபவித்த கஷ்ட நஷ்டங்கள் சொல்லொணாத் துயரங்களைச் சுமந்தவையாகவே இருக்கின்றன. கடந்தகால அரசாங்கங்கள், வடக்கு-கிழக்கு மக்களுக்கு அவர்களது அடிப்படை மனித உரிமைமீறல் பிரச்னை சம்பந்தமாக எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. ஆணைக்குழுக்கள் எத்தனையோ ஏற்படுத்தப்பட்டு, காணாமல்போனோர் சம்பந்தப்பட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இந்த விசாரணை அறிக்கைகள் அனைத்தும் கிடப்பில்போடப்பட்டனவே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிட்டவில்லை. சிலவாரங்களுக்கு முன்னர் காணாமல்போனவர்களின் உறவுக்காரர்கள், காணாமல் போனோர் சம்பந்தமாக தற்சமயம் இடம்பெற்றுவருகின்ற ஆணைக்குழு விசாரணையை பகிஷ்கரித்துமிருந்தனர்.

இந்த ஆணைக்குழு விசாரணையை வெறும் கண்துடைப்பு,

**ஜெனிவா மனித உரிமைப் பேரவைத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கை, அமெரிக்க தீர்மானம் என்பவை, இலங்கையின் நீண்டகால நலன்கருதியவை என சிங்கள கல்விமான்கள், அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்**

ஏமாற்றுவித்தை என்றெல்லாம் அவர்கள் தூற்றியிருந்தனர்.

இதுதவிர, வடக்கு-கிழக்கில் யுத்த வடுக்களைச் சுமந்து கண்ணீரும், கம்பலையுமாக இருக்கின்ற மக்கள், தமக்கு நீதியைத் தரக்கூடிய விசாரணைகள் இலங்கை அரசினால் நம்பகத்தன்மையுடன் நடத்தப்படமுடியாது என்றே உறுதியாக நம்புகிறார்கள். ஒரு சர்வதேச விசாரணையே தமக்கு நீதியைப் பெற்றுத்தரும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரும், வடமாகாண முதலமைச்சருமான சி. வி. விக்னேஸ்வரனும் இலங்கையின் நீதித்துறையை வன்மையாகச் சாடியுள்ளதோடு, சர்வதேச அநுசரணையுடனான ஓர் ஏற்பாடே இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஏற்படுத்தப்படவேண்டுமென்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

'ஹைபிரிட்' நீதிமன்றமெனக் குறிப்பிடப்பட்ட, சர்வதேச சட்டத்துறை வல்லுநர்களை உள்ளடக்கியதும், உள்ளூர் சட்டநிபுணர்களைக்கொண்டதுமான ஒரு கலப்பு விசாரணையே இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு உகந்ததென ஜெனிவா மனித உரிமைப் பேரவை குறிப்பிட்ட நிலையில், இலங்கையின் கடும்போக்காளர்கள், குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் இக்கலப்பு நீதிமன்ற பரிந்துரைக்குத் தமது பலமான எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றனர்.

கலப்பு நீதிமன்ற விசாரணை குறித்து மஹிந்த ராஜபக்ஷ தனது எதிர்ப்பை மிகக்கடுமையாக வெளிப்படுத்தியுள்ளார். போரில் ஈடுபட்ட இராணுவ வீரர்களைக் காட்டிக்கொடுக்கும் ஒரு நடவடிக்கையே இக்கலப்பு நீதிமன்ற பரிந்துரை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலிலும், பின்னர் ஆகஸ்ட்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் தோல்விகளைச் சந்தித்த மஹிந்த ராஜபக்ஷ, தமது அரசியல் எதிர்காலம் சூன்யமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொள்வதையே அவதானிக்கமுடிகின்றது. தற்போதைய அரசு அவர்மீது பலதரப்பட்ட நிதிமோசடிக்குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியுள்ளது. அவரது சகோதரர்கள்மீதும் பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரணைகள் அவ்வப்போது நடாத்தப்படுகின்றன.

ராஜபக்ஷவின் புதல்வர்களான நாமல், யோசித்த ஆகியோர் நிதிமோசடி, கொலைக்குற்றம்போன்றவை தொடர்பாக குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தவகையில், 'சிதம்பர சக்கரத்தை பேய்பார்த்த' நிலையில், ராஜபக்ஷ காணப்படுகிறார்.

சர்வதேச அநுசரணையுடனான கலப்பு நீதிமன்றம் என்ற விடயம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரைகூட ஒரு சவால் மிக்கதாகவே இருக்கின்றது. நடந்துமுடிந்த பாராளுமன்ற தேர்தல் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் கசப்புணர்வுகளையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, எம். ஏ. சுமந்திரன் ஆகியோர்மீது அதிருப்திகொண்டவர்கள், முற்றுமுழுதான சர்வதேச விசாரணையே இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக அமையவேண்டுமென வலியுறுத்திவருகின்றனர். சம்பந்தன், மாவை. சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோர் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும், சர்வதேசத்துக்கு சாதகமான முறையிலும் நடந்துகொள்கின்றனர் என்பது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள அதிருப்தியார்களின் கண்டனமாக இருக்கின்றது.

அத்துடன், தமிழ் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சர்வதேச விசாரணையையே வலியுறுத்திவருகின்றார்.

இவ்வகையில், வடக்கு-கிழக்கின் பெரும்பாலான மக்களும் கலப்பு நீதிமன்ற விசாரணையைவிட, முற்றுமுழுதான சர்வதேச விசாரணையையே வலியுறுத்திவருகின்ற நிலையில், இப்புதிய விசாரணை ஏற்பாடு எவ்வாறு அமையப்போகின்றது? இதன் செயல்பாடுகள் நம்பகத்தன்மையுடையனவாக இருக்குமா? இலங்கை அரசின் ஆணைக்குழுக்கள்போலவே இந்தக் கலப்பு விசாரணையும் அமைந்திருக்குமா? என்ற கேள்விகள் முனைப்படைய ஆரம்பித் துள்ளன.

எது எவ்வாறாயினும், அமெரிக்க பிரேரணையின் தொனிப்பொருளாக இருக்கின்ற, பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல்போன்ற விடயங்கள் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படவேண்டுமென்பதே பெரும்பாலான வடக்கு-கிழக்கு மக்களினதும், இலங்கையில் நியாயபூர்வமாக சிந்திக்கின்ற தென்னிலங்கை புத்திஜீவிகளினதும் அபிப்பிராயமாக இருக்கின்றது.

ஜெனிவா மனித உரிமைப் பேரவைத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கை, அமெரிக்க தீர்மானம் போன்றவை இலங்கையின் நீண்டகால நலன்கருதியவை என பல சிங்கள கல்விமான்கள், அரசியல் அவதானிகள் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இன ரீதியான பூசல்கள் காணப்பட்ட தென்னாபிரிக்கா மற்றும் ருவாண்டா, கிழக்கு ஐரோப்பாவில் குழப்பத்துக்குள்ளான நாடுகளில் பொறுப்புக்கூறல், அடிப்படை மனித உரிமை மேம்பாடு போன்றவற்றில் ஆணித்தரமான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட காரணத்தினாலேயே அந்நாடுகளில் இன்று உறுதிப்பாட்டுடனான தன்மை காணப்படுவதாக இவர்கள் நம்புகின்றனர்.

இந் நிலையில், இலங்கை குறித்த அமெரிக்க தீர்மானம், ஐ. நா. மனித உரிமைப் பேரவைத் தலைவரது பரிந்துரைகள் என்பவை, இலங்கையில் உறுதியான நல்லிணக்கமுள்ள ஓர் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் எவ்வளவு தூரம் உறுதுணையாக இருக்கப்போகின்றன என்பதற்கு காலம்தான் பதில் கூறவேண்டும். ■

சில திருப்பங்களுடன் தீவிரமடையும் இலங்கையின் அரசியலில், தமிழ் தேசிய கூட்டமைப்பும் முக்கியமான ஒரு செயல்பாட்டைக்கொண்டிருக்கிறது. தலைவர் இரா. சம்பந்தனுடன், கூட்டமைப்பில் இச்செயல்பாடுகளுடன் முக்கியத்துவம் பெறுபவர் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன். திரு சுமந்திரன் அண்மையில் லண்டன் வந்திருந்தார். அவரிடம் பேசினோம். (ஆ-ர்)



# சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு

அரசியல் தீர்வில் இணக்கப்பாடு என்று கூறாவிட்டாலும், எமக்கான அரசியல் தீர்வு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதில் நாம் புதிய அரசுடன் ஓர் இணக்கப்பாட்டைக்கொண்டிருக்கிறோம். திருமதி சந்திரிகா குமாரதுங்க தன்னுடைய தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கான ஓர் எண்ணத்தைக் கொண்டிருக்கிறார். அவருடைய ஆட்சியின்போது, கலாநிதி நீலன் திருச்செல்வம் வரைந்த மூல தீர்வுத் திட்டம் பின்னர், 2000ஆம் ஆண்டில் பலவிதத்திலும் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட நிலையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், 'சமஷ்டி' என்று அழைக்காவிட்டாலும், சமஷ்டி அமைப்பிலான ஒரு தீர்வுத் திட்டத்துக்கு அவர் விருப்புக் கொண்டிருக்கிறார்.

போர்க் குற்றம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையையே நாம் எப்போதும் வற்புறுத்திவந்தோம். ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்த விதத்தில் 'கலப்பு' நீதிமன்றம் என்று இல்லாவிட்டாலும் சர்வதேச நீதிபதிகள், வழக்கு தொடுநர்கள், விசாரணையாளர்கள் அடங்கிய விசாரணைக்கு இலங்கை அரசு ஒப்புக்கொண்டு, அந்த விசாரணைகளைப் பொறுப்பேற்று, அந்த விசாரணைக்கு அமைவான உள்ளூர் பொறிமுறைகளுக்கு இலங்கை அரசியலமைப்பிலும் சட்ட வலுவை அரசு ஏற்படுத்தும். அப்போது, யுத்த குற்றங்களும், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களும் இலங்கையின் சட்டங்களிலும் குற்றமானவையாகும்.

இலங்கை அரசு இந்தப் பொறுப்பை ஏற்று அதனை நடைமுறைப்படுத்தும்போது, பாதிப்புக்குள்ளான தரப்புடனும் கலந்தாலோசித்தே அது செயல்படவேண்டும். நாம் அதனை வலியுறுத்துவோம்; சர்வதேச சமூகமும் அதனையே நிச்சயம் எதிர்பார்க்கும். பாதிக்கப்பட்ட தரப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலேயே அந்த நீதிமன்றமும், விசாரணைகளும் இடம்பெறவேண்டும். அப்படியல்லாத ஒரு முறையை நாம் ஏற்கமாட்டோம்; சர்வதேச சமூகமும் அதனை ஏற்கமாட்டாது என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு. சாட்சியங்களின் பாதுகாப்பும் அந்த நிலையில் உறுதிப்படுத்தப்படும்.

இப் போர்க்குற்ற விசாரணைகளுக்காக சர்வதேச நீதிமன்றத்துக்கு இப்போது நாம் செல்லமுடியாது. அது, ஐ. நா. பாதுகாப்புச் சபையினூடாகவே கொண்டுசெல்லப்படவேண்டியது.

கடைசிக் கட்ட யுத்தத்தை இலங்கை அரசு தனித்து நடாத்தவில்லை; வேறுசில நாடுகளின் துணையும் இலங்கை அரசுக்கு இதில் இருந்ததென்று ஒரு வாதம் முன்வைக்கப்பட்டால், அந்த நாடுகளும் போர்க்குற்றத்துக்கு உள்ளாகும் வாய்ப்பு, போரின்போதான கட்டளையிடும் அதிகாரம் இலங்கை இராணுவத்துக்கும், ஜனாதிபதிக்குமே உரியதென்பதால், பெரும்பாலும் அந் நாடுகளுக்கு இல்லை. தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை இலங்கை அரசுக்கு அந் நாடுகள் வழங்கி, அது நிரூபிக்கப்பபட்டால், அது போர்க் குற்றமாக அமையும்.

'இன அழிப்பு' என்பதனை அரசியல், சமூக ரீதியாக வற்புறுத்துவதும், நீதிமன்றம் ஒன்றில் அதனை நிரூபிப்பதும் ஒரேமாதிரியானதல்ல. இன அழிப்பு என்பதனை சர்வதேச குற்றமாக ஒரு நீதிமன்றத்தின் முன் கொண்டுசெல்கையில், நீதிமன்றத்தின் அந்த சட்ட வரையறையுடனான ஆதாரங்களுடன் அது நிரூபிக்கப்பபடாவிட்டால், இன அழிப்பு நடைபெறவில்லை என்ற தீர்ப்பே நீதிமன்றத்தில் கிட்டும். இதனைக் கவனத்தில் கொண்டே, இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கைகளை விசாரணைசெய்த ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு, 'துன்புறுத்தல்' என்ற பதத்தைப் பிரயோகித்தது. இன அழிப்பு என்பதை, உணர்ச்சிபூர்வமாக கூறி, எமக்கு எதிரான ஒரு தீர்ப்பைப் பெறுவது புத்திசாலித்தனமாகாது.

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்றே, சில சம்பவங்களை ஆதாரம்காட்டி, 2011, 13ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் நான் பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறேன். நீதிமன்றத்தில் அந்தத் தீர்ப்பை நாம் பெறவேண்டும். எம்மிடம் உள்ள சட்ட ஆதாரங்கள், இப்போது நமக்கு அந்தத் தீர்ப்பைப் பெற்றுத் தருவதற்கு போதாது. இதனால்தான், இன அழிப்பு என்பதனை, இப்போது நீதி விசாரணைக்கு எடுப்பதை நான் விரும்பவில்லை.

அரசியல் கட்சி ஒன்றுக்கு சார்பான ஒருவர், அக் கட்சி போட்டியிடுகின்ற ஒரு தேர்தலில் அக் கட்சிக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபடுவது, எந்த தர்மத்திலும் அடங்கமாட்டாது. இதனடிப்படையிலேயே, வடமாகாண முதலமைச்சரின் தேர்தல் கால நடவடிக்கைகள் தொடர்பில் அவர் விளக்கமளிக்க அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கும் விதத்தில், அவரைப் பதவியிலிருந்து இடைநிறுத்தும் ஒரு தீர்மானம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மத்திய செயற்குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. எனினும், நிலைமைகளை அவதானத்தில்கொண்டு, அவருடன் முதலில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நேரடியான ஒரு விளக்கத்தைப் பெறுவதற்கான ஓர் இணக்கம் ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 வாக்குகளால் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஓர் ஆசனத்தை இழந்துள்ளபோது, முதலமைச்சரின் நடவடிக்கைகள் பாரதூரமானவையாகவே கருதப்படவேண்டியவை. ■

ஜெரெமி கோபின்

# புதிய கார்ல் மார்க்ஸ்?

அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கம் அமைக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது என்பதை பிரிட்டனின் தொழிற் கட்சி நிரூபித்திருக்கிறது.

அண்மையில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்திருந்தபோதிலும், பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தை கார்ல் மார்க்ஸின் 'மறு அவதாரம்' என்று வர்ணிக்கப்படும், ஆரவாரங்களற்ற சாமான்ய அரசியல்வாதியான ஜெரெமி கோபின் தலைவராக தெரிவானதில், உலகின் கூர்மையான பார்வை பிரிட்டிஷ் அரசியலின் பக்கம் திரும்பியிருக்கிறது. பலத்த எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் தாண்டி, தொழிற் கட்சியின் தலைவராக தெரிவான ஜெரெமி கோபின் தொழிற் கட்சியிலும், நாட்டிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவார் என்பது தொழிற் கட்சியினரதும் பொதுவுடமைவாதிகளினதும் எதிர்பார்ப்பு.

மாறாக, கட்சியையும் நாட்டையும் அதலபாதளத்தில் வீழ்த்திவிடும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக, மறு தரப்பு குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளன.

ஆட்சியிலிருக்கும் டேவிட் கமரோன் தலைமையிலான பழமைவாத கொன்சர்வேட்டிவ் கட்சியின் போக்கில்கூட மாறுதல்கள் ஏற்பட ஜெரெமி கோபின் காரணமாகியிருப்பது, அவதானத்துக்குரிய மாற்றத்துக்கான குறியீடு.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் மாநாட்டில் டேவிட் கமரோன் தொழிற் கட்சியின் தலைவர் ஜெரெமி கோபினைத் தனிப்பட்டமுறையில் நேரடியாக தாக்கி, கண்டித்து உரை நிகழ்த்தியதும், தொழிற் கட்சி புதிய உத்வேகம் பெற்றிருப்பதனால், கமரோன் நிதானமிழந்து தம்மை தாக்குவதாக, ஜெரெமி கோபின் பதிலடி கொடுத்திருப்பதும், பிரிட்டனின் அரசியல் முரண்பாடு கொதிநிலைக்கு செல்வதற்கான தெளிவான அடையாளமாகும்.

உலகின் அதி உச்ச பயங்கரவாத நடவடிக்கையாக கருதப்படும் நியூயோர்க் நகர இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பழிவாங்கலாக, ஆப்கானிஸ்தான்மீதும், ஈராக்மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்தமை; அல்-கைடா தலைவர் ஒசாமா பின் லாடன் கொல்லப்பட்டதைத் துயரமான நிகழ்வு என்றும், அவரை நீதி விசாரணைக்கு உள்படுத்தியிருக்கவேண்டும் என்று கருத்து வெளியிட்டமைபோன்ற அனைத்தும், இதுநாள்வரை ஜெரெமி கோபினை வெளிப்படையாக பேசும் தொழிற் கட்சியின் பின் வரிசைப் புரட்சியாளர் என்று அடையாளப்படுத்தியிருந்தன.

**இதயத்திலிருந்து பேசும் அரசியல்வாதி, யதார்த்தவாதி என்பதில், எதிரிகளுக்கும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. ஆனால், உண்மை, சத்தியம், நேர்மை, வெளிப்படைத்தன்மை ஆகிய இயல்புகளோடு, ஆளுமைகொண்ட அரசியல் தலைமைத்துவத்தையும் நிலைநிறுத்திக்கொள்ள ஜெரெமி கோபினால் முடியுமா? அவ்வாறு முடிந்தால், பொதுவுடமையின் தந்தை கார்ல் மாரக்ஸின் மறு அவதாரமாக ஜெரெமி கோபினை வரலாறு பதிவுசெய்துதான் ஆகவேண்டும்**

**ஸ்ரீதரன்**



விரிவாக கூறுவதெனின், 2011ஆம் ஆண்டு ஈரானிய தொலைக்காட்சிக்கு அவர் வழங்கியிருந்த பொறிபறக்கும் கருத்துக்கள்கொண்ட செவ்வி, பிரிட்டனின் வலதுதள அரசியல்வாதிகளுக்கும், மேற்குலகுக்கும் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது.

சச்சரவை ஏற்படுத்தியிருந்த இந்த செவ்வியில், ஒசாமா பின் லாடனின் மரணம் ஒரு துயரம் என்று வர்ணித்திருந்ததுடன், அவரைக் கைதுசெய்து நீதி விசாணைக்கு உள்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்காது கொலை செய்தமை தவறு என்றும் ஜெரெமி கோபின் சாடியிருந்தார்.

சம்பவங்கள் அனைத்தையும், துயரங்களின்மேல் தொடரும் துயரம் என்றும் கூறிய ஜெரெமி கோபின், இரட்டைக் கோபுரங்கள்மீதான தாக்குதல் துயரமானது; ஆப்கானிஸ்தான்மீதான தாக்குதல் துயரமானது; ஈராக்மீதான தாக்குதலும் துயரமானது என்றும், அதனால், பல லட்சக்கணக்கான மக்கள் உலகில் மரணமுற்றதாகவும் கண்டித்தார்.

2011இல், தொழிற் கட்சியின் பின்வரிசையிலிருந்து எழுந்திருந்த இந்த புரட்சிக் குரல், அரசியல் அரங்கில் சிறு சலசலப்பை ஏற்படுத்தி, அடங்கிப்போயிருந்தது. தற்போது, அதே ஜெரெமி கோபினின் குரல், உரத்த தொனியில் புரட்சிக்குரலாக ஒலிக்கத் தொடங்கியிருப்பது மட்டுமன்றி, பிரதான கட்சியின் குரலாகவும், நாட்டின் எதிர்க்கட்சியின் குரலாகவும் எதிரொலிப்பதுதான் இன்று வலதுசாரி சக்திகள் நிதானமிழப்பதற்கு காரணமாகியிருக்கிறது.

உலக பயங்கரவாதியான ஒசாமா பின் லாடனின் மரணம் ஒரு துயரம் என்று வர்ணித்த ஜெரெமி கோபின் என்ற மனிதன் பிரிட்டனுக்கு ஆபத்தானவர் என்றும், பயங்கரவாதிகள் மீது இரக்கம் காண்பித்து, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய, பிரிட்டன் காலம்காலமாக வெறுக்கும் கொள்கைகளைக்கொண்டவர் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன் தற்போது கிளர்ந்தெழுகிறார்.

வெறுப்பான கொள்கைகளைக்கொண்ட ஜெரெமி கோபின், எமது அருமையான நாட்டைச் சீரழிக்க முற்படுவதை அநுமதிக்கமுடியாது என்று டேவிட் கமரோன் கொதித்தெழுந்து, வார்த்தைத் தாக்குதல் நடத்துவதையும், அவரது கூற்றுக்கு எதிராக தொழிற் கட்சி போர்க்கொடி தூக்கி, வன்முறையில் இறங்கியிருப்பதையும் பிரிட்டிஷ் அரசியல் களத்தின் எதிர்கால மோதல்களுக்கான முன்னோட்டமாக கொள்ளமுடியும்.

சமத்துவவாதியாக தன்னை அடையாளப்படுத்தி, பிரதான கட்சியின் தலைமைப் பொறுப்பைக் கையெலெடுத்திருக்கும் ஜெரெமி கோபினின் கொள்கையும் நிலைப்பாடும் அவரது அரசியல் பிரவேசத்தின்போதிருந்ததுபோன்று



**நாட்டின் சமூகநல திட்டங்களுக்கு அப்பால், அணு ஆயுத உற்பத்திக்கு எதிராகவும் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜெரெமி கோபினின் பல்வேறு கொள்கைகள் பிரிட்டனின் பாரம்பரியத்துக்கும் அடையாளத்துக்கும் முற்றிலும் மாறுபட்டவை**



புரட்சிகரமானதாகவே தற்போதும் தொடர்ந்துவருகிறது. இதுபோன்றே, கடந்தகால மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு, நாளைய உலகத்தை கார்ல் மார்க்ஸ் எதிர்வு கூறியபோது, அவை முதலாளித்துவத்துக்கு கசக்கவேசெய்தன.

உழவு நிலத்தையும், உற்பத்திக்கு அவசியமான கருவிகளையும், உழைக்கும் மக்கள் தமக்கு சொந்தமாக்கிக்கொள்வதற்கான நியாயத்தை கார்ல் மார்க்ஸ் உணர்த்தியபோது, கார்ல் மார்க்ஸ் என்ற தனி மனிதனுக்கு எதிராக உலகம் ஒன்றிணைந்து, திரண்டெழுந்தது. கார்ல் மார்க்ஸ், ஜனநாயகத்துக்கும் வளமான எதிர்காலத்துக்கும் ஆபத்தானவர் என்று உலக மக்கள் மத்தியில் கற்பிக்கப்பட்டார்; அடையாளமிடப்பட்டார்.

கார்ல் மார்க்சின் தத்துவங்களும் பொருளாதார கொள்கைகளும் உலகின் சில கோணங்களில் வெற்றியடைந்து, முதலாளித்துவ அணிக்கு பெரும் சவாலாக விளங்குகின்ற போதிலும், அவரது போதனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத மேற்குலகில், அதுபோன்றே ஜெரெமி கோபினின் தெரிவும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

மக்கள் நலன் சார்ந்த அறிவிப்புக்களை தற்போது வெளியிடும் பிரித்தானிய தொழிற் கட்சியை, முற்றிலும் புதிய திசையை நோக்கி செலுத்தத் தொடங்கியிருக்கும் ஜெரெமி கோபின், கீழ்நிலைத் தொண்டராக அரசியலில் இணைந்துகொண்டார்.

*1974ஆம்* ஆண்டுமுதல், நகர சபை உறுப்பினராகவும், தொழிற் கட்சியின் இஸ்லிங்டன் தொகுதிக்கான பணிமனையின் செயலாளராகவும் பணியாற்றிவந்த இவரது பாராளுமன்ற பிரவேசம் 1983இல் நிகழ்ந்தது.

இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் போட்டியிட்டு முதல் தடவையாக வெற்றிபெற்றபோதே மக்களின் அபிமானத்தை வென்ற சமுதாய தொண்டனாகவும், சமத்துவவாதியாகவும் அங்கீகாரம்பெற்றுக்கொண்டார். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ளும் செலவினங்களில் காணப்படும் குளறுபடிகளைக் கண்டறிய முற்பட்டபோது,




அனைத்து 650 நாடாளுமன்ற உறுப்பினர்களிலும் மிகவும் குறைவான தொகையை செலவுசெய்திருந்தவராக ஜெரெமி கோபின் அறியப்பட்டார்.

இதற்கும் அவரது பதில், பாராளுமன்ற உறுப்பினர்களின் செலவுக்கு பயன்படுத்தப்படும் பணம் மக்களின் பணம், அதனைச் செலவுசெய்வதில் மிகுந்த அவதானம் தேவை என்பதாகும்.

இவைபோன்ற பல காரணிகளே, தொடர்ந்து எட்டுத் தடவைகள் தொகுதியையும் தக்கவைத்து, கட்சியின் தலைமையையும், நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் என்ற நிலையையும் எட்டிப்பிடிக்க அவருக்கு உதவியிருக்கிறது. கட்சியின் கடும்போக்கு இடதுசாரியாக, பிரிட்டனில் வறுமை நீக்கப்படவேண்டும்; சமூகத்தில் நிலவும் சமத்துவமற்ற நிலை அகற்றப்படவேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கியதோடு, மனித உரிமைகளுக்கான செயல்பாடுகளிலும் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

மனிதநேய பணிகளில் எப்போதும் காணப்பட்ட ஜெரெமி கோபின், தனது வாழ்க்கை முறையையும் வெகு சாதாரணமானதாக்கியே வாழ்ந்தார். அதனால், அவரது சொல்லுக்கும் செயலுக்குமிடையே இடைவெளியை அவதானிக்க எவராலும் இயலவில்லை.

கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த தொழிற் கட்சியின் புதிய தலைமைக்கான வெற்றிடம் ஏற்பட்டபோது, ஜெரெமி கோபின் அதற்கு போட்டியிடப்போவதாக அறிவித்து, கட்சியின் அனைத்து மட்டங்களிலும் சலசலப்பை ஏற்படுத்தினார். உண்மையான கட்சித் தொண்டனாக, விசுவாசமான அரசியல்வாதியாக, அர்ப்பணிப்புடனான சமூக காவலனாக வளர்ச்சிகண்டிருந்த ஜெரெமி கோபினுக்கு பிரிட்டனின் பொருளாதாரம்குறித்த அவரது கொள்கை நிலைப்பாடுகளே கட்சியின் தலைமையைநோக்கிய நகர்வுக்கு பெரும் சவாலாக அமைந்தன.

வலதுசாரி பொருளாதாரக் கொள்கைகளை நிறையவே உள்வாங்கி ஆட்சி புரிந்த ரோனி பிளேயரைத் தொடர்ந்து தொழிற் கட்சியின் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்த தலைசிறந்த பொருளாதார நிபுணரான முன்னாள் பிரதமர் கோர்டன் பிரவுணின் தலைமை தோல்வியைத் தழுவுவதற்கு, தவறான பொருளாதாரக் கொள்கையும் ஒரு காரணமாயிருந்த நிலையில், தொழிற் கட்சியை அதிகாரத்தில் அமர்த்துவதற்கு தீவிர இடதுசாரி கொள்கைகளோடும், அணுகுமுறைகளோடும் எடுத்துச்செல்வதென்பது இலகுவானதல்ல. இருந்தும், ஜெரெமி கோபின் அதற்கும் வியூகம் அமைத்தார்.

தாராளவாதத்துக்கும் நவீன தாராளவாதத்துக்குமிடையே அகப்பட்டு, கொள்கை முரண்பாடுகளால் குழம்பிப் போயிருந்த தொழிற் கட்சிக்கு சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கவேண்டிய தேவை இருந்ததை ஜெரெமி கோபின் உணர்ந்திருந்தார். இதற்கான நகர்வுகள் தொழிற் கட்சியின் தலைமைக்கான தேர்தலுக்கு முன்னரேயே மேற்கொள்ளப்பட்டன.

பிரிட்டனின் மற்றுமொரு புகழ்பெற்ற பொருளியலாளர் றிச்சர்ட் மேர்பி எழுதிய ஜெரெமி கோபினின் இடதுசார்பு கொள்கைளோடு, அவர் விரும்பும் ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை உருவாக்க பிரிட்டனின் பொருளாதாரத்தை எப்படி அணுகமுடியும் என்பது குறித்த ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டன.

'கோபினின் பொருளாதாரம்' (*Corbyenomics*) என்று பெயரிட்டு அழைக்குமளவுக்கு, கனதியான செறிவோடு ஜெரெமி கோபினின் பொருளாதாரம் தொடர்பான ஆய்வுகள் காணப்படுகின்றன.

இல்லாமை இல்லாத சமூகத்தை உருவாக்கவேண்டும் என்ற கனவோடு செயல்படும் ஜெரெமி கோபினின் பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைத்து, மக்கள் மன்றத்துக்கு கொண்டுசென்றதில் றிச்சர்ட் மேர்பியின் அணுகுமுறையும், ஆளுமைகொண்ட எழுத்தும் ஜெரெமி கோபினுக்கு உந்துகோலாக அமைந்தன. பிரிட்டனின் மக்கள் நலன் சார்ந்த செயல்பாட்டாளர் என்பதுடன், சிறந்த பொருளாதார நிபுணர் என்ற அங்கீகாரம்கொண்ட றிச்சர்ட் மேர்பியின் பங்களிப்பும் ஜெரெமி கோபினின் தலைமை நோக்கிய பயணத்தின்போதான மாற்றீடு இல்லாத ஊக்கசக்தி என்றுகூட கூறலாம்.

எனவேதான், தொழிற் கட்சியை நெறிப்படுத்துவதில் முக்



**சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையை பிரிட்டனில் ஏற்படுத்தவேண்டும் என்ற புரட்சிகர சிந்தனையோடு தனது எதிர்கால திட்டங்களை அறிவித்த ஜெரெமி கோபின், பெரும் செல்வந்தர்கள், பெரும் நிறுவனங்களுக்கு கூடுதல் வரிவிதிக்கவேண்டும் என்கிறார்**

கிய சக்திகளாக செயல்பட்ட முன்னாள் பிரதமர்களான ரோனி பிளேயர், கோர்டன் பிரவுண் மற்றும் கட்சியின் முன்னாள் தலைவர்கள் டேவிட் மிலிபான்ட், நீல் கின்னக் போன்றவர்களின் எதிர்மறைக் கருத்துக்களையெல்லாம் புறந்தள்ளி, மிகப் பெரும்பான்மை ஆதரவுடன் ஜெரெமி கோபின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மக்களுடைய அனைத்து நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பதற்கு தொழிற் கட்சியை ஆட்சியில் அமர்த்த பலமான தலைமைத்துவம் அவசியம் என்று கூறி போட்டியில் நுழைந்த ஜெரெமி கோபினை எதிர்த்து, முன்னாள் நிழல் அமைச்சர்களான யுவெற்றி கூப்பர், அன்டி பேர்ணம், லிஸ் கென்டல் ஆகியோர் போட்டியிட்டனர். தொழிற் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடப்போவதாக ஜெரெமி கோபின் அறிவித்த வேளையில், அவருக்கு போதிய ஆதரவு கிட்டுமா என்ற சந்தேகமே நிலவியது.

எனினும், நிரந்தர உறுப்பினர்களுடைய ஆதரவை முதலில் பெற்றுக்கொண்ட அவருக்கு, பின்னர் தொழிற்சங்கங்களுடைய ஆதரவும் கிட்ட, முதல் சுற்றிலேயே 59.5 வீதமான கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப்பெற்று, பிரிட்டிஷ் அரசியல் கட்சி ஒன்றின் அதிகூடிய உறுப்பினர்களான 2 லட்சத்து 50 ஆயிரம் உறுப்பினர்களின் ஆதரவோடு தெரிவான தலைவர் என்ற பெருமையை சேர்த்துக்கொண்டார். அண்மைக்காலத்தில், தொழிற்கட்சியின் தலைவராக கூடுதலான ஆதரவுடன் தெரிவுசெய்யப்பட்ட ரோனி பிளேயருக்கு கிடைத்திருந்த ஆதரவைவிடவும் இது அதிகமானதாகும்.

தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, முரண்பட்டிருந்த கட்சி உறுப்பினரகளையும் தனக்கு ஆதரவானவர்களையும் எதிரானவர்களையும் ஒன்றிணைத்து, எதிர்வரும் தேர்தலுக்கு தயாராக்கவேண்டிய பொறுப்பு பெரும் சவாலாக இருந்தது. தனது கொள்கையிலிருந்து பிறளாது, அனைவரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஆற்றல்கொண்ட அணியை ஜெரெமி கோபின் அமைத்திருப்பதாக கூறப்படுகின்றபோதிலும், உள் நெருக்கடி நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது.

ஜெரெமி கோபின் தனது இடதுசாரிக் கொள்கைகளோடு, ஒருமித்த எண்ணப்போக்கைக்கொண்டிருக்கும் அவரது நீண்டகால அரசியல் தோழரும், கட்சித்தலைவருக்கான தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயல்பட்டவருமான ஜோன் மக்டொனெல் என்பவரை நிழல் நிதி அமைச்சராக நியமித்தார். கட்சியின் தலைமைப் பதவிக்கு அவரை எதிர்த்து போட்டியிட்ட அன்டி பேர்ணம் உள்பட, கட்சியின் பின்வரிசையினர் பலருக்கு நிழல் அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டது.

மார்க்சியவாதியாகவே எப்போதும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டு, நேர்மைத் திறனுடனும், நெஞ்சுரத்தோடும், எடுத்த கொள்கையில் உறுதியோடும் செயல்படும் ஜெரெமி கோபின், தொழிற் கட்சியின் தலைவராக தெரிவானதன் பின்னர் நடைபெற்ற கட்சி மாநாடானது, ஜெரெமி கோபினின் தெரிவு சொன்ன சேதியைவிட, இன்னும் கூடுதலான செய்தியை நாட்டுக்கும் உலகுக்கும் அறிவித்தது.

'நேரடியான பேச்சு; நேர்மையான அரசியல்' என்ற முரசத்தோடு அங்கு உரை நிகழ்த்திய ஜெரெமி கோபின், தனது பொருளாதார கொள்கைகளை மீண்டும் ஒரு தடவை முன்மொழிந்தார்.

இந் நிகழ்வில் உரை நிகழ்த்திய நிதித்துறைச் செயலாளர் ஜோன் மக்டொனெல், கார்ல் மார்க்ஸை இனியும் நிராகரிக்கமுடியாது என்ற கருத்தைப் பதிவுசெய்தார். மார்க்சின் தத்துவம் பொதுவான சிந்தனைப்போக்காக வளர்ந்துவிட்டது என்றும் சுட்டிக்காட்டிய அவர், 130 வருடங்களின் பின்னரும் கார்ல் மார்க்ஸ் கூறியவை அனைத்தும் நிதர்சனமாகி வருவதாகவும் தெரிவித்தார்.

சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையை பிரிட்டனில் ஏற்படுத்தவேண்டும் என்ற புரட்சிகர சிந்தனையோடு தனது எதிர்கால திட்டங்களை அறிவித்த ஜெரெமி கோபின், பெரும் செல்வந்தர்கள், பெரும் நிறுவனங்களுக்கு கூடுதல் வரிவிதிக்கவேண்டும் என்கிறார்.

பெரும் நிறுவனங்களின் தலைமைகளால் மட்டும் கட்டுப்படுத்தப்படும் இலாபமீட்டும் அதிகாரத்தையும், இங்கிலாந்தின் மத்திய வங்கியின் பொருளாதார திட்டமிடல் அதிகாரத்தையும் மீளப்பெறுவது; வரி செலுத்தாது ஏமாற்றுவ

தைத் தடுப்பது; வசூலிக்கப்படாத வரிகளை அறவிடுவது என்பவற்றின்மூலமாகவும் அரச வருமானத்தை பெருக்கமுடியும் என்றும் கூறுகிறார்.

இவ்வாறான வரிப் பாக்கியை அறவிடுவதற்கு அரச வருமான திணைக்களத்துக்கு ஒரு பில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்கள் தேவைப்படும் என்றும், பதிலாக 8 பில்லியன்களை வசூலித்து மக்கள் நலனுக்கு பயன்படுத்தமுடியும் என்றும் அவரது திட்டம் விளக்குகிறது. ரயில் சேவை, மின்சக்தி மற்றும் எரிவாயு விநியோகம் உள்பட, சக்தி வழங்கும் தனியார் சேவைகளைத் தேசியமயமாக்குவதுபோன்ற திட்டங்களும் முன்மொழியப்பட்டன.

மத்தியதர வர்க்கம் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதற்கு அடிப்படை ஊதியம் 10 பவுண்களாகவேண்டும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

மருத்துவ உதவி வழங்கும் தேசிய சுகாதார சேவை போன்ற தேசிய கல்வி சேவை அமைக்கப்பட்டு, இலவச கல்வி வழங்கப்படும் என்று கூறும் ஜெரெமி கோபின், முன்னைய தலைவரான ரோனி பிளேயர் தொடக்கிவைத்த கட்டணக் கல்விமுறை நீக்கப்படவேண்டும் என்பதிலும், கல்விக்கான உதவித் தொகையை வழங்குவதை மீண்டும் நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் பெருவிருப்பம் கொண்டுள்ளார்.

நாட்டின் சமூகநல திட்டங்களுக்கு அப்பால், அணு ஆயுத உற்பத்திக்கு எதிராகவும் கடுமையான நிலைப்பாட்டைக்கொண்டுள்ள ஜெரெமி கோபினின் பல்வேறு கொள்கைகள் பிரிட்டனின் பாரம்பரியத்துக்கும் அடையாளத்துக்கும் முற்றிலும் மாறுபட்டவை. பயங்கரவாத அமைப்பாக பட்டியிலிடப்பட்டிருக்கும் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாபோன்ற ஆயுத அமைப்புகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்று வலியுறுத்தும் ஜெரெமி கோபின், சிரியாமீதான தாக்குதலை, தொடர்ந்து கண்டித்தவண்ணம் உள்ளார்.

மேற்குலகுக்கு சவாலாக விளங்கும் இஸ்லாமிய அரசான ஐ. எஸ். அமைப்பு தொடர்பாகவும் ஜெரெமி கோபினின் நிலைப்பாடு மாறுபட்டது. சிரியாவில் ஐ. எஸ். அமைப்புக்கு எதிராக குண்டுத்தாக்குதல் நடத்துவதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரேயே தாம் எதிர்த்ததாகவும், இந்த நடவடிக்கை மக்களை அழிவுக்கு இட்டுச்செல்லும் என்றும், கட்டுப்படுத்தமுடியாத அளவில் அகதிகள் வெளியேற்றத்துக்கு காரணமாகும் என்றும் எச்சரித்தாகவும், அவை இன்று கண்கூடாக நிகழ்வதாகவும் சுட்டிக்காட்டுகிறார்.

ஐ. எஸ். அமைப்பை முறியடிப்பதற்கு பொருளாதார தடையே உகந்த வழி என்றும், அவர்களது தோழமைச் சக்திகளிடமிருந்து நிதியும் ஆயுத தளபாடங்களும் சென்றடைவதை தடுப்பது அவசியம் என்றும் ஜெரெமி கோபின் வலியுறுத்துகிறார்.

மக்கள்நல திட்டங்களை முன்னிறுத்துவதுடன், பல்வேறு மாறுபட்ட கொள்கைகளை கையிலெடுத்திருக்கும் ஜெரெமி கோபின், பிரிட்டனின் பாரம்பரியம்மிக்க முடியாட்சிக்கும் எதிரானவர் என்பதனாலும் சச்சரவுக்குரியவராக, முடியாட்சிக்கு விசுவாசமான பிரித்தானிய மக்கள் கூட்டத்தால் நோக்கப்படுகிறார்.

எனினும், ஏனைய கொள்கைகளில் உறுதியுடன் காணப்படும் ஜெரெமி கோபின், முடியாட்சி விவகாரத்தில் மென்மைப்போக்கை கடைப்பிடிக்கத்தொடங்கியிருப்பது அவரது அபிமானிகள் மத்தியில் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து விலகி, அது தற்போது முன்னுரிமை கொண்ட விவகாரம் அல்ல என்று பின்வாங்கியதும், முடியாட்சிக்கான ஆலோசனை சபையின் உறுப்பினராக அரச மாளிகையில் நடைபெறும் நிகழ்வில் பதவிப்பிரமாணம் செய்துகொள்ள சம்மதித்திருப்பதும், அதிதீவிர கொள்கைப்பற்றாளராக அவரை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் அதிருப்தியை தோற்றுவித்திருக்கிறது என்பதையும் மறுத்துவிடமுடியாது.

பிரிட்டிஷ் அரசியல்வாதிகள்போல, இயல்பான கனவான் உடைகள் அணியாது, திறந்த கழுத்துடனும், வெறும் மேலங்கியுடனும் பாராளுமன்றத்துக்கு செல்வதை வழக்கமாகக்கொண்டிருந்த ஜெரெமி கோபினிடம் இது தொடர்பாக பிபிசி நிகழ்ச்சியொன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, தாம் ஆடை அணிவகுப்பு நிகழ்வுக்கோ அல்லது கனவான்களின் விடுதிக்கோ செல்லவில்லை என்றும், மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் சபைக்கே செல்வதாகவும் வெளிப்படையாக பதில் கூறி, சாமான்யர்களின் மனங்களை வென்றிருந்த ஜெரெமி கோபினால் அரச மாளிகை வழக்கப்படி, மகாராணியை முழந்தாழிட்டு வணங்கி, கைகளை முத்தமிட்டு, அவருக்கு எதிரான அனைத்து அந்நிய மன்னர்களிடமிருந்தும், சக்திகளிடமிருந்தும் அவரைப் பாதுகாத்துக் கொள்வதாக, இதயசுத்தியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள முடியுமா, என்ற சந்தேகங்கள் எழுகின்றன.

தேசிய கீதம் பாடாது, மௌனமாக நின்றவாறு அரச நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததும், இனிவரும் அரச நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்வதாக தெரிவித்திருந்தபோதிலும் தேசிய கீதம் பாடுவது குறித்து எந்த கருத்தும் வெளியிடாதிருந்ததும், ஏற்கனவே கேள்விகளை எழுப்பியிருந்தன.

இவ்வாறான சச்சரவுகளுடனும் முரண்பாடுகளுடனும், புரட்சிகர சிந்தனைகளுடனும் அரசியல் பயணத்தை தொடரும் ஜெரெமி கோபினோடு, கண்டனங்களும் மாறுபட்ட விமரசனங்களும் கூடவே பயணிக்கின்றன.

கொன்சர்வேட்டிவ் கட்சியே தொழிலாளர்களின் உண்மையான கட்சி என்ற புதிய முழக்கத்தோடு வேகமாக செயல்படும் டேவிட் கமரோனின் தந்திரோபாய நகர்வுகளுக்கு ஈடுகொடுத்து, அடுத்த தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய ஜெரெமி கோபின் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மிகவும் கனதியானவை.

முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டினாலும், பெரும் தொழில் நிறுவனங்கள்மீதான பாரிய வரிவிதிப்பு திட்டங்களாலும் கடும் வெறுப்புக்குள்ளாகியிருக்கும் ஜெரெமி கோபினை அரசியலிலிருந்து முற்றாக ஒதுக்கிவிடுவதற்கான திரைமறைவு நகர்வுகள் ஆரம்பித்திருப்பதாகவும் தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

ஜெரெமி கோபின் இதயத்தில் இருந்து பேசும் அரசியல்வாதி; யதார்த்தவாதி என்பதில், எதிரிகளுக்கும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. ஆனால், உண்மை, சத்தியம், நேர்மை, வெளிப்படைத்தன்மை ஆகிய இயல்புகளோடு, ஆளுமைகொண்ட அரசியல் தலைமைத்துவத்தையும் நிலைநிறுத்திக்கொள்ள ஜெரெமி கோபினால் முடியுமா?

அவ்வாறு முடிந்தால், பொதுவுடமையின் தந்தை கார்ல் மாரக்ஸின் மறு அவதாரமாக ஜெரெமி கோபினை வரலாறு பதிவுசெய்துதான் ஆகவேண்டும். ■

ஜெரெமி கோபின்

# கொள்கை; வாழ்வு



ஜெரெமி பேர்னாட் கோபின் என்ற இயற்பெயர் கொண்ட இவர், மின்னியல் பொறியிலாளரான டேவிட் பெஞ்சமின், கணித ஆசிரியையான ஜொஸ்லிங் தம்பதிகளின் நான்கு குழந்தைகளில் இளையவராக 1949 மே 26இல் பிறந்தார்.

மேற்கு இங்கிலாந்தின் நியூபோட்டில் ஆரம்ப கல்வியை கற்றார்.

மாணவ பருவத்திலேயே தனிமனித சுதந்திரத்தின் அடிப்படையில், சாரண இயக்கத்தில் இணைந்து கொள்ள மறுத்தார்.

அணு ஆயுத விரிவாக்கத்துக்கு எதிரான அமைப்பில் உறுப்பினராக இணைந்து செயல்பட்டிருந்தார்.

தனியார் பாடசாலைகளை ஆரம்ப காலம்முதல் வெறுத்த ஜெரெமி, 1965இல் ஹரல்ட் வில்ஸன் தலைமையிலான தொழிற் கட்சியில் உறுப்பினராக இணைந்தார்.

ஏனைய அரசியல்வாதிகள்போல பட்டப்படிப்பு எதுவும் பெற்றிராத ஜெரெமி கோபின், உயர்தர பரீட்சையில் மிகவும் சாதாரணமான இரண்டு சித்திகளைப்பெற்று, வகுப்பாசிரியரின் ஏளனத்துக்கு இலக்கானார். வாழ்க்கையில் எதனையும் சாதிப்பதற்கு லாயக்கற்றவர் என்ற அந்த வகுப்பாசிரியரின் வசைமொழியோடு, பாடசாலைக் கல்வியை நிறுத்திவிட்டு தென் அமெரிக்காவின் ஜமேக்கா சென்று, அங்கு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சேவையாற்றினார்.

ஜமேக்காவில் செலவிட்ட இரண்டு ஆண்டு காலத்தில் தாடி வளர்த்து, 'தாடிக்காரன்' என்ற பெயராலும் அழைக்கப்பட்டார். (பிற்காலத்தில், தொடர்ந்து 5 தடவைகள் பாராளுமன்றத்தின் தாடிக்கான விருது பெற்ற சாதனையாளர்.)

நாடு திரும்பிய ஜெரெமி கோபின், சிலகாலம் தமது சொந்த ஊரில் பன்றி வெட்டும் தொழிற்சாலையில் பணியாற்றியிருந்தார்.

பன்றிகள் இறைச்சிக்காக கொல்லப்படும்போது எழுப்பும் ஈனக்குரலால் பாதிக்கப்பட்டு, முற்றிலும் சைவ உணவை உட்கொள்பவரானார்.

தொடர்ந்து, மதுப் பழக்கத்துக்கு எதிரான அமைப்புகளுடனும் இணைந்து செயல்பட்டார்.

சாதாரண மனித இயல்புகளுக்கு முற்றிலும் மாறான பழக்கவழக்கங்களையும் இவர் கொண்டிருக்கிறார்.

ஆடம்பரமான ஆடைகளை அணிவதை எப்போதும் விரும்புவதில்லை.

ஆடைகள் வாங்குவதற்கோ அல்லது வேறு கொள்வனவுகளுக்கோ பெரும் அங்காடிகளுக்கு செல்வதில்லை.

உணவு விடுதிகளில் உணவருந்துவதில்லை.

திரைப்படக் கொட்டைகளுக்கோ, களியாட்ட நிகழ்வுகளுக்கோ செல்வதில்லை.

சொந்தமாக வாகனம்கூட இவரிடம் கிடையாது. கூடுதலாக, சொந்த துவிச்சக்கர வண்டி அல்லது அரச போக்குவரத்து சேவையையே பயன்படுத்துகிறார்.

மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் இவர், அநாவசிய செலவுகள் செய்வதில்லை.

விசித்திரமான இயல்புகளைக்கொண்ட ஜெரெமி கோபினின் மணவாழ்க்கை திருப்திகரமானதாக இருந்திருக்கவில்லை.

இதுவரை மூன்று தடவைகள் மணம்புரிந்துள்ளார்.

முதலில், தொழிற் கட்சியில் இவருடன் இணைந்து பணியாற்றிய ஜேன் போமன் என்பவரை 1974இல் மணமுடித்து, முரண்பாடுகளில் மணம் முறிவடைந்தது.

இரண்டாவது மனைவியான சிலி நாட்டைச்சேர்ந்த வடிவமைப்பாளர் குளோடியா புறொச்சிற்றாவை, 80களில் சந்தித்து மணம்புரிந்தார்.

இவருடனான மணவாழ்வில், மூன்று குழந்தைகளுக்கு ஜெரெமி தந்தையானார். குழந்தைகளை தனியார் பாடசாலையில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்ற மனைவியின் பிடிவாதம் காரணமாக அந்த மணவாழ்வில்



முரண்பாடு தோன்றியது.

தனியார் பாடசாலை அமைப்பை நிராகரிக்கும் தன்னால், தனது குழந்தைகள் அங்கு சேர்க்கப்படுவதை அநுமதிக்க முடியாது என உறுதியாக மறுக்கவும், தனது கணவர் அரசியல்வாதியாக உள்ளாரே தவிர, பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக இல்லை என்று கூறிய இரண்டாவது மனைவியுடனும் மணவாழ்வு முறிந்தது.

மூன்றாவது தடவையாக, மெக்ஸிக்கோ நாட்டைச் சேர்ந்த, கோப்பி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள, தன்னிலும் 20 வயது இளமையான லோரா அல்வறஸ் என்பவரை 2013இல் மண முடித்துள்ளார்.


# கருத்து சுதந்திரத்தை கருவறுக்க முயலும் மோடி அரசு

> 'அனைவருக்கும் வளர்ச்சி', 'நல்ல நாள் வந்துவிட்டது' என்ற கோஷத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய நரேந்திர மோடி, இன்று தனது ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள கருத்துச் சுதந்திரத்தை காவு கேட்டுக்கொண்டிருக்கிறார்

ஆர். மணி

இந்தியாவில் கருத்துச் சுதந்திரத்தை கருவறுப்பதில் நாட்டை ஆளும் நரேந்திர மோடி அரசு கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுவதாகவே தெரிகிறது. தமிழ் செய்திச் சனலான 'சத்தியம்' தொலைக்காட்சியைத் தொடர்ந்து, குஜராத்தி மொழியின் செய்திச் சனல் 'ஜிஎஸ்டிவி'க்கும் விளக்கும் கேட்கும் நோட்டீஸை (ஷோகாஸ் நோட்டிஸ்) மத்திய தகவல், ஒளி பரப்பு அமைச்சகம் அனுப்பியுள்ளது. காரணம், வழக்கமானதுதான்; பிரதமர் நரேந்திர மோடியை விமர்சனம் செய்தார்கள் என்பதே. இதிலும், சத்தியம் தொலைக்காட்சியைப்போலவே மோடியை பெயர் குறிப்பிடாமல்தான் விமர்சனம் இருந்தது. ஆனாலும், நோட்டீஸ் வந்துவிட்டது.

விஷயம் இதுதான்; ஜிஎஸ்டிவி மோடியின் கனவுத் திட்டமான ஸ்வச்ச பாரத் பற்றி இந்தாண்டு காந்திஜியின் நினைவு தினமான ஜனவரி 30 ஆம் தேதி ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. 'மஹாத்மா காந்தியின் கொலைக்கு யார் காரணம்?' என்ற தலைப்பிலான நிகழ்ச்சி இது. இதில், ஒரு தலைவரைப்பற்றி இப்படி சொல்லுகிறார்கள். 'இந்த தலைவர் ஸ்வச்ச பாரத் அதாவது, தூய்மை இந்தியா என்ற திட்டத்தை துவக்கினார். ஆனால், உண்மையிலேயே இந்த தலைவருக்கு காந்தியத் தத்துவங்களில் நம்பிக்கை இருக்கிறதா அல்லது காந்திஜியின் பெயரை தனக்கு மரியாதை கிடைப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளுகிறாரா? காந்திஜி எப்போதுமே எளிய வாழ்க்கை வாழ்ந்தார். ஆனால், இந்த தலைவர் ஒன்பது லட்சம் ரூபாய் மதிப்பிலான ஆடைகளை அணிகிறார், விலை மதிப்புள்ள கார்களில்தான் வலம் வருகிறார்' என்று பேசப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில், காந்திஜியைக் கொன்ற நாதுராம் கோட்சேயை புகழும் நடவடிக்கைகளையும், கோட்சேக்கு கோவில் கட்டும் முயற்சிகளையும் முறியடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் பேசப்பட்டது. காந்திஜியின் கொள்கைகளை ஆடம்பர ஆடைகளை உடுத்துவதன் மூலமோ அல்லது காற்றில் துடைப்பங் கட்டைகளை சுழற்றுவ



தன்மூலமோ முன்னெடுத்துச் செல்ல முடியாதென்றும் கூறப்பட்டி ருக்கிறது.

இதனை தனது நோட்டீஸில் சுட்டிக் காட்டியுள்ள தகவல், ஒளிபரப்பு அமைச்சகம் 'ஒரு தனி நபரை, அரசியல்வாதியான ஒரு தனி நபரை இந்தச் 'சனல்' கேள்வி கேட்கிறது. மஹாத்மா காந்தியை பல நிகழ்ச்சிகளிலும் இந்த தனிநபர் புகழுகிறார். ஆனால், நாதுராம் கோட்சேயை புகழுபவர்களுக்கு எதிராக எந்த கடினமான நடவடிக்கையையும் இவர் எடுக்கவில்லை என்று பேசப்பட்டுள்ளது. ஒளிபரப்பப்பட்ட இந்த கருத்துக்கள் தனிநபரின் புகழுக்கு மாசு கற்பிப்பவை மட்டுமல்ல, இவை மிகப்பெரிய அளவில் வன்முறைப் போக்கைத் தூண்டிவிடும் தன்மைகொண்டவை. இது, நிச்சயமாக சட்டம், ஒழுங்கை பராமரிக்க உதவாது' என்று தனது 'ஷோ காஸ் நோட்டீஸி'ல் தெரிவித்துள்ளது. இந்த நோட்டீஸுக்கு பெப்ரவரி 2ஆம் தேதி ஜிஎஸ்டிவி பதில் அளித்துவிட்டது. தனது பதிலில், நிகழ்ச்சிகளுக்கான நடத்தை விதிமுறைகளை தாங்கள் எந்தவிதத்திலும் மீறவில்லை என்றும், மாறாக இந்த நோட்டீஸ் அரசியல் சாசனம் தங்களுக்கு வழங்கியுள்ள பேச்சுரிமை மற்றும் கருத்துரிமையை மதிக்கத் தவறுகிறதென்றும் கூறியிருக்கிறது.

தற்போது, விவகாரம் தகவல், ஒளிபரப்பு அமைச்சகத்திலேயே அடங்கிக் கிடக்கிறது. அடுத்த நடவடிக்கையை அமைச்சகம் இன்னமும் தொடங்கவில்லை. இதற்கு அடுத்த நடவடிக்கையாக கருதப்படுவது 'வார்னிங்' அதாவது, எச்சரிக்கை விடுப்பது. தொடர்ந்து 'எச்சரிக்கை'கள் விடுக்கப்பட்டால், குறிப்பிட்ட தொலைக்காட்சிகளின் லைசன்ஸ் ஒரு கட்டத்தில் ரத்துசெய்யப்படும் வாய்ப்பும் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இதைவிட மோசமான நிலைதான் தமிழ் செய்தி சனலான 'சத்தியம்' தொலைக்காட்சிக்கு நடந்துகொண்டிருக்கிறது. 2014ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் தேதி சத்தியம் தொலைக்காட்சி இரண்டு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. இதில் ஒரு நிகழ்ச்சி, 'உங்கள் ஆசீர்வாத நேரம்'. இதில், ஒரு கிறிஸ்தவ மதப் பிரச்சாரகர் இவ்வாறு பிரச்சாரம் செய்கிறார்: 'இந்த பொல்லாத மனுஷரை இந்த உலகத்திலிருந்தே தூக்கு அப்பா. இந்த பொல்லாத மனுஷரை அவன் பிள்ளைகளோடே தூக்கு அப்பா'. இதற்கு ஷோ காஸ் நோட்டீஸ் அனுப்பிய ஈுபி அமைச்சகம், அதில், 'இது ஒரு குறிப்பிட்ட அரசியல் தலைவரை குறிவைப்பதுபோல இருக்கிறது. இது தொலைக்காட்சி நெறிமுறை விதிகள் 6 (1), (சி)(டி)(ஈ), (ஜெ) ஆகியவைகளுக்கு எதிரானதாகும்' என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலும் ஒளிபரப்பப்பட்ட இந்த கருத்துக்கள் தனிநபரின் புகழுக்கு மாசு கற்பிப்பவை மட்டுமல்ல, இவை மிகப்பெரிய அளவில் வன்முறைப் போக்கைத் தூண்டிவிடும் தன்மை கொண்டவை. இது, நிச்சயமாக சட்டம், ஒழுங்கை பராமரிக்க உதவாது' என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுதவிர, 'பார்த்ததும், படித்ததும்' என்ற மற்றொரு நிகழ்ச்சிக்கும் ஷோ காஸ் நோட்டீஸ் வந்துள்ளது. இந்த நிகழ்ச்சியில், ஒரு சிரேஷ்ட பத்திரிகையாளர் மோடியை விமர்சிப்ப


தாக தகவல், ஒளிபரப்பு அமைச்சகம் குற்றஞ்சாட்டுகிறது. 'மோடி தனது கூட்டங்களில் மிகப்பெரிய அளவில் ஆட்களைத் திரட்டுகிறார். தனது உரைகள்மூலம் உண்மையல்லாதவற்றை உண்மையென்று மீடியாக்களை 'இன்புளுவன்ஸ்'செய்து, செய்திகளை வெளிவரச்செய்கிறார் என்றும் அந்த பத்திரிகையாளர் சொல்லுகிறார். மேலும், தனது பேச்சுத் திறனால் தவறான தனது தகவல்களை மக்கள் நம்பும்படி பிரசாரம் செய்கிறார்' என்று அந்த சிரேஷ்ட பத்திரிகையாளர் சொல்லுகிறார். இவை, ஆதாரமின்றி ஒரு மனிதரின் புகழுக்கு களங்கம் விளைவிப்பவை. இது, பிரதமரின் புகழுக்கும், பெயருக்கும் களங்கம் விளைவிப்பதாகும், பிரதமர் பதவியின் மாண்புகளுக்கும் களங்கம் கற்பிப்பதாகும்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.


இந்த நோட்டீஸுக்கு 2014ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி சத்தியம் தொலைக்காட்சி புதுதில்லியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழு முன்பாக ஆஜராகி விளக்கம் அளித்தது. அதில், முதல் நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டது பிரதமர் அல்லவென்றும், இரண்டாவது நிகழ்ச்சியில் மோடியைப்பற்றி சொல்லப்பட்டது உண்மையில் அவதூறு அல்லவென்றும், மாறாக அது மோடியின் திறமைகளுக்கான நற்சான்றிதழ்தானென்றும் விளக்கம் அளித்தது. ஆனால், இந்த விளக்கங்களை ஏற்றுக் கொள்ள அமைச்சகம் மறுத்துவிட்டது. மேலும், தகவல், ஒளிபரப்பு அமைச்சகம் பிரதமர் அலுவலகத்துக்கும், மீடியாக்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தி, மத உணர்வுகளை தூண்ட முயற்சிப்பதாகவும் கூறியது. ஆனால், இவை எதுவும் அமைச்சகத்தை சமாதானப்படுத்த உதவவில்லை. நிகழ்ச்சியில் குறிப்பிட்டது பிரதமரைத்தான் என்று முடிவுகட்டிய அமைச்சகம், 'எச்சரிக்கை'யை சத்தியம் தொலைக்காட்சிக்கு அனுப்பியிருக்கிறது.

விவகாரம் இதனுடன் முடிந்ததா என்றால் அதுதான் இல்லை. இந்த 'எச்சரிக்கை' 2015ஆம் ஆண்டு மே 12ஆம் தேதி விடுக்கப்பட்டது அதற்கடுத்த நாளிலிருந்தே 'நீங்கள் இந்தந்த விதிகளை மீறி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று தொடர்ச்சியாக தாக்கீதுகள் வர ஆரம்பித்துவிட்டன. 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் தேதி வந்த நோட்டீஸில் மூன்று சம்பவங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. மே 13ஆம் தேதி அசாமில் ஒரு குழந்தைக்கு எதிரான குற்றத்தை முறையற்று ஒளிபரப்பியது; மத்திய பிரதேசத்தில் ஒரு மருத்துவமனையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டை சிசிடிவி கமெரா ஒளிப்பதிவுகளுடன் ஒளிபரப்பியது; மூன்றாவது, தெலுங்கானாவில் பா. ஜ. க. நிகழ்ச்சியில் ஒரு மனிதர் தனக்குத் தானே தீ வைத்துக்கொண்டதுபோன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது விதிகளுக்கு முரணானது என்று இந்த ஷோ காஸ் நோட்டிஸில் கூறப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த காட்சிகள் அனைத்தும் இந்தியாவின் நூற்றுக்கணக்கான சனல்களில் ஒளிபரப்பப்பட்டவைதான். அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் அனுப்பாமல், சத்தியம் தொலைக்காட்சிக்கு மட்டும் அனுப்பப்பட்டமை, அந்த தொலைக்காட்சியின் கிறிஸ்தவ மத பிரச்சார நடவடிக்கை மற்றும் மோடிக்கு எதிரான விமர்சனங்கள் ஆகியவற்றுக்காக மட்டுமே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்றே பார்க்கப்படுகிறது.

இந்த நோட்டீஸுகள் மற்றும் 'எச்சரிக்கை'யை எதிர்த்தும், அவற்றை ரத்துசெய்ய வலியுறுத்தியும் சத்தியம் தொலைக்காட்சி டில்லி உயர்நீதி மன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளது. ஆனால், இந்த மனு சமீபத்தில் டில்லி உயர்நீதி மன்றத்தில் தனி நீதிபதி முன்பு விசாரணைக்கு வந்தபோது, தகவல், ஒளிபரப்பு அமைச்சகத்தின் ஷோ காஸ் நோட்டிசுகள் மற்றும் 'எச்சரிக்கை'க்கு உடனடியாக தடைவிதிக்க நீதிபதி மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. மூல வழக்கின் விசாரணை தொடர்ந்து நடக்கவிருக்கிறது.

குஜராத் செய்திச் சனல் ஜிஎஸ்டிவி, நீதிமன்றத்தினை நாடி இருக்கிறதா என்று தெரியவில்லை. தொடர்ச்சியாக ஷோ காஸ் நோட்டீஸுகள் மற்றும் 'எச்சரிக்கை'கள் விடுக்கப்படுவது, ஒரு கட்டத்தில் இந்த சனல்களின் ஒளிபரப்பு லைசன்ஸுகளை ரத்து செய்வதில் போய்முடிந்துவிடும் என்பதுதான் கவனிக்கப்படவேண்டிய முக்கிய விஷயம். முன்னைய ஆட்சிக் காலங்களிலும் இதுபோன்று சனல்களுக்கு நோட்டீஸுகள் அனுப்பப்பட்டது உண்டுதான். ஆனால், அப்போதெல்லாம் அதுபற்றிய விவரங்கள் முழுமையாக இணைய தளங்களில் முன்கூட்டியே வெளியிடப்படும். ஆனால், சத்தியம் தொலைக்காட்சி விவகாரத்தில் இதுகுறித்த தகவல்களும் ரகசியமாக வைக்கப்படுவதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கத்தை மேலும், மேலும் கேள்விக் குறியாக்கிக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் குறிவைக்கப்படும் இரண்டாவது சனல் சத்தியம் டிவியாகும். ஏற்கனவே, சன் டிவி வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டுள்ளது. அதில் விவகாரம் வேறு என்றாலும், பா. ஜ. க. வுக்கும், ஆர்எஸ்எஸ்ஸுக்கும் எதிரானவர்களுடன் தொடர்பில் உள்ளவர்களின் தொலைக்காட்சி சனல்கள் மிரட்டப்படுவதும், அவற்றை முடக்க பா. ஜ. க. அரசு எத்தனிப்பதும் தெளிவாகவே தெரிகிறது. 'சப் கா சாத், சப் கா விகாஸ்' அதாவது, அனைவருக்கும் வளர்ச்சி என்ற கோஷத்திலும், 'அச்சே தின்' 'நல்ல நாள் வந்துவிட்டது' என்ற கோஷத்திலும் ஆட்சியைக் கைப்பற்றிய நரேந்திர மோடி, இன்று தனது ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள கருத்துச் சுதந்திரத்தையும், பேச்சு சுதந்திரத்தையும், எழுத்துச் சுதந்திரத்தையும், காவு கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பதுதான் யதார்த்தம். இதனை பாஜக அரசு என்று சொல்லாமல், மோடி அரசு என்று சொல்லுவதற்கு காரணம், சங் பரிவாரத்தினரும் சரி, நரேந்திர மோடியும் சரி இந்த அரசை, பா. ஜ. க. அரசு என்று கூறவில்லை. மாறாக, மோடி அரசு என்றுதான் கூறுகிறார்கள். தனி மனித துதிபாடல் அளவுக்கு மீறிப்போவது ஒரு நாட்டை, அது நாடாளுமன்ற ஜனநாயகம் உள்ள நாடாக இருந்தாலும், எங்கே கொண்டு போய்விடும் என்பதற்கு சத்தியம் மற்றும் ஜிஎஸ்டிவி தொலைக்காட்சிகளுக்கு வந்த நோட்டிஸுகள் விளக்கம் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. ஜனநாயக சக்திகளும், கருத்துச் சுதந்திரத்தை நேசிப்பவர்களும் தற்போது இந்தியாவில் ஒரு கடுமையான நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ■


Kumaran Silks
Since 1955
INDIA'S one and ONLY at panagal park
Panagal Park, T Nagar,
Chennai-17. INDIA.
Ph : 2434 3544/3727/3757
/kumaransilks
Shop online:www.kumaransilksonline.com





# புதிய விடியலை நோக்கி பட்டத்து இளவரசரின் பயணம்

## அடுத்த தேர்தலில் அரசியலுக்கு அப்பால்பட்ட ஓர் ஆளுமையாக தன்னை முன்னிறுத்த ஸ்டாலின் கடுமையாக முயல்கிறார்

**ஆர். மணி**

எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் (தி. மு. க.) தற்போது எல்லா ஆயுதங்களையும் கைக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. திராவிட முன்னேற்ற கழகத்தின் பொருளாளரும், அநேகமாக தி. மு. க. வின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளருமான மு. க. ஸ்டாலின் இன்று புதிய அவதாரம் எடுத்திருக்கிறார். கடந்த மாதம் 20ஆம் தேதி 'நமக்கு நாமே' என்ற கோஷத்துடன், 'விடியல் மீட்பு பயணம்' என்ற ஒரு பாதயாத்திரையை துவக்கிவிட்டார். கன்னியாகுமரியில் துவங்கிய இந்தப் பயணத்தின் முதற் கட்டம் ஒக்ரோபர் 2ஆம் தேதி காந்தி ஜெயந்தியன்று முடிந்தது. பின்னர், அடுத்த கட்ட பயணத்தை துவக்குகிறார் ஸ்டாலின்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் நடந்தே போய் மக்களைச் சென்றடைவது என்பதுதான் அவரது நோக்கம். நடைபயணம் போகும்போதே அவ்வப்போது ஆட்டோக்களிலும், ஸ்கூட்டர்களிலும், ஏன் சைக்கிளிலும் கூட ஸ்டாலின் பயணிக்கிறார். ஜெயலலிதா ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லுவது ஒரு புறமென்றால், தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் என்னவெல்லாம் செய்யப்படும் என்பதை மக்களிடம் விளக்குவதும், மக்களின் உண்மையான பிரச்னைகளை நேரடி அனுபவத்தில் கேட்டுத் தெரிந்துகொள்வதும் பயண நோக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, மக்கள் முன்வைக்கும் பிரதான பிரச்னைகளை செவிமடுக்கும் ஸ்டாலின், அவற்றின் அடிப்படையில் தி. மு. க. தேர்தல் அறிக்கையை தயாரிக்க ஏற்பாடுகள் செய்வார் என்றும், தேர்தல் அறிக்கையின் உள்ளடக்



ஸ்டாலின் - கன்னியாகுமரி

**தி. மு. க. அடையாளங்கள் ஏதுமின்றி, அல்லது மிகமிக குறைந்த அடையாளங்களுடன் ஸ்டாலின் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்**

கத்தில் ஸ்டாலினின் நேரடி அனுபவங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவருக்கு நெருக்கமான தி. மு. க. முன்னணியினர் கூறுகின்றனர்.

இதுவரையில் எத்தனையோ தேர்தல்களை 1957இலிருந்து தி. மு. க. பார்த்துவிட்டது. ஆனால், இந்தமுறை சற்றே வித்தியாசமான தேர்தலை தி. மு. க. சந்தித்துக் கொண்டிருக்கிறது. காரணம், அதனது பட்டத்து இளவரசர், அநேகமாக முதலமைச்சர் வேட்பாளராகக்கூடியவர், தி. மு. க. அடையாளங்கள் ஏதுமின்றி, அல்லது மிகமிக குறைந்த தி. மு. க. அடையாளங்களுடன் இன்று மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். கலர், கலரான ஷேட்டுகள், ரீ ஷேட்டுகள் மற்றும் காற்சட்டைகள் அணிந்து, இன்று பல தரப்பட்ட மக்கள் மத்தியில் வலம் வந்துகொண்டிருக்கிறார். வழக்கமான ஸ்டாலின், தி. மு. க. வின் பிரதான ஆடையான கருப்பு, சிவப்பு கரை போட்ட வெள்ளை வேட்டியும், வெள்ளை சட்டையும் அணிந்திருப்பார். ஆனால், நமக்கு நாமே, விடியல் மீட்பு பயணத்தில் அவர் கரை வேட்டி கட்டவில்லை. மாறாக, நவநாகரீக ஆடைகளிலேயே வலம் வந்துகொண்டிருக்கிறார்.

இது ஏதோ தற்செயலான நிகழ்வு அல்ல. நன்கு திட்டமிடப்பட்ட, செயல்திட்டத்துடனான, ஆங்கிலத்தில் சொல்லுவதானால், 'இமேஜ் மேக் ஓவர்' நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது. 'இது முக்கியமான நிகழ்வுதான். அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு ஆளுமையாக தன்னை முன்னிறுத்திக் கொள்ள ஸ்டாலின் விரும்புகிறார். மக்களின் உண்மையான பிரச்னைகளை அறிந்துகொள்ள விரும்புகிறார். அதன் தொடர்ச்சிதான் இந்த நடவடிக்கை' என்கிறார் ஸ்டாலினுக்கு நெருக்கமான தி. மு. க. தலைவர் ஒருவர்.

இதுவரையில் இந்த பயணத்தில் அநேகமாக தி. மு. க. கொடிகள் அரிதினும் அரிதாகத்தான் காணப்படுகின்றன. கழக கண்மணிகள் பார்ப்பவர்களின் கண்களில் படுவதும் குறைவாகவே காணப்படுகிறது. அந்தந்த மாவட்ட செயலாளர்கள் பட்டும்படாமல் ஓர் ஓரமாக நடந்து வருகின்றனர். நடந்து வரும்போதே திடீரென்று ஒரு டீ கடையில் போய் உட்கார்ந்து கொள்ளும் ஸ்டாலின், அங்கிருப்பவர்களுடன் அளவளாவுகிறார். பிறகு மீண்டும் நடக்கிறார். சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு திடீர் 'விசிட்' அடிக்கும் ஸ்டாலின் தி. மு. க. ஆட்சிக்கு வந்தாலும் சீன பட்டாசுகள் நிச்சயம் தடைசெய்யப்படும் என்று சொல்லுகிறார். ஸ்ரீவில்லி புத்தூரில் பால்கோவா உற்பத்தியாளர்களுடன் அமர்ந்து அவர்களது பிரச்னைகளை செவிமடுக்கும் ஸ்டாலின் தி. மு. க. ஆட்சி வந்தால் அவர்களது குறைகள் கண்டிப்பாக களையப்படும் என்கிறார். பெண்கள் அதிகம் பணிபுரியும் தொழிற்சாலைகளில் அவர்களிடம் அமர்ந்து குறைகேட்கிறார். மதுவிலக்கு, தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் முதல் கையெழுத்து என்று உறுதியளிக்கிறார். மாணவர்களுடன் 'ஹை டெக்'

பாணியில், 'பவர் பொயிண்ட் பிரசென்டேஷன்' ஆலோசனகளை நடத்துகிறார். விவசாயிகளுடன் வயல் வெளிகளில் நடந்தேபோய் அவர்களது குறைகளை கேட்கிறார்.

இவை எல்லாமே ஸ்டாலின் தனது 'இமேஜை' உயர்த்திக் கொள்ளுவதற்காகவும், மாற்றிக் கொள்ளுவதற்காகவும் மேற்கொள்ளப்படும் கடுமையான முயற்சிகள்தான் என்பது வெள்ளிடைமலையாகவே தெரிகிறது. தி. மு. க. மீது இன்னமும் அகலாமல் படர்ந்திருக்கும் 2ஜி ஊழல் உள்ளிட்ட கறைகளையும், தி. மு. க. மீது கிட்டத்தட்ட நிரந்தரமாகவே படிந்து விட்ட குடும்ப கட்சி என்ற பெயரையும் மாற்றவே ஸ்டாலின் பிரம்மப் பிரயத்தனம் செய்கிறார் என்பது தெளிவாகவே புரிகிறது. 1957 இல் முதன்முறையாக அண்ணா காலத்திலிருந்து தி. மு. க. சந்தித்த எந்தத் தேர்தலிலும் அதனது தலைவர்கள் எவரும் தி. மு. க. கொடிகள் இல்லாமலும், கரை வேட்டி கட்டிக்கொள்ளாமலும் பிரச்சாரங்களுக்கு போனதில்லை. ஆனால், முதன்முறையாக அது தற்போது நடந்துகொண்டிருக்கிறது.

2014 மக்களவைத் தேர்தலில் தி. மு. க. பெற்றது 23 சதவிகித வாக்குகள். இது, கண்டிப்பாக சில சதவிகிதங்கள் வரும் சட்டமன்றத் தேர்தலில் கூடும் என்பது தேர்தல் அவதானிகளின் கருத்தாக இருக்கிறது. ஆனால், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற அது மட்டும் நிச்சயம் போதாது. பாரம்பரியமாக தி. மு. க. வுக்கு விழும் வாக்குகளைத் தாண்டி குறைந்தது 5இலிருந்து 7 சதவிகித வாக்குகள் கண்டிப்பாக ஆட்சிக் கட்டிலின் அருகில்வர தேவைப்படுகிறது. இதுவும் போதாது, கண்டிப்பாக கூட்டணிகளும் தேவை. அ. இ. அ. தி. மு. க. வோ, தி. மு. க. வோ யார் ஆட்சிக்கு வரவும் கூட்டணிகள்தான் அடிப்படையாக இருக்கின்றன. இன்றுள்ள சூழலில் தி. மு. க. வுடன் யார் கூட்டணி வைப்பார்கள் என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்தச் சூழலில்தான் தி. மு. க. வின் பாரம்பரிய வாக்கு வங்கிக்கு வெளியில் செல்வாக்கை விஸ்தரிக்க ஸ்டாலின் நமக்கு நாமே பயணத்தை மேற்கொள்ளுகிறார்.

இது எந்தளவுக்கு தி. மு. க. வுக்கோ, ஸ்டாலினுக்கோ பலன் கொடுக்கப் போகிறதென்று இப்போதைக்கு சொல்லமுடியவில்லை. இது கிட்டத்தட்ட நரேந்திர மோடி பயன்படுத்திய வித்தை. ஆனால், மோடி பத்தாண்டு காலம், தான் குஜராத்தில் நிகழ்த்திய அல்லது நிகழ்த்தியதாக பறைசாற்றிக் கொண்ட சாதனைகளின் அடிப்படையில் வாக்குகளைக் கேட்டார். ஆனால், இன்று ஸ்டாலின், தரப்போகும் நல்லாட்சி என்ற வாக்குறுதி அஸ்திரத்தைக்கொண்டு களத்தில் நிற்கிறார். மற்றொரு முக்கியமான விஷயம், 2016 தேர்தலில் இளம் வாக்காளர்கள் அதாவது 18 முதல் 29 வயது வரையிலான வாக்காளர்கள் கிட்டத்தட்ட 2 கோடி பேர் என்கிறது புள்ளி விவரம். இதில், முதன்முறையாக வாக்களிக்கப் போகிறவர்கள் 60 லட்சமாகும். இவர்களைக் குறிவைத்துத்தான் ஸ்டாலின் நடந்து கொண்டிருக்கிறார் என்கின்றனர் அவருக்கு நெருக்கமானவர்கள். இந்தப் பிரிவினரிடம் தி. மு. க. எனும் அடையாளம் செல்லுபடியாவது கடினமானது என்பதனால்தான் தன்னையே ஒரு 'பிராண்டாக' ஸ்டாலின் தற்போது 'பிரமோட்' பண்ணிக்கொண்டிருக்கிறார்.

வழக்கமாக தி. மு. க. தலைவர் தெருவில் பிரச்சாரத்துக்கு வருகிறாரென்றால் நூற்றுக்கணக்கில் காணப்படும் தி. மு. க. பதாகைகளும், ஆளுயர கொடிகளும் தற்போது ஸ்டாலினின் நடை பயணத்தில் கிட்டத்தட்ட முற்றிலுமாக காணாமல் போயிருக்கின்றன. அடுத்த தலைமுறையின் தேவைகளுடன் உறவாட தி. மு. க. இரண்டாண்டுகளாகவே முயற்சித்துக்கொண்டிருக்கிறது. ஸ்டாலினின் முகநூல் பக்கங்கள் இதற்குச் சாட்சி. ஆனால், வட இந்திய தலைவர்கள்போல 'ட்வீட்டரில்' சுறுசுறுப்பாக ஸ்டாலின் இல்லை. ஸ்டாலினின் முகநூல் பக்கத்தில் போடப்படும் செய்திகள் அவரது கருத்துக்கள் தானா என்று ஜெயலலிதா சமீபத்தில் கேட்டார். இதற்கு, தனது முகநூலை தொடர்ந்து வருவதற்காக ஜெயலலிதாவுக்கு ஸ்டாலின் நன்றி தெரிவித்துக் கொண்டார். ஒரு பாரம்பரியமிக்க பிராந்திய கட்சி, மாறிவரும் காலங்களுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ள முயற்சிக்கிறது. அதன் இளவரசர் தன்னை நவீனமானவராக அடுத்த தலைமுறையினருடன், அவர்களது பாஷையில் பேசுபவராக காட்டிக் கொள்ளுகிறார். ஆனால், இதெல்லாம் போதுமா என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி. மற்றொரு முக்கியமான விஷயம், ஓர் இடத்திலும் தன்னை ஜெயலலிதாவுக்கு இணையானவராக, தன்னை முதலமைச்சர் வேட்பாளராக ஸ்டாலின் முன்னிறுத்திக் கொள்ளவில்லை. தி. மு. க. வெற்றி பெற்று கருணாநிதி தலைமையில்தான் ஆட்சியமைக்கும் என்றுதான் பேசுகிறார். தன்னை ஜெயலலிதாவுடனான நேரடி போட்டியாளராக ஸ்டாலின் இதுவரையில் சித்தரித்துக் கொள்ளாததும் திட்டமிட்ட வியூகம்தான். 'ஜெயலலிதாவுடன் நேரடியாக தன்னை போட்டியாளாராக காட்டிக்கொண்டால் வரும் விளைவுகளை அவர் உணர்ந்திருக்கிறார். அதனால்தான், கருணாநிதியை அவர் அவ்வப்போது ஜெயலலிதாவுக்கு மாற்றாக முன்னிறுத்துகிறார். தனது உயரம் தெரிந்தேதான் இதுவரையில் அவர் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறார்' என்கிறார் ஸ்டாலினுக்கு நெருக்கமான மற்றொரு தலைவர்.

இதுவரையில், ஸ்டாலினின் கூட்டங்களில் எந்தப் பிரச்னைகளும் இல்லை. மதுரை நகராட்சி ஸ்டாலினை மதுரைக்குள் வரவிடக்கூடாதென்று தீர்மானம் நிறைவேற்றியது. இருந்தபோதும், அப்படி ஏதும் நடக்கவில்லை. மதுரையிலும் பிரச்சார பயணத்தை முடித்துக்கொண்டு ஸ்டாலின் புறப்பட்டுவிட்டார். மதுரை மாநகராட்சி தீர்மானம் தனது பயணத்துக்கு கிடைத்த வெற்றி என்கிறார் ஸ்டாலின். ஆனால், தேர்தல் காலம் நெருங்க நெருங்க, நிலைமைகள் மாறலாம். ஆளும் கட்சி இப்போதுபோல எப்போதும், எல்லா இடத்திலும் கைகட்டி, வாய் மூடி ஸ்டாலினின் கூட்டங்களை வேடிக்கை பார்க்குமா என்று போகப்போகத்தான் தெரிய வரும்.

சற்றே மாறான வியூகத்தை ஸ்டாலின் கையாளத்துவங்கியிருக்கிறார். தேர்தல்களுக்கு இன்னமும் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் 2ஜி வழக்கில் தீர்ப்பு வந்துவிடும். அது தி. மு. க. வுக்கு பாதகமாக வந்தால் ஸ்டாலினின் கனவுகள் தவிடுபொடியாகலாம். கூட்டணிகள் ஒரு வேளை உருவாகாமல் போனால், அது நிச்சயம் அ. இ. அ. தி. மு. க. வுக்கு சாதகமாகவே முடியும் என்பதும் தி. மு. க. தலைமைக்கு தெரியாததல்ல. இந்தப் பயணத்தின் வெற்றி, தி. மு. க. வுடன் சேரவிருக்கும் கூட்டணிகளைப் பொறுத்தும், 2ஜி வழக்கின் தீர்ப்பைப் பொறுத்துமே அமையவிருக்கின்றன என்றே உறுதியாக சொல்லலாம். இவற்றை

ஸ்டாலினுக்கு கிடைக்கும் வரவேற்பை கருணாநிதி எப்படி விரும்பப்போகிறார்?

‘எல்லா கட்சிகளிலும் கோஷ்டிகள் இருக்கும். ஆனால், எல்லா கோஷ்டிகளும் குடும்பத்துக்குள்ளேயே இருக்குமாறு பார்த்துக்கொண்டதுதான் கருணாநிதியின் சிறப்பு’



சிவகங்கை



மதுரை



விருதுநகர்

யெல்லாம்விட மற்றொரு முக்கியமான விஷயம், ஸ்டாலினின் பயணத்துக்கு கிடைக்கும் வரவேற்பை அவரது தந்தையும், தி. மு. க. தலைவருமான கருணாநிதி எப்படி விரும்பப்போகிறார் என்பதுதான். ஏற்கனவே, தி. மு. க. வின் அதிகாரபூர்வ ஏடான முரசொலியில் ஸ்டாலினின் பயணத்துக்கு கிடைக்கும் முக்கியத்துவம் குறைவானதாக இருப்பதாக பார்க்கப்படுகிறது. மகனே ஆனாலும், பதவியை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று கருணாநிதி நினைக்கும் வரையில், ஸ்டாலின் முதலமைச்சர் பதவியின் அருகிலாவது வரமுடியுமா என்பதும் முக்கியமான விடயம்தான். ஓர் அரசியல் பார்வையாளர் சொல்லியது போல, எல்லா கட்சிகளிலும் கோஷ்டிகள் இருக்கும். ஆனால், எல்லா கோஷ்டிகளும் குடும்பத்துக்குள்ளேயே இருக்குமாறு பார்த்துக் கொண்டதுதான் கருணாநிதியின் சிறப்பு. அதற்கான விலையை வரும் நாள்களில் அப்பா, மகன் இரண்டு பேருமே கொடுக்கலாம். ■

# இரண்டாம் உலக யுத்தத்துக்கு பின்னர் பாரிய மக்கள் இடப்பெயர்வு

## புதிய வாழ்விடம் தேடும் சிரிய மக்களின் அவலம்



**இஸ்லாமிய உலகின் பலநாடுகளில் ஆட்சிமாற்றங்களுக்கு காரணமான மக்கள் புரட்சித் தீ, சிரியாவிலும் பரவத்தொடங்கியதையடுத்து, சிரியாவின் உள்நாட்டுப் போரில் உலக நாடுகளின் தலையீடுதான் நெருக்கடியை தீர்வு எட்டமுடியாத தொலைவுக்கு இட்டுச்சென்றிருக்கிறது**

**ராஜாஜி**

விவிலிய காலத்தை விஞ்சிய மக்கள் இடப்பெயர்வாக வரலாற்றில் பதிவாகக்கூடும் என்று ஆய்வாளர்கள் எண்ணுமளவுக்கு ஐரோப்பாவின் நுழை வாயில்கள் இரவு பகல் என்ற வேறுபாடு இல்லாது தொடர்ந்து தட்டப்படுகின்றன.

ஐந்து லட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீன அகதிகளுக்கு உணவும் உறைவிடமும் இன்னோரன்ன வசதி வாய்ப்புகளையும் வழங்கி பல ஆண்டுகளாக பராமரித்துவந்த சிரிய நாட்டு மக்கள், இன்று அதைவிட பன்மடங்கான எண்ணிக்கையில் தம்மை நம்பிவந்த பாலஸ்தீன அகதிகளையும் கூடவே அணைத்துக்கொண்டு, புதிய வாழ்விடம் தேடி அலையும் அவலமே இன்றைய உலக தினசரிகளின் தொடர் பதிவு.

சிரியாவிலிருந்து கிரீஸ் மற்றும் மசொடோனியா, சேர்பியா வழியாக மேற்கு நாடுகளைச் சென்றடையும் நோக்கத்தோடு சிரியா அகதிகளின் கடுமையான பயணம் தொடர்கிறது.

இதுவரையில் 5 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைந்திருப்பதாகவும் 2016ஆம் ஆண்டு முடிவுக்குள் 14 லட்சத்துக்கும் மேலான எண்ணிக்கையில் அகதிகளின் நகர்வு இருக்கும் எனவும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையம் கூறுகிறது.

நாள் தோறும் 10 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் ஐரோப்பாவுக்குள் நுழைந்த சிரிய அகதிகளின் நகர்வு



சிரியாவுடனான துருக்கி எல்லை

வேகத்தை, ஆரம்பித்திருக்கும் குளிர்காலத்தின் தாக்கம் தாம தமாக்குகிறது என்றும், சிறு குழந்தைகளும் முதியவர்களும் கொண்ட பெரும் மக்கள் கூட்டம் கடும் குளிரை தாங்கிக் கொள்வதற்கான தயார்நிலையில் இல்லாதிருப்பதாகவும் அகதிகளுக்கான ஆணையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

இரோப்பாவுக்குள் நுழைய முற்படும் அகதிகளை தடுப் பதற்கு ஹங்கேரி பல கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டதையடுத்து சிரிய அகதிகள் தற்போது சேர்பியா, குரோஷியா ஆகிய நாடுகளை மாற்று வழியாக பயன்படுத்




கிரீஸுக்கு

துகிறார்கள் என்றும், அப்பகுதிகளில் நிலவும் கடுமையான குளிரில் இவர்களில் பலர் காலில் பாதணிகளே இல்லாது பெரிதும் அவதியுறுகிறார்கள் என்றும் அகதிகள் ஆணைய தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

ஹங்கேரி, எல்லையை மூடியதுடன் இடம்பெயரும் மக்கள்மீது கடுமையான நடவடிக்கைகளையும் எடுத்ததையடுத்து அகதிகள் குரோஷியாவை முற்றுகையிட்டனர்.

இவரகள் தனது மண்வழியாக ஸ்லோவேனியா, ஒஸ்ரியா நாடுகளை அடைந்து, அங்கிருந்து ஜேர்மனிக்கு சென்றுவிடுவார்கள் என்று குரோஷியா எண்ணியது. அதனடிப்படையில், மக்களை தனது எல்லைக்குள் நுழைய குரோஷியா அனுமதித்தது.

ஆனால், ஸ்லோவேனியாவோ தனது நாடுவழியாக மக்கள் பயணத்தைத் தொடர மறுக்கவும், லட்சக் கணக்கான மக்களை அவசிய உதவிகளை வழங்கி பராமரிக்க வேண்டிய நிரப்பந்தம் தற்போது குரோஷியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

சேர்பியா, மசோடினியா, ஹங்கேரி ஆகிய நாடுகளை வந்தடைந்திருக்கும் 5 லட்சத்துக்கும் அதிகமான அகதிகளுக்கும், ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளைநோக்கி தமது பயணத்தை தொடங்கியிருக்கும் 15 லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கும் அவசியமான குளிர் பாதுகாப்பு ஆடைகள், துணிமணிகள் மற்றும் உணவு வகைகளை சேகரிக்கவேண்டிய அவசர நிலைக்கு அகதிகள் ஆணையமும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் தள்ளப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு, அகதிகள் விவகாரம் ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு வகைகளில் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

மத்திய கிழக்கு நெருக்கடியால் ஐரோப்பாவை நோக்கி தரைவழியாக நகரும் லட்சக்கணக்கான அகதிகளின் துயரமும், ஆபிரிக்காவிலிருந்து கடல் வழியாக ஆபத்தான பயணம் மேற்கொள்ளும் அகதிகள் மற்றும் குடியேறிகளின் அவலமும் மனித நேயத்தை நெருடலுக்குள்ளாக்கும் அதே வேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பாரிய அரசியல் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

பாதுகாப்புத்தேடி அரசியல் அகதிகளாகவே பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பெயர்வு இடம்பெறுவதாக கருதப்படுகின்றபோதிலும், பொருளாதாரமும் வறுமையுமே மக்களின் ஐரோப்பா நோக்கிய நகர்வுக்கு பிரதான காரணம் என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதுகிறது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னரான இப்பாரிய மக்கள் இடப்பெயர்வு, ஐரோப்பிய ஒன்றியம் பல முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு நிர்ப்பந்தித்திருக்கிறது.

தற்போதைய மக்கள் கூட்டப் பெயர்வினால் மிகவும் தாக்குதலுக்குள்ளாகியிருக்கும் ஐரோப்பாவின் முதலாவது பெரும் பொருளாதார வளம்கொண்ட நாடான ஜேர்மனியை கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 2 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் சென்றடைந்துள்ளார்கள். இந்த ஆண்டு முடிவுக்குள் ஜேர்மனி இன்னும் 8 லட்சம் அகதிகளை எதிர்பார்க்கிறது.

ஐரோப்பாவின் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் திறனை மக்கள் குடிப்பெயர்வு விவகாரம் மிகவும் கடுமையாக சோதிப்பதாகவும், இந்த விவகாரம் எல்லைமீறிச் செல்

வதால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான எல்லைகளை பாதுகாக்கும் அவசிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜேர்மன் அதிபர் அஞ்சலா மேர்க்கல் தெரிவிக்கிறார்.

ஜேர்மனியின் பொருளதார வளமும் அகதிகள் விவகாரத்தில் கடைப்பிடிக்கும் மென்மையான போக்குமே, கட்டுப்படுத்த முடியாத அளவு பெரும் எண்ணிக்கையில் மக்கள் அகதிகளாக நாட்டுக்குள் நுழைவதற்கு காரணம் என்று ஜேர்மன் மக்கள் குரல் எழுப்புகிறார்கள்.

ஜேர்மன் இதுவிடயத்தில் கடும்போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற குரல் ஓங்க ஆரம்பித்துள்ள நிலையில், ஜேர்மன் அதிபர் சமரச போக்கைக் காண்பிப்பதும் ஜேர்மனியரை அதிருப்திக்குள்ளாக்குகிறது.

உண்மையான பாதுகாப்பை எதிர்பார்த்து ஜேர்மனிக்கு வருவபர்களுக்கு அது தாராளமாக வழங்கப்படும் என்றும் வருமானத்தை பெருக்கும் நோக்கத்துடன் நுழைபவர்கள் நிச்சயம் திரும்பிப் போகநேரிடும் என்று அஞ்சலா மேர்கல் கூறினாலும், ஜேர்மனியில் அவர் தனது செல்வாக்கை மிக வேகமாக இழந்தேவருகிறார்.

செல்வாக்குள்ள மக்கள் தலைவராக விளங்கிய மேர்கலின் தற்போதைய செல்வாக்கு கடந்த 4 ஆண்டுகளில் மிகவும் தாழ்வு நிலைக்கு வீழ்ச்சிகண்டிருக்கிறது.

பெருகும் அகதிகள் விவகாரத்தை ஐரோப்பிய ஒன்றியம் கையாளும்விதத்தை ஜேர்மன் மக்கள் மட்டுமன்றி, ஏனைய ஐரோப்பிய நாடுகளின் மக்களும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

இந்த விவகாரம் பிரிட்டனின் அரசியல் போக்கிலும் மாற்றங்களை காண்பிக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகவேண்டும் என்ற கருத்து தொடர்பாக மக்கள் கருத்து வாக்கெடுப்பு அவசியம் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டுவரும் நிலையில், பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகவேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு அதிகரிப்பதற்கான ஏது நிலையை அகதிகள் விவகாரமும், அதனை ஐரோப்பிய ஒன்றியம் கையாளும்விதமும் ஏற்படுத்தியிருக்கிறது.

அகதிகள் இடப்பெயர்வு விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு புகலிடம்தேடி புறப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதல்ல தீர்வு, தொடர்ந்தும் மக்கள் இடப்பெயர்வுக்கான காரணம் கண்டறியப்பட்டு, அதைத் துடைத்தெறிவதே முக்கியம் என்ற நியாயமான வாதமும் ஐரோப்பிய ஒன்றிய தலைமைகளினாலாலும் ஏனைய நாடுகளினாலும் முன்வைக்கப்படுகிறது.

வரலாற்றுக் காலம்முதல் பல்வேறு அரசியல் மாற்றங்களை எதிர்கொண்ட சிரியாவின் தற்போதைய அரசியல் நெருக்கடி இதுவரையில் 2 லட்சத்துக்கும் அதிகமான உயிர்களைக் காவுகொண்டுள்ளதுடன், பல லட்சத்துக்கும் அதிகமானவரை நாடுகளைக் கடந்து அலைந்து திரியும் அவலத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

சிரிய நெருக்கடிக்கு தீர்வு சாத்தியமா? என்றால், இஸ்லாமிய உலகின் பலநாடுகளில் ஆட்சிமாற்றங்களுக்கு காரணமான மக்கள் புரட்சித் தீ, சிரியாவிலும் பரவத் தொடங்கியதையடுத்து, சிரியாவின் உள்நாட்டுப் போரில் உலக பெருநாடுகளின் தலையீடுதான் நெருக்கடியை தீர்வு எட்டமுடியாத தொலைவுக்கு இட்டுச்சென்றிருக்கிறது.

சிரிய அதிபர் பஷர் அல்-அசாத் தலைமையிலான அரசை பதவியிலிருந்து அகற்றுவதன்மூலம் எண்ணை



ஹங்கேரி எல்லை

வளத்தையும் ஏனைய பொருளாதாரங்களையும் கட்டுப்ப டுத்த கிடைத்த வாய்ப்பு என்று கருதி, புரட்சியாளர்களுக்கு வழமைபோல அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் துருக்கி, சவுதி அரேபியாபோன்ற இஸ்லாமிய நாடுகளும் துணைபோகத் தொடங்கின.

அசாத்துக்கு எதிரான போராட்டம் உள்நாட்டுப் போராக நீடித்து நாடு சின்னாபின்னமாகிய நிலையில், இஸ் லாமிய உலகின் மற்றொரு சவால் சக்தியாக உருவெடுத்து வேகமாக வளர்ச்சிகண்டுவரும் இஸ்லாமிய அரசு என்ற தீவி ரவாத அமைப்பு, சிரியாவின் முக்கிய வளம் நிறைந்த இடங் களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

எரிபொருள் வளத்தை கட்டுப்படுத்தி, அரசியல் அதிகா ரத்தையும் சாதகமாக தக்கவைக்கும் நோக்குடனும், ஏற்க னவே சிரியாவுடன் செய்துகொள்ளப்பட்டிருந்த நேச ஒப் பந்தத்தின் அடிப்படையிலும் அசாத் அரசுக்கு ரஷ்யா முழு ஆதரவையும் வழங்கி, பக்கத்துணையாக உள்ளது.

ஒன்றுக்கொன்று பாரிய முரண்பாடுகளையும் வேறுபா டுகளையும்கொண்டிருக்கும் மேற்குலக நாடுகள் ரஷ்யா, ஈரான் ஆகியவற்றின் ஆதரவோடு, ஆட்சியிலிருக்கும் அதி பர் அசாத்தின் அரச படைகள் மற்றும் ஐ. எஸ். என்னும் இஸ்லாமிய அமைப்பு ஆகிய மூன்று தரப்புகளுக்கும் இடையேயான மோதல்களமாக சிரியா மாறியிருக்கிறது.

தலிபான்கள், அல்-கைடா மற்றும் ஈராக்கின் சதாம் ஹூசைன்போன்ற சக்திகளையும் முறியடித்திருந்தும், புதிய சவாலாக மாறியிருக்கும் ஐ. எஸ். அல்லது இஸ்லாமிய அரசு அமைப்பை வெற்றிகொள்வதில் தடுமாறும் அமெரிக்கா வுக்கு சிரியாவில் உள்ள ஐ. எஸ். நிலைகளைத் தாக்கி அழிப் பதா அல்லது சிரிய அதிபர் அசாத்தின் ஆட்சியை கவிழ்ப்ப தற்கு எதிராக புரட்சிசெய்துவரும் கிளர்ச்சியாளர்களை அடக்குவதா என்ற குழப்பம்.

சிரியாவில் அதிபர் பஷர் அல்-அசாத் தலைமையிலான அரசை பதவியிலிருந்து அகற்றும் போராட்டத்தை முறிய டிப்பதற்கு உதவும் வகையில் ஆயுத தளபாடங்களையும் படைவீரர்களையும் சிரியாவுக்கு நகர்த்தியதன்மூலம் தனது நிலையை ரஷ்யா அங்கு உறுதிசெய்திருக்கிறது.

இதன்மூலம், இந்தப் போர் முடிவடைந்த பின்னர் சிரியா வின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் ரஷ்யா தனது கரத்தை வலுப்படுத்திக்கொண்டுள்ளது.

சிரியாவின் உள்நாட்டு போரைத் தீவிரப்படுத்தும் முயற்சி என்று இந்த நடவடிக்கையை வர்ணித்த அமெ ரிக்கா, சிரியாவில் அமைதி நிலவவேண்டும் என்பதற்காக பாடுபட்டுவரும் உலக நாடுகளின் முயற்சிகளைச் சீர்குலைப் பதாக அமைந்துவிடும் என்றும் அச்சம் வெளியிட்டிருந் தது.

ஆனால், அமெரிக்காவின் கண்டனத்தை மறுதலித்திருக் கும் ரஷ்யாவோ, அதிபர் பஷர் அல்-அசாத்தை பதவியிலி ருந்து அகற்றவேண்டுமா, எப்போது அகற்றவேண்டும் என் பதை சிரிய நாட்டு மக்கள் மட்டுமே முடிவுசெய்யவேண் டும் என்றும், பிற சக்திகள் அதனையிட்டு கவலைகொள்ள வேண்டியதில்லை என்றும் தெரிவிக்கிறது.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை அகற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளானது லிபியா, ஈராக்போன்ற நாடுகளில் ஏற்படுத்திய மோசமான விளைவு களை உருவாக்கும் என்றும் ரஷ்ய அதிபர் பதிலளிக்கிறார்.

சிரிய மண்ணை பல்வேறு சக்திகள் தங்களது ஆதிக் கத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கான போராட்ட களமாக



பயன்படுத்திக்கொண்டிருந்த நிலையில், அண்மையில் நியூயோர்க்கில் நடந்துமுடிந்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டமும், அங்கு பிரசன்னமான ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளின் தலைவர்களின் சந்திப்பும் புதிய திருப்பத் துக்கு வழிகோலின.

பரம வைரிகளாக உலக அரங்கில் எதிரும் புதிருமாக நகர்வுகளை மேற்கொண்டிருந்த ரஷ்யாவும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் பொது எதிரியான இஸ்லா மிய அரசை இல்லாதொழிக்க ஒன்றிணைவதற்கும் தயாரா கின.

இஸ்லாமிய அரசு அல்லது ஐ. எஸ். அமைப்பை இல்லா தொழிக்கவேண்டிய பொறுப்பை நிறைவேற்ற அமெரிக்கா தவறிவிட்டது என்று ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டின் குற் றஞ்சாட்டிய அதேவேளை, இஸ்லாமிய அரசு என்னும் ஐ. எஸ். அமைப்பை முறியடிப்பதற்கு நிலையான பலமான சிரிய அரசு முக்கியம் என்றும், அதனை பலவீனமடையவி டக்கூடாது என்று சிரியாவின் அசாத்துக்கு ஆதரவளிக்கும் மற்றொரு பலமான சக்தியான ஈரானின் அதிபர் ஹசன் ரௌஹானி வலியுறுத்தினார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நாம் வெற்றிபெற வேண்டும் என்றால், சிரிய அரசை பலவீனமடையவிடக் கூடாது என்று ஈரான் அதிபர் ரௌஹானி வலியுறுத்தினார்.

சிரய அரசு இந்தப் போரில் தோல்விகண்டால் இஸ்லா மிய அரசு அந்த நாட்டைக் கைப்பற்றுவதும், பயங்கரவாதிக ளின் தலைமை மையமாக சிரியா மாறுவதும் தவிர்க்கமுடி யாததாகிவிடும் என்றும் ஈரானிய அதிபர் கடுமையான எச்ச ரிக்கை விடுத்திருந்தார்.

இஸ்லாமிய அரசு அல்லது ஐ. எஸ். அமைப்பு தோற்க டிக்கப்படுவதற்கு சிரிய அரசுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும், இஸ்லாமிய அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின் னர் சிரியாவில் ஆட்சிமாற்றம் ஏற்படுத்துவது குறித்து பேச்சு நடத்தலாம் என்றும் ஈரான் ஆலோசனையும் தெரிவித்திருந்



தது.

சிரியா விவகாரத்தில் ஈரானும், ரஷ்யாவும் கிட்டத்தட்ட ஒரே நோக்கோடு செயல்படுகின்றன என்றும், இரு நாடுகளுமே பயங்கரவாதத்தை ஒழிக்கவேண்டும் என்பதையே பொதுவான இலக்காக கொண்டிருப்பதாகவும் ஒரே தொனியில் தெரிவிக்கவும், சிரிய நெருக்கடியில் இஸ்லாமிய தீவீரவாதத்தை முறியடிக்க ஈரானுடனும் ரஷ்யாவுடனும் இணைந்து செயல்படத் தயார் என்று அமெரிக்காவும் அறிவித்தது.

சிரிய விவகாரத்தில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்திய இந்த அறிவிப்பினால் களத்திலும் காட்சிகள் மாறின.

அமெரிக்காவினதும் அதன் மேற்குலகு பங்காளிகளினதும் நிலைப்பாட்டில் சாதகமான மாறுதல்கள் ஏற்பட்ட மறுகணமே ரஷ்யா துரிதமாக செயல்பட்டது.

சாதுரியமாகவும் ராஜதந்திரத்துடனும் நடவடிக்கைகளில் உடனடியாக இறங்கிய ரஷ்யா, சிரியாவில் பல்வேறு இடங்களில் குண்டுத் தாக்குதல்களை நடாத்தியது. இஸ்லாமிய அமைப்பின் கேந்திர நிலைகளை அழிப்பதற்கான குண்டுத் தாக்குதல்கள் என்று ரஷ்ய செய்தி நிறுவனம் இதனை வர்ணித்தது.

சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ. எஸ். அமைப்பின் 9 முக்கிய நிலைகள்மீது ரஷ்யாவின் சுகோய் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்ததாகவும் ராக்காவுக்கு அருகே உள்ள ஐ. எஸ். தலைமை நிலை முற்றிலுமாக தரைமட்டமானதாகவும், இந்த தாக்குதலைத் தொடர்ந்து 600க்கும் அதிகமான ஐ. எஸ். அமைப்பினர் சிரியாவிலிருந்து தப்பியோடிவிட்டதாகவும் ரஷ்ய செய்தி ஊடகங்கள் பெருமிதத்துடன் அறிக்கையிட்டன.

எனினும், ரஷ்ய விமானங்கள் இஸ்லாமிய அமைப்பான ஐ. எஸ். நிலைகள்மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும், சிரிய அதிபர் அல்-அசாத்தை ஆட்சியிலிருந்து அகற்ற போராடும் புரட்சிக்குழுக்களின் நிலைகள்மீதே தாக்குதல் நடத்துவதாகவும் அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஐ. எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் போதிய ஒருங்கிணைப்பு இல்லை என்றும், ரஷ்யா வான் தாக்குதல் நடத்துவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னேரேயே அதுபற்றி அறிவுறுத்தப்பட்டதாகவும் அமெரிக்கா விசனம் வெளியிட்டுள்ளதையடுத்து, புதிய முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன.

சிரியாவில் தாக்குதல் நடத்தப்படுவதில் எதிர்பாராத சம்பவங்களை தவிர்ப்பதற்கு தொடர்பாடல் வலையமைப் பொன்று உருவாக்கப்படவேண்டும் என்று ரஷ்யா கோரிக்கை விடுத்துள்ளபோதிலும், இதில் எவ்வகையான ஒருங்கிணைந்த நடவடிக்கை சாத்தியம் என்பது இன்னமும் கேள்விக்குறியே.

இதேவேளை, இஸ்லாமிய அமைப்பு நிலைகள்மீது தாக்குதல் நடத்துவது என்ற போரவையில் அசாத்தை எதிர்த்து போராடும் புரட்சியாளர்களை தாக்கியழித்து தோற்கடிப்பதே ரஷ்யாவின் பிரதான இலக்கு என்று பல்வேறு மேற்குலக செய்தி நிறுவனங்கள் தொடர்ச்சியாக தகவல்களை வெளியிட்டவாறு உள்ளன.

இந்த விடயத்தின் மற்றொரு பரிமாணமாக சிரியாவின் அசாத் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் பிரதான நாடான சவூதி அரேபியா, சிரியாமீதான ரஷ்யாவின் தாக்குதல் குறித்து மிகுந்த அவதானத்துடன் கண்காணிப்பதாகவும், இந்த தாக்குதல்களை ரஷ்யா உடன் நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

லெபனான், துருக்கி மற்றும் பாலஸ்தீனிய செய்திகளும் அசாத் ஆதரவு நிலைகள்மீதே ரஷ்யா தாக்குதல் நடத்துவதாக கூறுகின்றபோதிலும், இஸ்லாமிய நிலைகள்மீதே தமது தாக்குதல்கள் தொடர்வதாக ரஷ்யா மீண்டும் மீண்டும் கூறுகிறது.

அசாத்துக்கு எதிராக போராடும் புரட்சியாளர்கள் மூலோபாய முக்கியத்துவம்வாய்ந்த இடங்களை அரச படைகளிடமிருந்து கைப்பற்றி, தலைநகரைநோக்கி வேகமாக முன்னேறத் தொடங்கியதால் அசாத்தின் அரச படைகள் தடுமாறத் தொடங்கியிருந்த வேளையிலேயே அமெரிக்க, மேற்குலக நிலைப்பாட்டு மாற்றத்தை சாதகமாக கொண்டு ரஷ்யா நகர்வுகளை மேற்கொண்டுவருகிறது.

இந்த சூழ்நிலையில்தான் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளமுடியும் என்று அசாத்தும் நம்பிக்கை கொள்கிறார். அதனாலேயே சிரியா, ரஷ்யா, ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் கூட்டணி வெற்றிபெற்றேயாகவேண்டும் என்றும், தவறினால் முழு பிராந்தியமும் அழிவையே எதிர்நோக்கும் என்ற சிரியாவின் அதிபர் பஷர் அல்-அசாத்தின் அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

அதிபர் பஷர் அல்-அசாத் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தும் நிலைப்பாட்டை மேற்கத்திய நாடுகள் தற்போது கைவிட்டுவிட்டன என்ற கருத்துக்களும் தற்போது வெளிவர தொடங்கியிருக்கின்றன.

முத்தரப்பு போர்க்களமாக மோதல்கள் தொடரும் சிரியாவில், எந்த கூட்டணி வெற்றிபெறவேண்டும் என்பதை தீர்மானிக்கும் சக்தியை சிரிய மக்கள் இழந்துவிட்டிருப்பதன் வெளிப்பாடே, உயிரைப் பணயம்வைத்து காடுகள், மலைகளை ஊடறுத்து பனி, மழை, குளிர், பசி, பட்டினி தாங்கி, நிம்மதியான வாழ்வு நாடிய அவர்களது நெடும் பயணம். ■

# ஆடலின் உயர் நிலை



பரதநாட்டியத்தில் பல கலைஞர்களின் ஆடலைப் பார்க்கிறோம். அவ்வேளைகளில், அக் கலை வெளிப்பாடு நம்மில் ஏற்படுத்தும் உணர்வு பல நிலைப்படும். இக் கலை வடிவத்தின் அதி உன்னதமாய், அதன் உயர்நிலையில் நம்மை ஆட்கொள்ளும் கலைஞர்கள் சிலர்.

பாலசரஸ்வதி, குமாரி கமலா என்ற, அந்த யுகத்துக்குப் பின்னரான பரத நாட்டிய உலகம் சற்று விசாலமானது. பத்மா சுப்ரமண்யம், சுதாராணி ரகுபதி, சித்திரா விஸ்வேஸ்வரன், லக்ஷ்மி விஸ்வநாதன், சாந்தா - தனஞ்சயன், அலர்மேல் வள்ளி, மாளவிகா சருக்கை என்ற இவர்கள் சிலர் அந்த உன்னதத்தின் உயர்நிலையில் அவையை ஆட்கொண்ட - ஆட்கொள்ளும் ஒரு தலைமுறையினர். இந்த ஆட்கொள்ளல், இவர்களுக்கு அடுத்ததான தலைமுறையில் இக்கலையின் பாரம்பரிய பேணலுடன், ஓர் அறிவார்ந்த தேடலுமாய் பரிணமித்துச் சிலரிடத்துச் சிறக்கிறது. இதன் திருப்பு மையம் டாக்டர் பத்மா சுப்ரமண்யம் என்பதனைச் சொல்லலாம்.

லண்டன் பாரதீய வித்ய பவனில் பார்த்த ஒரு பரதநாட்டிய நிகழ்ச்சி, அந்த உயர்நிலையின் ஒரு தொடர்ச்சியை மகிழ்ச்சியோடு உணர்த்தியது.

முன்னரொருபோதும் அவரது ஆடலைப் பார்த்ததில்லை. 'அநுபவாநுபவம்' என்று அந்த ஆடலைச் சொல்லாம்.

டாக்டர் லக்ஷ்மி ராமஸ்வாமி அவர். சித்திரா விஸ்வேஸ்வரனின் சிஷ்யையாக சிலசமயங்களில் அவரைச் சித்திரா விஸ்வேஸ்வரனின் நிகழ்ச்சிகளில் எப்போதாவது பார்த்திருக்கலாமோ ஆனால், டாக்டர் லக்ஷ்மி ராமஸ்வாமி என்ற ஒரு தனித்த கலைஞராக அவரைப் பார்த்திருக்கவில்லை.

ஆழ்ந்த ஒரு புரிதலிலும், தெளிவிலும் மலரும் வெளிப்பாடாய் அவரின் ஆடல் பரிணமித்தது.

கைகளில் அந்த முத்திரைகளும், வெகு பக்குவமான அந்த முகபாவமும், ஆழ்ந்த உள்ளுணர்வுடனான அந்த சஞ்சாரிபாவங்களும், அமைவான அசைவுகளும் அவரின் தனித்துவத்தை இனம்காட்டி ஈர்த்தன.

லால்குடி ஜெயராமனின், “இன்னம் என்மனம் அறியாதவர் போல...'' சாருகேசி வர்ணத்துக்குப் பின்னர் புரந்தர தாஸரின் அந்தக் கிருதி. எம். எல். வசந்தகுமாரி பிரபல்யப்படுத்தியதில் பரிச்சயமான “யமனென்னி காணேனெந்து...'' (கன்னடம்). பொருள் புரியாமலேயே லயிப்பிலாழ்த்தும் சிவரஞ்சனி உருப்படி.

லக்ஷ்மி ராமஸ்வாமி அதில் இரட்டை அற்புதத்தைக் காண்பித்தார். தன்னுடைய ஆடலில் எல்லா அம்சங்களிலும் அதில் தன்னை அற்புதப்படுத்தினார். புரந்தரதாஸரின் அந்தக் கிருதியின் பொருளின் அற்புதத்தையும் உணர்த்தினார். நாம் வணங்கும் மற்றைய தெய்வங்களைப்போலவே யமனும் நமக்கருளும் தன்மையை புரந்தர தாஸசர் அதில் அழகுறச் சொல்கிறார்.

டாக்டர் ராஜ்குமார் பாரதியின் அருமையான இசை அமைப்பு. நிகழ்ச்சி முழுமையையும் ஒலிப்பதிவிலேயே லக்ஷ்மி ஆடினார். அது, பல தடவைகளில் அவரை ஒரு கட்டுப்பாட்டுக்குள் நிர்ப்பந்திப்பது தெரிந்தது.

இசையை ஆடலின் அசைவாக காண்பவர் சித்திரா விஸ்வேஸ்வரன். அவரின் சிஷ்யையான லக்ஷ்மி, பத்மா சுப்ரமண்யத்திடம் கரணங்களைக் கற்றிருக்கிறார். கலாநிதி நாராயணனிடம் அபிநயத்தைக் கற்றிருக்கிறார். டாக்டர் எஸ். ரகுராமனிடம் சங்க இலக்கியங்களைக் கற்றிருக்கிறார். நாட்டியம் பற்றிய புராதன நூலான சாத்தனாரின் 'கூத்தநூல்' தொடர்பிலான ஆய்வை தனது டாக்டர் பட்டத்துக்காக மேற்கொண்டிருக்கிறார். இந்த அனைத்தினதும் உள்ளார்ந்த வடிவமாக அவரின் ஆடல் தெரிகிறது.

- மாலி



# விஸ்வரூபம் எடுத்த கரஹரப்பிரியா

'பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்' - என்று ரசித்து மகிழ்வார் பாரதியார். லண்டன் பாரதிய வித்யா பவனில் வந்திருந்த ரசிகர்களும் இதுபோல, தம் நெஞ்சை அன்றைய இசை நிகழ்வில் பறிகொடுத்திருப்பார்கள்.

'சங்கீத கலாநிதி', 'பத்மபூஷண்' திருமதி சுதா ரகுநாதனின் கச்சேரி அது. பெஹாக் ராகத்தில் அமைந்த ரி. ஆர். சுப்பிரமணியத்தின் வர்ணத்தில் ஆரம்பித்து, ராகேஸ்ஸ்ரீ ராகத்தில் அமைந்த லால்குடி ஜெயராமனின் தில்லானாவில் நிறைவுற்ற இசை நிகழ்ச்சி அது. கச்சேரி இலக்கணத்திலிருந்து சிறிதும் வழுவாமல் அன்றுமுதல் இன்றுவரை பாடிவரும் ஒருசில இசைக் கலைஞர்களுள் சுதா ராகுநாதனும் ஒருவர்.

இசைக் கச்சேரியில் முக்கிய இடம் பிடிப்பது ராகம் - தானம் - பல்லவி என்ற அம்சம். ஆனால், இப்போதெல்லாம் காலம், நேரம், இடம் கருதிப் போலும் அந்த அம்சம் அருகிவருகிறது. இந்தக் கச்சேரியும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், கரஹரப்பிரியா ராகம் மிக அழகாக மேடையிலே விஸ்வரூபம் எடுத்தது. தொடர்ந்துவந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் "சக்கனி ராஜ..." கீர்த்தனையும், கல்பனா ஸ்வரக் கோர்வைகளும், அதைத் தொடர்ந்த தனியாவர்த்தனமும் அந்தக் குறையை நீக்கி, கச்சேரியை நிறைவாக்கின.

கச்சேரிக்கு மகுடமாய் அமைந்தது வேறொரு கீர்த்தனை. ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் ஆக்கம் அந்தக் கீர்த்தனை. '14 ராகங்களில் அமைந்த ஒரு கீர்த்தனையைப் பாடப்போகிறேன்; உங்களில் யார் அனைத்து ராகங்களையும் கண்டுபிடிக்கிறீர்கள் என்று பார்க்கலாம்' என்று ஒரு 'சவால்' விடுத்த பின், "ஸ்ரீ விஸ்வநாதம் பஜேகம்..." என்ற அந்தச் சதுர்தச ராக கீர்த்தனையைப் பாடினார் சுதா.

ஸ்ரீ, ஆரபி, கௌளரி, நாட்டை, கௌளை, மோகனம், சாமா, லலிதா, பைரவம், சாரங்கா, சங்கராபரணம், காம்போஜி, தேவக்கிரியா, பூபாளம் ஆகிய ராகங்கள் அவை.

வசந்தபைரவியில் ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் "நீ தயராதா..." என். எஸ். சிதம்பரம் உருவாக்கிய, மதுவந்தி ராகத்தில், "கண்டநாள் முதலாய்...", புரந்தரதாசரின் "ஜகதோதாரண..." என்ற காபி ராக (ஹிந்துஸ்தானி காபி என்பாரும் உண்டு) கீர்த்தனை ஆகியவை கச்சேரிக்கு மேலும் மெருகூட்டின.

பக்கவாத்தியமாக வயலின் வாசித்தவர் மத்தூர் ஸ்ரீநிதி என்பவர். இதற்கு முன்னர் கேட்டதில்லை. மிக அநுசரணையாக வாசித்தார். மிருதங்கம் எம். பாலசந்தர். கடம் பிரசன்னா தேவராஜா, மோர்சிங் செல்வன் தனுஜன். பின்னவர் இருவரும் பாலசந்தரின் மாணவர்கள் என்பதால், குருவும் மாணவர்களும் தனியை ஒரு கை பார்த்துவிட்டார்கள். அவையிலிருந்த மிருதங்க வித்வான் ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவின் பாராட்டையும் பெற்றார்கள்.

அரங்கு நிறைந்த அந்தக் கச்சேரியில், பாரதிய வித்ய பவனில் இசை பயிலும் மாணவர்கள் பலர் இருந்தமை

- க. ஜெகதீஸ்வரம்பிள்ளை





எம். எஸ். விஸ்வநாதன்

# தமிழிசையில் மெல்லிசை

**எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைத்த பாடல்கள் தமிழ் சினிமாவில் இறவா வரம்பெற்றவை**

பிங்காட்சன்

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள்.

இளையராஜா என்னும் இசைமேதை தமிழ்த்திரை இசையுலகில் கோலோச்சிக்கொண்டிருந்த காலம். எம். எஸ். விஸ்வநாதன் வாய்ப்புக்கள் குறைந்து, ஓய்வாக இருந்த காலம். அவரைச் சந்தித்து, அவருடைய படைப்புகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

குறிப்பாக, 'கர்ணன்' படத்தின் பாடல்களைப்பற்றியும், கண்ணதாசனின் சொல் அடிக்கு ஏற்பவும், கதையின் சூழலுக்கு ஏற்பவும் அவர் இசை அமைத்த பாடல்கள் என்றுமே இறவா வரம்பெற்றவை என்றும் குறிப்பிட்டேன்.

மௌனமாக என்னைச் சில நொடிகள் பார்த்தார்.

"உண்மையாகவா சொல்கிறீர்கள்?'' என்றார்.

கண்களில் கண்ணீர்.

அருமை நண்பர் கண்ணதாசனை நினைத்துக் கண்ணீர்விட்டாரா அல்லது இளையராஜாவின் வரவினால், ஒதுக்கப்பட்டு விட்டேனோ என்ற



எம். எஸ். விஸ்வநாதன், இளையராஜா, ஏ. ஆர் .ரஹ்மான்

படங்கள்:
'கலைமாமணி' யோகா

## 'விஸ்வநாதன் இசை அமைப்பு எனக்கு ஒரு சவால்'
**- சிவாஜி கணேசன்**

ஆற்றாமையினால் கண்ணீர்விட்டாரா என்று தெரியவில்லை.

அதன் பின்னர், பல ஆண்டுகளுக்குப் பிறகு பேட்டி ஒன்றுக்காக அவரைச் சந்தித்தேன். எந்தத் தயக்கமும் வருத்தமுமின்றி, விரிவாகப் பேசினார்.

எம். எஸ். விஸ்வநாதன் ஒப்பற்ற படைப்பாளி என்பதை எவருமே மறுக்கமுடியாது. கேரளாவில் எளிய குடும்பத்தில் பிறந்து, கர்நாடக இசையை முறையாகப் பயின்று, மேடைக் கச்சேரியும் செய்தவர். மலையாளி என்றாலும், தமிழ்த் திரையில்தான் அவர் பெரும் புகழ்பெற்றார்.

வறுமை காரணமாக, கிணற்றில் வீழ்ந்து உயிரைவிடத் துணிந்த அவரைக் குடும்பத்தினர் தக்க சமயத்தில் காப்பாற்றியது நாம்பெற்ற பெரும்பேறு.

ஆரம்பகாலத்திலிருந்தே இசையில் ஆர்வம் கொண்டவர். அப்பொழுது, ஹிந்தி திரை இசையில் முடிசூடா மன்னராக விளங்கிய நௌஷத் இசை அமைத்த பாடல்களால் ஈர்க்கப்பட்டு, ஊரில் இருந்த தேநீர்க்கடைக்கு அப் பாடல்களைக் கேட்பதற்காகவே அடிக்கடி சென்று, கிராமபோனில் அவற்றைக் கேட்பது வழக்கம் என்று கூறினார்.

எஸ். எம். சுப்பையா நாயுடு என்ற இசை அமைப்பாளரிடம் ஆபீஸ் பையனாக வேலைசெய்துவந்தார். அவருடைய ஹார்மோனியத்தைத் துடைப்பது, அவருக்குப் பணிவிடை செய்வது ஆகியவை.

எஸ். எம். சுப்பையா நாயுடு அக் காலகட்டத்தில் புகழ்பெற்று விளங்கியவர். (நாடோடி மன்னன், மலைக்கள்ளன் போன்ற படங்களுக்கு இசையமைத்தவர்.) அபிமன்யு என்ற திரைப்படத்துக்காக அப்போது அவர் இசையமைத்துக்கொண்டிருந்தார். அவர் இல்லாத நேரத்தில் விஸ்வநாதன் ஒரு மெட்டை அமைத்தார். எந்த மெட்டுமே சரியாக அமையாமல் தவித்துக்கொண்டிருந்த சுப்பையா நாயுடுவுக்கு அந்த மெட்டு பிடித்துப்போனது. அதே மெட்டை அபிமன்யு படத்தில் பயன்படுத்தி, "புதுவசந்தமாமே வாழ்விலே இனிப் புதிதாய் மணமே பெறுவோமே...'' என்ற காதல் பாட்டை ஒலிப்பதிவு செய் தார். அந்தப் பாடல் பெரும் வெற்றிபெற்றது. ஆனால், அபிமன்யு படத்தில் விஸ்வநாதனின் பெயர் இடம்பெறவில்லை.

பின்னர், ஜுபிட்டர் பிக்சர்ஸ் நிறுவனம் சென்னைக்கு இடம்மாறியபோது, சுப்பையா நாயுடுவின் பரிந்துரையால் விஸ்வநாதனுக்கு அதில் பணி செய்ய வாய்ப்பு கிடைத்தது. அந்த அறிமுகத்துக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், சுப்பையா நாயுடு இறந்தபொழுது அவருடைய இறுதிச் சடங்குகளை விஸ்வநாதன் செய்தார்.

விஸ்வநாதன் முதலில் இசையமைத்த படம் ஜெனோவா. எம். ஜி. இராமச்சந்திரனும் பி. எஸ். சரோஜாவும் நடித்தது. 'ஹார்மோனியம் துடைத்துக்கொண்டிருந்த பையனுக்கு இசையைப்பற்றி என்ன தெரியும்' என்று நினைத்த எம். ஜி. ஆர்., முதலில் விஸ்வநாதன் அந்தப் படத்துக்கு இசையமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். என்றாலும், அதைப் பொருள்படுத்தாமல், பட முதலாளி விஸ்வநாதனைக்கொண்டே இசையமைப்புச் செய்தார்.

விஸ்வநாதன் வருவதற்கு முன்னர் ஜி. ராமநாதன் என்ற இசையமைப்பாளர் புகழ்பெற்று விளங்கினார். பாபநாசம் சிவன் பாடல் எழுத, ஜி. ராமநாதன் இசை அமைக்க, எம். கே. தியாகராஜ பாகவதர் பாட எத்தனையோ படங்கள் பாட்டுக்களுக்காகவே ஓடின.

பெரும்பாலும், கர்நாடக இசையின் அடிப்படையிலேயே பாடல்கள் அமைந்திருந்தன. அந்தக் காலகட்டத்தில், சி. ஆர். சுப்பராமன் என்ற இசையமைப்பாளர் மணமகள், தேவதாஸ் போன்ற படங்களுக்கு இசையமைத்துவந்தார். அவரிடம் உதவியாளராகச் சேர்ந்தார் விஸ்வநாதன். தேவதாஸ் படத்துக்கு இசையமைத்துக்கொண்டிருந்தபோது, பாதியில் சி. ஆர். சுப்பராமன் காலமானார். ராமமூர்த்தியுடன் இணைந்து விஸ்வநாதன் அந்தப் படத்தின் இசையமைப்பை முடித்துக்கொடுத்தார்.

பின்னர், விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் இணைந்து படங்களுக்கு இசையமைக்கத் தொடங்கினார்கள். பீம்சிங் இயக்கத்தில் வெளிவந்த பதிபக்தி என்ற படத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல் வரிகளுக்கு விஸ்வநாதன் - ராமமூர்த்தி அமைத்த இசை இன்று கேட்டாலும்

# ‘ஹார்மோனியம் துடைத்துக்கொண்டிருந்த பையனுக்கு இசையைப்பற்றி என்ன தெரியும்’ -எம். ஜி. ஆர்



உள்ளத்தைக் கவர்வதாகவே இருக்கிறது.

“சின்னஞ்சிறு கண்மலர்...'', “கொக்கரக்கொக்கரக்கோ சேவலே...'', “வீடுநோக்கி ஓடிவந்த நம்மையே...'' ஆகிய பாடல்கள் ஒலிக்காத இடமே இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

பீம்சிங்கின் ‘ப’ வரிசைப் படங்கள் அனைத்துக்குமே விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஜோடிதான் இசை அமைத்தது. ‘பாவமன்னிப்பு’, ‘பாசமலர்’, ‘பார்த்தால் பசிதீரும்’, ‘பார் மகளே பார்’, ‘பாலும் பழமும்’ ஆகிய இப் படங்கள் வெற்றி பெற, அவற்றில் இடம்பெற்ற பாடல்களும் காரணம் என்பதை மறுக்கமுடியாது.

நாடக மேடையின் தொடர்ச்சியாகவே தமிழ் சினிமாவும் பார்க்கப்பட்ட காலம் அது. எனவே, ‘மைக்’ இல்லாத நாடகங்களைப்போல, திரைப்படங்களிலும் உரத்துப்பேசி நடித்தால்தான் எடுபடும்; ஓங்கிக் குரல் எடுத்துப் பாடினால்தான் பாட்டு வெற்றிபெறும். கர்நாடக இசையில்தான் பாடல்கள் அமையவேண்டும் என்ற கருத்து ஆழமாக வேரூன்றியிருந்த காலம் அது. அந்த மரபை உடைத்து, தமிழ் சினிமாவில் உண்மையிலேயே மெல்லிசையைப் புகுத்தியவர்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்திதான்.

‘பொலீஸ்காரன் மகள்’ என்ற படத்தில் காதலர்கள் பாடும் பாட்டு, அது. “மென்மையாக - தம்பூரா மீட்டுவது போல இருக்கவேண்டும்’ என்று இயக்குநர் ஸ்ரீதர் கூறினார். ‘தம்பூரா மீட்டுதல்போல’ என்ற சொற்கள் என் மனதில் பதிந்துவிட்டன. இரண்டு நாள்கள் தம்பூராவின் ஒலியைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தேன். அப்படி உருவானதுதான் “பொன் என்பேன் - ஒரு பூவென்பேன்...'' என்ற பாட்டு'' என்றார் எம். எஸ். விஸ்வநாதன்.

மிகவும் கீழ் ஸ்தாயியில் அமைத்தாலும், மெட்டு நன்றாக இருந்தால் ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பது விஸ்வநாதனின் கருத்து. அதற்கு இந்தப் பாட்டு உதாரணமாகும். திரை இசை உண்மையிலேயே மெல்லிசை என்று காட்டிய விஸ்வநாதன் - ராமமூர்த்திக்கு ‘மெல்லிசை மன்னர்கள்’ என்று பட்டமளித்தவர் சிவாஜி கணேசன்.

விஸ்வநாதன் காலத்தில் இன்று இருப்பவைபோன்ற தொழில்நுட்ப வசதிகள் இல்லை. இன்று, ஒவ்வோர் இசைக் கருவியையும் தனித்தனியாக ஒலிப்பதிவு செய்து, பின்னர் ஒன்றாக இணைக்கலாம். பாடுபவர்கூட அவருக்கு நேரம் கிடைக்கும்போது தனியாகவந்து பாடி ஒலிப்பதிவுசெய்து இணைக்கலாம். அப்பொழுதெல்லாம் அப்படிப்பட்ட வசதிகள் கிடையாது. பாடகரின் பாட்டு, இசைக் கருவிகள் எல்லாவற்றையும் ஒரு நேரத்தில் ஒருங்கிணைத்து ஒலிப்பதிவு செய்யவேண்டும். விஸ்வநாதன் அந்தச் சூழலிலும் ஏராளமான இசைக் கருவிகளைக்கொண்டு ஒலிப்பதிவு செய்தார். ‘சிவந்த மண்’ என்ற படத்தில் எல். ஆர். ஈஸ்வரி பாடிய “பட்டத்து ராணி...'' பாடலில் 120 இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்த் திரை இசையில் ‘எக்கோர்டியன்’ என்ற இசைக் கருவியை மிக அழகாக பயன்படுத்தியவர் விஸ்வநாதன்தான். ‘பாவமன்னிப்பு’ என்ற படத்தில், “அத்தான் என் அத்தான்...'' என்ற பாட்டில் மிக அற்புதமாக அந்த இசைக் கருவியை பயன்படுத்தினார்.

“போனால் போகட்டும் போடா...'' என்ற சாகாவரம் பெற்ற - சாவைப்பற்றிக் கூறும் பாட்டில், சுடுகாட்டுச் சூழலை இசை வடிவில் தருவதற்காக ‘சதன்’ என்ற ‘மிமிக்ரி’ கலைஞரின் குரலைப் பயன்படுத்தியது அவருடைய கற்பனைத் திறனுக்கு சான்று.

விஸ்வநாதன் - ராமமூர்த்தி இருவரும் இசையமைத்தாலும், இருவரும் பிரிந்தபின்னர் விஸ்வநாதன் மட்டுமே நிலைத்து நின்றார் என்பதைப் பார்க்கும்போது, இருவரில் விஸ்வநாதனின் பங்களிப்பே சிறந்தது என்று எண்ணத் தோன்றுகிறது. எனவேதான், விஸ்வநாதன் என்று மட்டுமே குறிப்பிடத்தோன்றுகிறது.

சாஸ்திரீய சங்கீதத்தின் அடிப்படையில் இசை அமைத்தாலும், அதை மெல்லிசையாக்கி, பாமரனும் ரசிக்கும்படி அள்ளித் தந்தார். உதாரணமாக, கர்ணன் படத்தின் பாடல்களைக் குறிப்பிடலாம்.

கர்ணன் சூரியனுக்கு வழிபாடு நடத்தும்போது பாடும் ராகமாலிகை - “ஆயிரம் கரங்கள் நீட்டி...'' என்று தொடங்கி, வேதகோஷம்போல ஒலிப்பது - இவற்றை பாமரரும் ரசித்துப் போற்றினர். “உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது...'' என்ற பாட்டை ஆஹிர்பைரவியில் - அது ஓர் ஹிந்துஸ்தானி ராகம் -, அமைத்திருந்தார். தேரடியில் அடிபட்டுக் கிடக்கும் சிவாஜியின் நடிப்பும், அந்தச் சூழலும், பாட்டும்,





கடைசியில் பாட்டை *fade out* செய்த நேர்த்தியும் - அது ஓர் அமர காவியம்.

கர்ணன் தன் மனைவியை மாமனார் வீட்டிலிருந்து திரும்ப அழைத்துச்செல்ல வருகிறான். 'தேரோட்டி மகன்' என்று அவமானப்படுத்தப்பட்டுத் திரும்புகிறான். அடிபட்ட வேங்கையாக சிவாஜி கர்ஜிக்கும் காட்சி. உரக்கக் குரலெடுத்து கோபத்தைக் காட்டியபின், மென்மையாக, மயிலிறகால் வருடுவதுபோல் அவனை ஒரு பாடல் தேற்றுகிறது; பார்ப்பவருக்கே நெஞ்சில் அமைதி ஏற்படுகிறது. "கண்ணனுக்குக் குலமேது..." பகாடி ராகத்தில் அமைந்த பாடல், இனிய குழலிசையுடன் தொடங்குகிறது.

"எங்கே நிம்மதி..." என்ற பாட்டை ஒலிப்பதிவுசெய்து படப்பிடிப்பைத் துவங்குமுன், அந்தப் பாட்டைக் கேட்ட சிவாஜி கணேசன், படப்பிடிப்பை மூன்று நாள்களுக்கு ஒத்திப்போடச் சொன்னாராம். 'விஸ்வநாதன் மிக அழகாகப் போட்ட பாட்டு; இது, எனக்கு ஒரு சவால். அதற்கு ஏற்ப நான் நடிக்கவேண்டாமா?' என்று அதற்குக் காரணம் சொன்னார், சிவாஜி.

அவருடைய இசையமைப்பை வைத்தே, 'இது, சிவாஜி கணேசன் பாட்டு; இது, எம். ஜி. ஆர். பாட்டு' என்று கூறிவிடமுடியும்.

எம். ஜி. ஆருக்கென போடப்படும் பாட்டுக்களில் ஆண்மை, வீரம், 'நான்' என்ற ஆணவம் தொனிக்கும். "நான் ஆணையிட்டால்...", "நினைத்ததை நடத்தியே முடிப்பவன்..." போன்ற பாடல்களை உதாரணமாகக் கூறலாம். விதிவிலக்காக, "விழியே கதை எழுது..." போன்ற மென்மையான பாடல்களும் உண்டு.

**சாகா வரம்பெற்ற பாடல்கள் இருக்கும்போது, வேறு விருது அவருக்கு எதற்கு?**

சிவாஜிக்கு என்று அவர் இசையமைத்த பாடல்களில்தான் எத்தனையோ வகைகளை - நவரசங்களையும் காணமுடியும்.

காதலும், கணவன் - மனைவி நேசமும், அன்பும் வெளிப்படவேண்டுமா? "நான்பேச நினைப்பதெல்லாம்...". "ஆலய மணியின் ஓசையை நான் கேட்டேன்..." என்ற பாட்டைக் கேட்கும்போது, கள்ளமற்ற இளம் மனைவியின் தூய அன்பும் மகிழ்ச்சியும் எப்படி வெளிப்படுகின்றன...?

"ஆறுமனமே ஆறு...", "கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா..." ஆகிய தத்துவப் பாடல்களுக்கென்று தனியான இசை.

மறுபிறவிபற்றிய கதையில் வரும் "நெஞ்சம் மறப்பதில்லை..." உண்மையிலேயே மறக்கமுடியாத மெட்டு.

இறந்துபோன முதல் மனைவியையே நினைத்திருக்கும் கணவனிடம், அவளுடைய ஆவியே ஆறுதல் கூறுவது போல அமைந்த "மன்னவனே வர்லாமா..." என்ற பாட்டு.

மறுமணம் செய்துகொள்ளுமாறு நோயாளிக் கணவன் கூறும்போது, மனமுடைந்து மனைவி பாடும் "சொன்னது நீதானா..." என்ற பாட்டும், அந்த உணர்வைக் காட்ட சித்தார் வாத்தியத்தை அதிகம் பயன்படுத்திய பாங்கும் விவரிக்க இயலாதவை.

"நீரோடும் வைகையிலே..." என்ற தாலாட்டில் சீட்டி (சீழ்க்கை) ஒலியையும், "பாலிருக்கும் பழமிருக்கும்..." என்ற பாட்டில் *humming*ஐயும் மிகத் திறமையாக பயன்படுத்தியிருக்கிறார்.

நாட்டுப்புற பாணியில் பாட்டு வேண்டுமா? "தாழையாம் பூ முடிச்சு தடம் பார்த்து நடைநடந்து..."; தூத்துக்குடி வட்டார வழக்கில் "முத்துக்குளிக்க வாறீகளா..."; அராபிய இசை போல, "பட்டத்து ராணி...", "நினைத்தேன் வந்தாய்..." இப்படி, சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்தியாவில் திரைத்துறையில் வாழ்நாள் சாதனைக்கான 'பாட்கே' விருது அவருக்கு அளிக்கப்பட்டிருக்கவேண்டும். ஏன், ஒரு 'பத்மஸ்ரீ' விருதுகூட அவருக்குக் கிடைக்கவில்லை.

மக்களின் பாராட்டே விருது என்றார் ஒருமுறை.

ரசிகர்களின் நெஞ்சில், "மாலைப்பொழுதின் மயக்கத்திலே...", "மலர்ந்தும் மலராத பாதி மலர்போல..." என்று இப்படி, சாகா வரம்பெற்ற பாட்டுக்கள் இருக்கும்போது, வேறு விருது அவருக்கு எதற்கு? ■

சினிமா

‘விம்பம்’
8ஆவது
குறுந்திரைப்பட விழா

# ஒரு நீண்ட பாய்ச்சல்


Silent Tears

**முழுநீள திரைப்படங்களில் சாத்தியப்படுத்த முடியாமல்போகின்ற அநேக விடயங்கள் குறுந்திரைப்பட வடிவத்துள் சாத்தியமாகின்றன**

**கோகுலரூபன்**

தென் இந்திய தமிழ் சினிமா என்பது வெறும் பொழுது போக்கை மையப்படுத்தியதாக, யதார்த்தத்தை புறமொதுக்குவதாக, லாபத்தைமட்டும் நோக்காகக்கொண்டதாக, கற்பனைப் புனைவுகள் நிறைந்ததாக இருந்துவருகின்றது. மிகச்சில காத்திரமான முழுநீளப் படங்கள் வெளிவந்துதான் உள்ளன என்றாலும், அவற்றை ஒட்டியதான கலையாக்கம் தமிழ் சினிமாத்துறையின் பொதுப் பண்பாக உருவாகிவிடவில்லை. கதாநாயகன், கதாநாயகி, வில்லன் என, மிகக் குறுகிய எல்லைக்குள் சுழன்றுகொண்டிருக்கும் தமிழ் சினிமா, அதற்கு வெளியில் எதனையும் பார்க்க மறுக்கிறது. திரைப்படம் அதிக பொருட்செலவு மிக்க கூட்டுக் கலையாக உள்ள தன்மையால், வர்த்தக நோக்கம்கொண்ட ஒரு பெரு வணிகத் துறையாக மாறியுள்ள தமிழ் சினிமா, ஒரு முதலாளித்துவ கலையாகவே உள்ளது.

இதற்கு எதிர்மாறாக ஈழத்திலும், புலம்பெயர் நாடுகளிலும், தமிழ் நாட்டிலும் உருவாக்கப்படும் அநேக குறும் படங்கள் அதீத சமூகச் சார்பும், யதார்த்தப் பண்பும், தர்க்க ரீதியான உண்மைத்தன்மையும் கொண்டனவாக உருவாக்கப்படுகின்றன. திரைமொழியின் அர்த்த முழுமை காவுகொள்ளப்படாது இவை காப்பாற்றிவருகின்றன. திரைக்குள் சாத்தியமில்லை என, பொதுப் புத்தியில் அறையப்படுகின்ற வாழக்கையின் பன்முகத்தன்மைகளை தமிழ்க் குறும்படங்கள் பேசுகின்றன. இவை எடுத்தாளும் வாழ்வியல் மிக அகன்றது. அவற்றின் சிந்தனை எல்லைகள் மிகவும் விசாலமானவை.

முழுநீளத் திரைப்படங்களில் சாத்தியப்படுத்த முடியாமல்போகின்ற அநேக விடயங்கள் குறுந்திரைப்பட வடிவத்துள் சாத்தியமாகின்றன. உதாரணமாக, ‘வன்னி எலி’- *Vanni Mouse* (தமிழியம் சுபாஸ்), ‘மௌன கண்ணீர் துளிகள்’-*Silent Tears* ‘துளிகள்’ (இளங்கோ ராம்), 18 ‘தீக்குச்சிகள் *18 Sticks* (மணிமாறன்) போன்ற படங்கள் பார் வையாளனிடத்து ஏற்படுத்துகின்ற அதிர்வு, அப்படங்கள் தெரிவு செய்து கொண்ட ஆக்கியல் தன்மையால் சாத்தியமாகிறது. இவை சொல்ல முனையும் செய்திகளை நீளசினிமாவில் சாத்தியப்படுத்துவது, நிகழ்வுசார் களத்தைப் பொறுத்தவரையில் சாத்தியமற்றது.

தமிழில் ஜனரஞ்சக சினிமா பாணியிலான குறும்படங்கள் உருவாக்கப்படாமலும் இல்லை. கலைஞர்


ஏன் இஞ்ச வந்தனி


திணிப்பு


பகடை

தொலைக் காட்சியின் 'நாளைய இயக்குநர்' எனும் நிகழ்ச்சியில், இளம் இயக்குநர்கள் இவ்வாறான ஜனரஞ்சக சினிமாக்களை உருவாக்கும்படியே வேண்டப்பட்டனர். இவ்வாறான படங்களை வசதிக்காக 'குறும் சினிமா' என்று அழைத்துக்கொள்ளலாம். (தமிழ் மக்களிடத்தில் 'சினிமா' என்கின்ற பதம் பொதுவில் கொண்டுள்ள அர்த்தத்தை மனங்கொண்டு இவ்வாறு கூறலாம்.)

குறுந்திரைப்பட வடிவம், ஈழத் தமிழ் படைப்பாளிகளால் மிகப் பொருத்தமான திரைக் கலையாக பல ஆண்டுகளுக்கு முன்னமே நன்கு உணரப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' அமைப்பு பல குறும்படங்களையும், முழுநீளப் படங்களையும் உருவாக்கி வெளியிட்டிருக்கிறது. இவை, அக்காலத்தில் மக்களிடத்தில் பெரிதும் செல்வாக்கைப்பெற்றன. ஈழத்தில் குறுந்திரைப்படங்களின் செல்வாக்கு 20 வருடகாலத்துக்கு முன்பிருந்தே இருந்துவந்தாலும், இன்று அவை பலவகைகளிலும் முதிர்ச்சி பெற்றுவருவதைக் கண்டுகொள்ளமுடிகிறது.

ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் தயாரிக்கப்படும் குறுந்திரைப்படங்களின் உயிர் மையம், சமுகச் சார்புதான். யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியிலும், முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னரான இன்றைய காலம் வரையிலும் யுத்தமும், அதன் கோர விளைவுகளும், நெருக்குதல்களும் என, மக்கள் சார்ந்த பிரச்னைகளே இக் குறும் படங்களின் பேசுபொருளாகும். புலம்பெயர் நாடுகளில் அகதிகளாய் குடிபெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளும், மனப் பிறழ்வுகளும், சமூக அழுத்தங்களும் யுத்தத்தின் விளைவுகளே.

இன்று, ஈழத்தில் உருவாகும் படைப்புகள்கூட யுத்தத்தின் அவலத்தைச் சாத்தியமான வழிகளில் சொல்ல முற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. மௌன கண்ணீர் துளிகள் இவ்வகையில் மிக முக்கியமானதொரு படைப்பாகும். மற்றும்படி, வெளிவருகின்ற அநேக படங்கள், சுற்றியுள்ள சமூக நெருக்கடிகளையும் அவலங்களையும் பதிவு செய்துகொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறு, மக்களுடைய அவலங்களைப் பிரக்ஞை பூர்வமாக தமது படைப்புகளில் கொண்டுவருகின்ற படைப்பாளிகள் சொந்த மக்களாலேயே கைவிடப்படுகின்றனர். திரைப்படக் கலைசார் படைப்பாளிகளை மறு ஆக்கம் செய்வதுபற்றிய பிரக்ஞை ஈழத்துத்தமிழர்கள் மத்தியில் மிக அடிநிலையிலேயே உள்ளது. அவர்களிடத்தில் வளர்த்துவிடப்பட்டிருக்கும் ஜனரஞ்சக சினிமா ரசனை, காத்திரமான

படைப்புகள் குறித்த கரிசனையை இல்லாது செய்துள்ளது.

ஒப்பீட்டு ரீதியில் குறுந்திரைப்படங்களின் தயாரிப்புச் செலவு, முழுநீளத் திரைப்படங்களின் தயாரிப்புச் செலவைவிட பலமடங்கு குறைவாக இருந்தாலும், குறித்த படைப்புக்களை ஆக்குகின்ற படைப்பாளிகளைப் பொறுத்தவரையில், தயாரிப்புச் செலவுகள் அவர்களுக்கு மிகப்பெரிய சுமையை ஏற்படுத்துகின்றன. மீண்டும் மீண்டும் படைப்புகளை உருவாக்குவது அவர்களுக்கு மிகப்பெரிய சவாலாகவேயுள்ளது. இருப்பினும், திரைக் கலையில் அவர்கள் கொண்டிருக்கும் ஈடுபாடும், அவாவும் அவர்களை இவ்வளவு சிரமங்களின் மத்தியிலும் படைப்புக்களைத் தொடர்ச்சியாக தரச்செய்கிறது.

இந் நிலையில், குழுக்களாக ஆங்காங்கே மிகச்சிறிய அளவிலாக இருந்து செயல்படும் அமைப்புகளால் நடாத்தப்படும் குறுந்திரைப்படப் போட்டிகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள், இப் படைப்புக்களுக்கான அங்கீகாரத்தையும், பொதுமக்கள் அபிமானத்தையும் உருவாக்க முயற்சித்து வருகின்றமை மிக முக்கியமானது.

இன்று, குறும்படம் ஒரு செல்வாக்குமிக்க திரைக் கலையாக உருவாகிவருவதில் 'விம்பம்' அமைப்புக்கும் முக்கிய பங்குண்டு. விம்பம் அமைப்பின் குறுந்திரைப்பட விழா மிக முக்கியமான தொன்றாகவே குறுந்திரைப்படத் துறைசார்ந்த கலைஞர்களாலும், ஆர்வலர்களாலும் அவதானிக்கப்படுக்கின்றது. விம்பம் அமைப்பால் வழங்கப்படும் விருதுகள் தமக்கான காத்திரமான அங்கீகாரமாக கலைஞர்கள் கருதிவருவதும் குறிப்பிடத்தக்கதே.

பல சிரமங்களுக்கு மத்தியில் கடந்த பன்னிரண்டு வருடங்களில் 8 தடவைகள் சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழாவை விம்பம் அமைப்பு சிறப்பாக நடத்தி முடித்திருப்பது முக்கியமானதாகவே நோக்கப்படுதல்வேண்டும். விம்பம் அமைப்பின் தமிழ்க் குறுந்திரைப்பட விழா, படைப்புக்களுக்கும் படைப்பாளிகளுக்கும் குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தை வழங்கிவருவதோடு மட்டுமன்றி, குறைந்தளவிலான மக்கள் மத்தியில் என்றாலும் திரைரசனை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுதிவருவதும் கண்டுகொள்ளப்படவேண்டியதாகும்.

விம்பம் திரைப்பட விழாக்களில்



செத்த பின்

காண்பிக்கப்படும் குறுந்திரைப்படங்கள்மீதான தொடர்ச்சியான அவதானம், தமிழ்க் குறுந்திரைப்படங்களின் வளர்ச்சி, அவற்றின் புதிய பரிமாணம், தேய்வு நிலை என, தமிழ்க் குறுந்திரைபடக் கலையின் செல்நெறிகுறித்த பருமட்டான பார்வையை நிச்சயம் ஏற்படுத்தும்.

இந்த ஆண்டு நடைபெற்ற லண்டன் விம்பம் அமைப்பின் 8ஆவது குறுந்திரைப்பட விழாவில் சிறப்பு விருந்தினராக அமெரிக்க மிச்சிகன் பல்கலைக் கழகத்தின் திரைத்துறைப் பேராசிரியரும், ஆவணப் பட இயக்குநருமான சொர்ணவேல் ஈஸ்வரன் கலந்துகொண்டிருந்தார். இவர் விம்பம் அமைப்பின் 8ஆவது குறுந்திரைப்பட விழாவின் திரைப்படங்களை தெரிவு செய்யும் நடுவர் குழுவின் தலைமை நடுவராக பணிபுரிந்ததோடு, விம்பம் அமைப்பு ஏற்பாடுசெய்திருந்த திரைப்பட பயிற்சிப் பட்டறையையும் சிறப்புற வழிநடத்தியிருந்தார்.

தமக்கு வந்த குறுந்திரைப்படங்களில் 54 படங்கள் புலம்பெயர் நாடுகளில் இருந்தும், தலா 25 படங்கள் ஈழத்திலும், தமிழகத்திலிருந்தும் வந்ததாகவும். முன்னைய திரைப்பட விழா அநுபவங்களை ஒப்பிடுகின்றபோது, பொருளியல் காரணங்களாலும் உபகரணப் பற்றாக்குறையினாலும் ஒப்பீட்டளவில் தொழில்நுட்ப ரீதியில் பின் தங்கியிருந்த ஈழ, தமிழக குறுந்திரைப் படங்கள், அந்த வெளியில் பாரிய பாய்ச்சலை நிகழ்த்தியிருப்பதாகவும், தொழில்நுட்ப ரீதியில் கடந்த காலங்களிலும் இன்றும் மிகுந்த நேர்த்தியைச் சாதித்த புகலிடக் குறும்படங்கள் இன்று புதிய திரைக் கருக்களைக் கண்டடைவதில் பின்னடைந்திருக்கின்றன என்றே சொல்லவேண்டும் என்றும் ஆனால், மறுபுறத்தில் ஈழ, தமிழக குறும்படக் கலைஞர்கள், திரைக்கரு சார்ந்து புதிய பரிமாணங்களை நோக்கி நகர்ந்திருப்பதை தம்மால் அவதானிக்க முடிந்ததாகவும் விம்பம் செயல்பாட்டாளர்கள் விழாவின் தொடக்க அறிமுகத்தில் தெரிவித்தனர்.

போட்டிக்காக அனுப்பபட்ட 104 குறும்படங்களில் விருதுகள்பெற்ற படங்கள் உள்ளிட்ட 13 படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. காட்சிப்படுத்தப்பட்ட படங்கள் யாவும் உள்ளடக்கம், சொல்முறைமை, படைப்புக் களம் என்கின்ற விடயங்கள் சார்ந்து ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டிருந்தன. இக் குறும்படங்கள், குறும்படத் திரைக்கலையின் பன்முகத்தன்மையை உணர்த்திநின்றன. விம்பம் அமைப்பின் திரைப்பட விழாவில் ஆண்டுதோறும் வெளியிடப்படும் சிறு கையேடு இம்முறையும் மிகக் காத்திரமான கட்டுரைகளைத்தாங்கி வந்திருந்தமையும் குறிப்பிட்டதக்கது. குறும் படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட வரிசையின் படி, அப் படங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய சுருக்கமான குறிப்புகளையாவது தருவதும் அவசியமானதே.

**வெள்ளம்** (விமல்ராஜ் - இலங்கை) வயதானவர்கள் குடும்பத்துக்கு

சுமையாக கருத்தப்பட்டு, பராமரிப்பின்றி கைவிடப்படும் சமூக அவலத்தை இப்படம் பேசுகிறது. அப்பாவித்தனமும், கருணை உள்ளமும் கொண்ட சிறுவனும், அவனுக்கு நேர் எதிரான தாயும் என இரண்டு பாத்திரங்களை முன்வைத்து கதை நகர்த்தப்பட்டுள்ளது. வெள்ளத்தின் மத்தியில் சிறுவன் பூனையைத் தேடும் காட்சி மிக நுட்பமாக, அகலமான திரைச் சட்டகத்துள் பதிவுசெய்யப்பட்டிருக்கும் தன்மை அக் காட்சிக்கு மேலும் அர்த்தத்தைச் சேர்க்கிறது.

**பகடை** (நிக்கொலஸ் ரங்கா - பிரான்ஸ்)

ஏனைய குறும்படங்களிலிருந்தும் இதன் சொல்முறைமை மிக வித்தியாசமானது. இதன் அளிக்கை முறைமையினால் இப்படம் ஒரு பரிசோதனை முயற்சியாகவும், புதிய பாய்ச்சலாகவும் கண்டுகொள்ளப்படவேண்டியது முக்கியமானதாகும்.

**ஏதிலிகள்** (பிரேம் கதிர் - லண்டன்)

யுத்த முடிவுக்குப் பின்னரும் முடியாது தொடர்கின்ற வாழ்வியல் நெருக்குதல்களின் ஒரு பகுதியைப் பேசுகின்றது. யுத்தத்துள் குழந்தையை பறிகொடுத்த தாயின் உடல் மற்றும் உளவியல் பாதிப்பும், புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வசிக்கும் அக் கணவன், மனைவி எதிர்கொள்ளும் வதிவிட உரிமை உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகள் குறித்தும் மிக வலுவாகப் பதிவுசெய்கிறது. இறுதிக் காட்சி மிகப்பெரும் அவலத்தையும், துயரமிகு அதிர்வையும் தருகின்றது. இயக்குநர் பிரேம் கதிர், மிகக் கவனமாகவே இதனைப் படைப்பாக்கம் செய்திருந்தார். தொழில்நுட்பம் மிக நேர்த்தியாக இந்தப் படத்தில் கையாளப்பட்டிருக்கிறது. இக் குறும்படம் நிகழ்வுக்கு வருகை தந்த பார்வையாளர்களினால் சிறந்த படமாகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திணிப்பு** (எஸ். சதீஸ் - பிரான்ஸ்)

குறும்படங்களின் சாத்தியப்பாடுகளில் ஒன்றாக கருதப்படும் குறியீட்டான உத்தியை மிகச் செம்மையாக கையாண்ட ஒரு படைப்பு. நிறவாதத்தை குழந்தைகளிடம் பெரியவர்கள் திணிக்க முயன்றாலும், குழந்தைகளின் உலகு நிறவாதத்தை நிராகரித்த, ஒற்றை நிறங்களைக் கடந்த வர்ணமயமானது, அப்பாவித்தனமானது என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

**இருளின் நிழல்** (பிரசன்னா - பிரான்ஸ்)


மாசிலன்


அடங்கா மதவி

அகதிகளாக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் தம் வேலையாட்களை ஏய்த்துப் பிழைக்கும் அபத்தத்தைப்பற்றிப் பேசுகிறது. இந்த இளைஞரகளின் அவலம் கேட்பாரின்றி மேலும் தொடர்கிறது என்ற செய்தியோடு படம் முடிகிறது.

**செத்தபின்** (எஸ். எம். பாஸ்கர் - பிரான்ஸ்)

புலம்பெயர் நாடுகளில் எங்கணும் காணமுடிகின்ற தனித்துவிடப்பட்ட சாதாரண அகதித் தமிழனின் வாழ்வைப் பேசுகிறது. எத்தனை நெருக்குதல்களுக்குள்ளும் அவனிடத்திலிருந்து அகன்றுவிடாத மனிதாபிமானமும், நோக்கற்ற தமிழ் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனமும் என, புலம்பெயர் இளம் சமூகத்தின் முரண்நிலைகளைப் பேசுகிறது இந்தத் திரைப்படம். இதில், பிரதான பாத்திரம் ஏற்று நடித்த கேசவன் ராமசாமி சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுக்கொண்டார்.

**ஏன் இஞ்ச வந்தனி** (என். எஸ். ஜனா - பிரான்ஸ்)

தமிழ் சமூகத்தின் சாதிய அடக்குமுறையும், பேரினவாத அடக்குமுறையும், பேரினவாதத்துக்கு பின்னால் நின்று முண்டுகொடுக்கும் ஏகாதிபத்திய அடக்குமுறையும் என, மூன்று பெரும் அடக்குமுறைகளுக்கு ஆட்ப

டுகின்ற தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் அவலத்தை ஓர் இளைஞனைக் குறியீடாக முன்னிறுத்திப் பேசுகிறார் இயக்குநர். மிக ஆழமான சமூக மற்றும் அரசியல் உண்மையை பிரக்ஞை பூர்வமாக குறும்படத்தில் சாத்தியப்படுத்த முனைந்திருப்பது மிக முக்கியமானதாகும்.

*Silent Tears* - **மௌன கண்ணீர் துளிகள்** (இளங்கோ ராம் - இலங்கை)

தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட சாட்சியமற்ற கொடூர யுத்தத்தினால் ஏற்பட்ட மனிதப் பேரவலத்தைப் பேசுகிறது. பதுங்கு குழிக்கு வெளியில் கேட்கும் தொடர்ச்சியான குண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள்மூலம் போரின் உக்கிரத்தை உணர்த்திய விதமும், இறந்த மகனின் உடலை வைத்துக்கொண்டு உரத்து அழமுடியாமல் தவிக்கும் தந்தையின் கையறு நிலையையைச் சித்தரித்த விதமும், கண் தெரியாத குழந்தையின் ஏதுமறியா பரிதவிப்பை வெளிக்கொணர்ந்த தன்மையும், ஷெல் வெடிக்கும் போது பங்கர இருளில் பரவி மறையும் வெளிச்சமும் என, பல அம்சங்கள் இப்படத்தில் குறிப்பிடும்படியாக இருந்தன. இப்படம், சிறந்த ஈழத்து திரைப்படமாக தெரிவுசெய்யப்படிருந்தது. இதில் நடித்த பீனா அசல்யா சிறீகுமார சிறந்த குழந்தை நட்சத்திரம் என்ற விருதையும், பிரயந்த மாளவிகே சிறந்த ஒளிபதிவாளர் விருதையும் பெற்றுக் கொண்டனர்.

**மாசிலன்** (சுஜித் ஜீ - லண்டன்)

புலம்பெயர் சூழலில் தமிழ்க் குடும்பங்களின் மணவாழ்வு பல்வேறு அக, புற காரணிகளால் நிச்சயமற்றுப்போவதையும், இதனால் இக் குடும்பங்களின் பிள்ளைகள் எவ்வாறான உளப் பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றனர் என்பதை இப்படம் பேசுகிறது. இப் பிரச்னை புலம்பெயர் தமிழர்களின் மத்தியில் மிக முக்கியமான சமூகப் பிறழ்வாக உருவாகிவரும் நிலையில், இவ்விடயம் பற்றிய மிக அழுத்தமான கலையாக்கம் என இதனைச் சொல்லலாம். தர்க்க ரீதியான காட்சித் தொடுப்புக்கள், லாவகமான திரைக்கதையமைப்பு, நேர்த்தியான ஒளிப்பதிவு என, பலவகைகளிலும் இப்படம் முக்கியமானதாகிறது. சிறந்த குறும்பட இயக்குநருக்கான விருதை இப்படத்தை இயக்கி நடித்த சுஜீத் ஜீ பெற்றுக்கொண்டார்.

**அடங்கா மதவி** (எஸ். எம். பாஸ்கர் - பிரான்ஸ்)



சொர்ணவேல்

மேற்கத்தைய முதலாளித்துவ சமூக அமைப்பில் தான்தோன்றித்தனமாக வாழப் பழகிக்கொண்ட தமிழ்க் குடும்பங்களின் ஆண்களினால் அக்குடும்பங்கள் மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்படுகின்ற சமூக உண்மையை இப்படம் சித்தரிக்கிறது. தொழிற் சுமை, குடும்ப பராமரப்பு, கணவனின் குடிப் பழக்கம், தீய நடத்தை, கணவனை நியாயப்படுத்தும் உறவுகளின் வசவு மொழி என்று, இவற்றுக்கிடையில் அலைந்துழலும் பெண்ணின் அன்றாட போராட்டமும் ஒரு கட்டத்தில் எல்லை மீறிய நிலையில், அவள் துணிந்து எடுத்த நிர்ப்பந்திக்கப்பட்ட முடிவும் என, படத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை அனைத்தும் தர்க்கரீதியாக நன்கு தொடர்புறுத்தப்பட்டுள்ளது. திரைக்கதை, ஒளிப்பதிவு, நடிகர்கள் என, பல அம்சங்கள் இப்படத்தை முழுமைப்படுத்தியுள்ளன. இப்படத்தில் பிரதான பாத்திரத்தில் நடித்த மரியன்ட் பிரபாகரன் சிறந்த நடிகைக்கான விருதையும், இதன் படத் தொகுப்பாளர் சங்கர தேவன் சிறந்த படத்தொகுப்பாளர் விருதையும், சிறந்த திரைக்கதைக்கான விருதையும், சிறந்த புலம்பெயர் குறும்படத்துக்கான விருதையும் இப்படத்துக்காக இதன் இயக்குநர் ஞ. ஆ. பாஸ்கி பெற்றுக்கொண்டார். பார்வையாளர்களால் சிறந்த படமாக தெரிவுசெய்யப்பட இரண்டு படங்களில் இதுவும் ஒன்று.

**பங்களா நாய்** (மணிமாறன் - இந்தியா)

தமிழகத்திலிருந்து வெளிவந்த இப்படைப்பு, நிகழ்வில் கலந்துகொண்ட பார்வையாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்த படங்களில் ஒன்று. சேரிச் சிறுவன் ஒருவனின் கானாப் பாட்டின் பின்னணியோடு கதை நிகழும் களம் அறிமுகமாகிறது. மேலிருந்து கீழ் நோக்கி கணிசமான உயர நிலையில் வைத்து கமராவை நகர்த்தி ஆரம்பக் காட்சி பதிவு செய்யப்படுள்ள தன்மை மிக அலாதியான அநுபவத்தை ஏற்படுத்தியது. சேரிப்புறத்தில் வாழும் சிறுவர்களின் வாழ்வியலை மிக நிதானமாக இப்படம் பதிவுசெய்கிறது. சிறந்த இந்திய தமிழ்க் குறும்படமாக இப்ப

டம் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

**ஆயா** (மகாவிதுரன் - இந்தியா)

உலகமயமாதலின் விளைவான நவீன சமுகத்தில், செயற்கையாக நிர்ப் பந்திக்கப்பட்ட வாழ்வு முறையோடு முன்னைய சந்ததி முரண்பட்டுக்கொள் ளும் சமுக யதார்த்தம் இதில் நன்கு பிர திபலிக்கிறது. கறாரான, குறும்புத்தன முள்ள, தந்திரமான வயோதிபப் பெண்ணை மையப்படுத்தி பல சமூக உண்மைகள் அழுத்தமாக பதிவு செய் யப்படிருக்கிறது. வயோதிபப் பெண் ணின் 'பீற்சா' சாப்பிடும் ஆசையும், அதைச் சுற்றிய நிகழ்வுகளும் மிகவும் சுவாரஷ்யமானவை.

**18 தீக்குச்சிகள்** (மணிமாறன் - இந்தியா)

இக் குறும்படம் பதிவு செய்துவிட் டுப்போகும் கனமான செய்தியும், ஏற்ப டுத்திவிடும் அதிர்வும் ஒரு பார்வையா ளனால் இலகுவில் தாங்கிக்கொள்ள முடியாதவை. இறுதி யுத்தத்துள் அகப் பட்ட அப்பாவித் தமிழர்களின் பேரவ லத்துக்கு நாம் எல்லோரும்தான் கார ணம் என்ற கசப்பான உண்மையை முகத்தில் அறைந்துவிட்டுப் போகிறது. தீக்குச்சிகள் ஒவ்வொன்றாகப் பற்ற வைக்கப்படும்போதெல்லாம் சொல் லப் படவிருக்கின்ற செய்தி குறித்த பட படப்பு நிச்சயம் பார்வையாளனி டத்தே தோன்றவே செய்கிறது. எது வுமே இல்லையென்றாகிப்போய்விட் டபின் 18 தீக்குச்சிகளும் ஒரு கமராவும் மட்டுமே எஞ்சிய பின்னர், குறைந்த பட்சம் தனது சாவு எமக்கெல்லாம் ஒரு குற்றவுணர்வையேனும் தரலாம் என முடிவு செய்து, தீ மூட்டிக்கொள்ளும் ஓர் ஈழத் தமிழனின் இருண்ட பதுங்கு குழியிலான மரணம் மிக நுணுக்கமாக பதிவு செய்யப்படுகிறது. இதன் சொல் முறைமை மிக வித்தியாசமானது. தமிழ்க் குறுந்திரைப்பட வெளியில் இப்படம் ஒரு புதிய பாய்ச்சல் என்றே சொல்லவேண்டும்.

நிறைவாக, பேராசிரியர் சொர்ண வேல், போட்டிக்கு வந்த படங்கள் தொடர்பில் தனது அவதானத்தை முன் னிறுத்தியும், திரைப்படக் கலையாக் கம்பற்றிய முக்கிய விடயங்களைச் சுட் டிக் காட்டியும் மிகக் காத்திரமான உரை ஒன்றை ஆற்றியிருந்தார்.

தமிழில் திரைப்படக்கலையை வளர்த்தெடுப்பதில் லண்டன் விம்பம் அமைப்பு மிகுந்த அர்ப்பணிப்போடு செயல்பட்டுவருவது முக்கியத்துவம் மிக்கது என குறிப்பிட்டார்.

இரண்டாம் உலக யுத்த முடிவுக்குப் பின், 1955இல் வெளிவந்த Night and Fog (Alain Resnais)என்ற குறு ஆவ ணப்படம் ஏற்படுத்திய அதிர்வுகுறித்து அவர் சுட்டிக்காட்டினார். அந்த ஆவ ணப் படம், நாசிகளின் சித்திரவதை முகாம்குறித்த உண்மையை பதிவு செய் யும் ஆவணம் என்பது குறிப்பிடத்தக் கது. இதேபோலவே ஏதிலிகள், மௌன விழித்துளிகள் போன்ற படங் கள் புனைவாக இருந்தாலும், ஒரு கால கட்டத்தின் பதிவாக விளங்குகின்றன எனக் குறிப்பிட்டார். புனைவுகளோ அல்லது அபுனைவுகளோ, அவை காலத்தைப் பதிவுசெய்வது முக்கியமா னது என்பது மனங்கொள்ளத்தக்கது.

ஒரு முழுநீளத் திரைப்படத்தைப் பார்ப்பதற்கு நாம் செலவழிக்கும் நேரத் துள் பலதரப்பட்ட அநுபவங்களை முன்கொண்டு தரும் அநேக குறும் படங்களைப் பார்க்கமுடிவது மிக அனுகூலமான விடயம் என்றும், இத்த கைய குறும்படங்களுக்கான தொடர்ச்சியான ஆதரவும் ஊக்குவிப் பும் அவசியம் என்றும் சொர்ணவேல் வலியுறுத்தினார்.

பகடை எனும் குறும்படத்தின் நேர் கோட்டுத்தன்மையற்ற சொல்மு றைமை ஒரு புதிய பாய்ச்சல் என்பதைச் சுட்டிக்காட்டியதோடு, அடங்கா மதவி, இருளின் நிழல், செத்தபின், மாசிலன் போன்ற படங்கள் புலம் பெயர் வாழ்வை நன்கு பதிவுசெய்திருப் பதாகவும் குறிப்பிட்டார். இதில், மாசி லன் படத்தின் திரைக்கதை அமைப்பு எவ்வாறு ஒரு முழு நீளப்படத்தின் வழிவந்த திரைக் கதையமைப்பை ஒத் துள்ளது என்பதை விளக்கிக் கூறினார்.

வெள்ளம் திரைப்படம், வீட்டை யும் வெளியையும் கலாபூர்வமாகக் காட்சிப்படுத்தியிருக்கும் தன்மையை விதந்துரைத்தோடு, மௌன விழித்துளி கள், ஏதிலிகள், 18 தீக்குச்சிகள் போன்ற படங்கள், குறிப்பிட்ட இடத்தில் நிகழ் வதான கதையை அல்லது சம்பவத்தை சித்தரித்திருந்தாலும், அவற்றின் பின்னே இனம் ஒன்றின் வரலாறு நீண்டு விரிகின்ற தன்மையை எடுத்துக் காட்டினார். ஏன் இஞ்ச வந்தனி என்ற குறும்படம், வரலாற்றை மிகுந்த புரித லுடன் பதிவுசெய்யும் திறனை பெரி தும் சிலாகித்துப் பேசினார்.

30 வருடங்களுக்கு முன்பு திரைப்ப டங்களைத் தயாரிப்பதிலும், காட்சிப் படுத்துவதிலும் காணப்பட்ட மிகப் பெரிய சவால்கள் அந்த அளவில் இன்று இல்லாது, டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் வருகை திரைப்படத் தயா ரிப்பையும், Google, You tube போன்ற இணைய ஊடகங்கள் காட்சிப் படுத்த லையும் இலகுவாக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஒளிபதிவுக்கு கொடுக்கின்ற முக்கி யத்துவத்தை ஒலிப்பதிவுக்கும் கொடுக் கவேண்டுமென இளம் படைப்பாளிக ளிடம் வேண்டுகோள் விடுத்த அவர், இனிமேலும் இவ்வாறன தவறுகளை நியாயப்படுத்த முடியாது என்வும் வலி யுறுத்தினார்.

ஆவணப் படங்களின் எதிர்காலம் குறித்து தனது பலத்த நம்பிக்கையை வெளிப்படுத்திய சொர்ணவேல், நகைச்சுவை உள்ளிட்ட, பன்முகத் தன் மையுள்ள படங்களை உருவாக்குவது அவசியம் எனவும் இளம் படைப்பாளி களைநோக்கி வேண்டுகோள் விடுத் தார். ■

**பரிசுகள்**

*1. சிறந்த புகலிட குறுந்திரைப்படம்: அடங்கா மதவி (எஸ். எம். பாஸ்கர்-பிரான்ஸ்)*
*2. சிறந்த நடிகர்: கேசவன் ராமசாமி (செத்தபின்)*
*3. சிறந்த ஈழத்து குறுந்திரைப்படம்: Silent Tears (இளங்கோ ராம்)*
*4. சிறந்த திரைப் பிரதி: எஸ். எம். பாஸ்கர் (அடங்கா மதவி)*
*5. சிறந்த இந்திய குறுந்திரைப்படம்: பங்களா நாய் (மணிமாறன்)*
*6. சிறந்த ஒளிப்பதிவாளர்: பிரியந்த மாளவிகே (Silent Tears)*
*7. சிறந்த குழந்தை நட்சத்திரம்: பீனா அசல்யா சிறீகுமார (Silent Tears)*
*8. சிறந்த படத்தொகுப்பாளர்: சங்கர தேவன் (அடங்கா மதவி)*
*9. சிறந்த நடிகை: மரியன்ட் பிரபாகரன் (அடங்கா மதவி)*
*10. சிறந்த நெறியாளர்: சுஜித் ஜீ மாசிலன்*

**பார்வையாளர்களிலிருந்து தெரிவு செய்யப்படும், சிறந்த குறுந் திரைப்படம்**

*1. ஏதிலிகள் (பிறேம் கதிர்-லண்டன்)*
*2. அடங்கா மதவி (எஸ். எம். பாஸ்கர்-பிரான்ஸ்)*

ஆஷஸ்' தொடர் - 2015

# ஆச்சரியமும் அதிர்ச்சியும்




## சாம்பரிலிருந்து உயிர்பெற்று இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 'ஆஷஸ்' தொடரை வென்றிருக்கிறது

சைபர் சிம்மன்

இங்கிலாந்து அணி சாம்பரிலிருந்து உயிர்பெற்று, அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 'ஆஷஸ்' தொடரை வென்றிருக்கிறது. இங்கிலாந்து அணியின் நோக்கில் பார்த்தால், இந்த வெற்றி ஓர் இனிய ஆச்சரியம். இங்கிலாந்து 'கப்டன்' அலிஸ்டர் குக்கே, இந்த வெற்றி நம்பமுடியாதது என வியப்பு தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய நோக்கில் பார்த்தால், இது ஓர் அதிரச்சி. இது, எந்த அளவுக்கு தீவிரமானதென்பது எதிர்வரும் மாதங்களில்தான் தெரியவரும்.

கிரிக்கெட் உலகைப் பொறுத்தவரை, ஆஷஸ் தொடர் என்பது வருடாந்த நிகழ்வுதான். ஆனால், மற்றைய எந்த இருதரப்பு டெஸ்ட் தொடருக்கும் இல்லாத பாரம்பரியமும் எதிர்பார்ப்பும் இந்தத் தொடருக்கு உண்டு. இரு நாட்டு ரசிகர்கள் மட்டுமன்றி, ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களும் ஆஷஸ் தொடரின் போக்கை ஆர்வத்துடன் கவனிப்பது வழக்கம்.

இம்முறை, இங்கிலாந்தில் ஆஷஸ் தொடர் தொடங்கியபோது இங்கிலாந்து அணி, நிச்சயம் இதில் வெல்ல வேண்டும் என விரும்பியிருக்கும். ஆனால், இது சாத்தியம் என்று எந்த அளவுக்கு அது நம்பியிருக்கும் எனத் தெரியவில்லை. அதேநேரத்தில், அவுஸ்திரேலிய அணியோ வெற்றிகுறித்த மிதமிஞ்சிய நம்பிக்கை கொண்டிருந்தது. அதன் நட்சத்திர ஆட்டக்காரரான ஸ்டீவ் ஸ்மித், சில மாதங்களுக்கு முன்னரேயே, இப்போதே இங்கிலாந்தில் ஆஷஸ் தொடரில் விளையாடி வெற்றிபெறத் துடிப்பதாக உற்சாகமாகக் கூறியிருந்தார். சொந்த மண்ணில் இங்கிலாந்தை 5-0 என.வீழ்த்தி, ஆஷஸ் தொடரை வென்றிருந்த வெற்றிக் களிப்பும் அந்த நம்பிக்கையின் பின்னால் இருந்தது. முன்னாள் வீரர்கள் மெக்ராத் மற்றும் ஷேன் வாரன்போன்றவர்களும் ஆஷஸ் தொடர் அவுஸ்திரேலியாவுக்குத்தான் என்று உருவேற்றியிருந்தனர். விளைவு, அவுஸ்திரேலிய அணி மிதமிஞ்சிய தன்னம்பிக்கையு



எந்த டெஸ்ட் தொடருக்கும் இல்லாத பாரம்பரியமும் எதிர்பார்ப்பும் இந்த தொடருக்கு உண்டு



டன் இங்கிலாந்தில் கால் வைத்தது.

ஆனால், தொடரின் கடைசி டெஸ்ட் தொடங்குவதற்கு முன்னரேயே ஆஷஸ் வெற்றி தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இங்கிலாந்து 3-1 எனத் தொடரை வென்றது. அப்படியே, அவுஸ்திரேலிய கப்டன் மைக்கேல் கிளார்க்கின் கிரிக்கெட் வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. உலக சாம்பியனான அவுஸ்திரேலிய தரப்பில் பலரது இடம் கேள்விக்குள்ளானது என்றால், இங்கிலாந்து தரப்பில், தள்ளாட்டத்தில் இருந்த பலரது இடம் உறுதியாகியிருக்கிறது. வேகப்பந்து வீச்சாளர்கள் ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டுவர்ட் பிராட், 'ஆல் ரவுண்டர்' ஸ்டீவ் பின், ஆட்டக்காரர்கள் ஜோ ரூட், இயன் பெல் மற்றும் கப்டன் அலிஸ்டர் குக் உள்ளிட்டோர் ஒவ்வொரு விதத்தில் பங்களித்து, தங்கள்மீதான விமர்சனங்களைப் பாராட்டுகளாக மாற்றிக்கொண்டனர். இது இன்னொரு செய்தியையும் சொல்கிறது; இங்கிலாந்து ஓர் அணியாக வெற்றிகரமாகச் செயல்பட்டமை, அதற்குக் கைகொடுத்திருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு நாள் உலகக் கிண்ண போட்டியைத் திரும்பிப் பார்த்தால் இது எத்தனை ஆச்சரியமான மாற்றம் எனத் தெரியும். அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்ற 2015 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து அணி வங்கதேசத்திடம் உதைபட்டு, கால் இறுதிக்குக்கூடத் தகுதிபெற முடியாமல் வெளியேறியது. கிரிக்கெட்டின் தாய் நாட்டுக்கு இப்படி ஒரு பரிதாபமா என உலகமே எள்ளி நகையாடியது என்றால், உள்ளூரிலோ கெவின் பீட்டர்சனை விட்டால் இங்கிலாந்துக்கு கதிமோட்சம் கிடையாது எனப் பேசினர். அதிருப்தியாளராக ஒதுக்கி ஓரங்கப்பட்ட பீட்டர்சன் இங்கிலாந்து அணியைக் கரைசேர்க்கவேண்டும் எனக் கூறப்பட்டதைவிட, இங்கிலாந்து அணிக்கு வேறு என்ன அவமானம் இருந்துவிட முடியும்?

ஆனால், இங்கிலாந்து கிரிக்கெட்டின் அதிரஷ்டம், பீட்டர்சன் தயவில்லாமலேயே அந்த அணி ஜெயித்துக் காட்டிவிட்டது. கப்டன் அலிஸ்டர் குக்குக்கு இரங்கற்பா பாடியவர்களுக்கெல்லாம் இது கொஞ்சம் அதிர்ச்சி அளித்திருக்கலாமென்றாலும், இங்கிலாந்தில் எல்லோருக்கும் ஆனந்தமேதான். பரம எதிரியான அவுஸ்திரேலியாவை ஆஷஸ் தொடரில் மண்ணை கவ்வவைப்பது என்றால் சும்மாவா என்ன?

இங்கிலாந்து அணி சமீப காலங்களில் கடும் விமர்சனத்திற்கு இலக்காகி வந்தாலும், ஆஷஸ் தொடருக்கு முன்பாக எல்லாவற்றையும் சரியாகவே செய்தது. அதன் பயிற்சியாளராக டிரேவர் பேலிஸ் நியமிக்கப்பட்டார். மனிதர், உலகின் மிகச்சிறந்த பயிற்சியாளரென பாராட்டப்படுபவராயிற்றே. அதற்கேற்ப, இங்கிலாந்துக்கு வியூகம் வகுத்துக் கொடுத்தார். தேர்வுக் குழுவும் வீரர்கள் தேர்வில் சொதப்பாமல் அணியில் இளம் ரத்ததைப் பாய்ச்சியதோடு, அநுபவம்மிக்க மூத்த வீரர்கள்மீதும் நம்பிக்கை வைத்தது. எல்லாவற்றுக்கும் மேல், சொந்த நாட்டு வீரர்களுக்கு ஏற்ற ஆடுகளங்களைத் தயார்செய்து கொடுத்தது. இங்கிலாந்து வீரர்களும் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்பது போல, கடந்த கால சர்ச்சைகளை எல்லாம் மறந்து, பொறுப்பாக ஆடினர்.

முதல் டெஸ்ட்டில் ஜோ ரூட்டும் ஜேம்ஸ் அன்டர்சனும் கைகொடுத்து, வெற்றியோடு துவக்கிவைத்தனர். அடுத்ததாக, கிரிக்கெட்டின் புண்ணிய பூமியான 'லோட்ஸ்' மைதானத்தில் இங்கிலாந்து தோல்வியை சந்தித்தது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் நட்சத்திரம் ஸ்டீவ் ஸ்மித் இரட்டைச் சதம் அடித்து அவுஸ்திரேலிய பெருமையை காப்பாற்றினார். ஆனால், எட்பாக்ஸ்டன்

மூன்றாவது டெஸ்ட்டில் அன்டர்சன், ஸ்டீவ் பின் பந்துவீச்சு அவுஸ்திரேலிய அணியைச் சின்னாபின்னமாக்கியது. துடுப்பாட்டத்தில் இயன் பெல் கைகொடுத்தார். நொட்டிங்ஹாமில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட்டில் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் இல்லாத குறையே தெரியாமல் இங்கிலாந்து அசத்தி, அவுஸ்திரேலியாவை 60 ஓட்டங்களில் சுருட்டி எடுத்தது. ஸ்டுவர்ட் பிராட் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். மூன்று நாள்களில் இந்த டெஸ்ட் முடிந்துவிட, ஆஷஸ் தொடர் இங்கிலாந்து வசமானது. இளம் வீரரான பென் ஸ்டோக்ஸ் நன்றாக ஆடக்கூடியவராகவும் இருந்தமை இங்கிலாந்து அணிக்கு மேலும் வலுசேர்த்தது. ஆட்டக்காரராகவும் கைகொடுத்த ஸ்டோக்ஸ் இங்கிலாந்து அணிக்கு நான்காவது வேகப்பந்து வீச்சாளராகவிருந்து, அதன் தாக்குதலுக்குக் கூடுதல் வேகத்தைக் கொண்டுவந்தார்.

அவுஸ்திரேலிய அணியின் வெற்றிப் பெருமைகளை அலசி ஆராயந்த நிலை மாறி, அந்த அணி இப்படிப் பரிதாபமாகத் தோற்கக் காரணம் என்ன எனும் கேள்விக்கு விடை தேடும் நிலை உண்டானது.

இந்தத் தோல்வியின் முதல் பலிக்கடா கட்பன் மைக்கேல் கிளார்க்தான். தோல்விக்கு முக்கிய காரணமும் அவர்தான். கிளார்க் தலைசிறந்த ஆட்டக்காரர் மட்டுமல்ல, நல்ல கப்டனும்கூட. அலன் பார்டர், மார்க் டெய்லர், ஸ்டீவ் வா, ரிக்கி பொண்டிங் வரிசையில் வந்த கிளார்க், அவுஸ்திரேலிய அணியைத் திறம்பட வழிநடத்தியிருக்கிறார். 2015 உலக கிண்ண வெற்றியை அவரது மணிமகுடம் என்று சொல்லலாம். அத்தோடு, இந்தியாவுக்கு எதிரான தொடரின்போது இளம் வீரர் பிலிப் ஹியூக்ஸ் ‘பவுன்சர்’ பந்து தாக்கி மரணமடைந்த சம்பவம் அவுஸ்திரேலியாவை உலுக்கிய சோகமான நிலையில், கிளார்க் பொறுப்பான அண்ணன்போல நடந்துகொண்டு, அணியை வழி நடத்தி, தேம்பிக்கொண்டிருந்த தேசத்திற்கே ஆறுதல் அளித்தார்.

ஆனால், என்ன செய்யவது? முதுகு வலியின் பாதிப்பும், மோசமான ‘பார்மும்’ அவரது நேர்த்தியான ஆட்டத்துக்கு வேட்டுவைத்தன. நெருக்கடியான நேரங்களில் கைகொடுக்கும் முன்னணி ஆட்டக்காரரான கப்டனே நெருக்கடிக்கு இலக்கானமை அணியைப் பதம்பார்த்தது. அடிமேல் அடி என்று சொல்வதுபோல, நட்சத்திர ஆட்டக்காரரான ஸ்டீவ் ஸ்மித்தும் இந்த நேரத்தில்தானா தடுமாறவேண்டும்? கிளார்க் ஆட்டத்தை மாற்றிப் பார்த்தார், பயனில்லை. ஆடும் வரிசையையும் மாற்றினார், பலனில்லை.

லோட்ஸ் டெஸ்ட் தவிர, ஸ்மித் ஆட்டம் எந்த டெஸ்ட்டிலும் எடுபடவில்லை. சமீபகால டெஸ்ட்களில் அவுஸ்திரேலிய அணி எந்த அளவுக்கு ஸ்மித் ஆட்டத்தை நம்பியிருந்திருக்கிறது என்பதைப் பாரத்தால், இது எத்துணை பெரிய பாதிப்பு என்று புரியும்.

மற்றையபடி, அணியிலிருந்த மூத்த வீரர்களான டேவிட் வார்னர் போன்றவர்களும்சரி, வோக்ஸ் போன்ற இளம் வீரர்களும் சரி, ‘ஸ்விங்’ பந்துவீச்சுக்கு ஏற்ற இங்கிலாந்து ஆடுகளங்களில் தடுமாறினர். நான்காவது டெஸ்ட்டில் அவுஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் மாறிமாறி ஸ்லிப்பில் ‘கச்’ கொடுத்துச் சென்றமை, இந்தத் தடுமாற்றத்தின் உச்சமாக அமைந்தது.

பந்து வீச்சாளர்களாவது அவுஸ்திரேலியாவுக்கு கைகொடுத்திருக்கலாம்தான். ஆனால், மிட்செல் ஜோன்சனும் ஸ்டார்க்கும் எதிர்பார்த்த அளவுக்குப் பிரகாசிக்கவில்லை. மிட்சல் மார்ஷ் ‘ஆல் ரவுண்டரா’க ஏமாற்றம் அளித்தார். மூத்த வீரரான விக்கெட் கீப்பர் ஹாடினை இடையே கழற்றிவிட்டமை, எந்தவிதத்திலும் அணிக்கு உதவவில்லை. வீரர்கள் தேர்வில் அவுஸ்திரேலியா சொதப்பிவிட்டது என்று பயிற்சியாளர் லீமன் சொன்னது முழுக்க முழுக்க சரியே.

எல்லாவற்றுக்கும் மேல், அவுஸ்திரேலியா வெற்றி மிதப்பில், இங்கிலாந்து அணியைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாகத் தோன்றுகிறது. ‘எப்படியும் எளிதாக வென்றுவிடலாம்’ எனும் அதிகப்படியான நம்பிக்கையுடன் வந்த அவுஸ்திரேலிய அணி, வேகப்பந்து வீச்சுக்கு உகந்த ஆடுகளங்களில் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் ஒருவர் மாறி ஒருவர் அபாரமாக பந்து வீசியமை ஆட்டக்காரர்களின் ‘புட்வோர்க்’குக்கு பெரும் சோதனையாக அமையும் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் பாயவும் வேண்டும், பதுங்கவும் வேண்டும். அவுஸ்திரேலிய வீரர்கள் பாய்ச்சலுக்குப் பழகியவர்கள். அதிரடியாக ஆடியே இங்கிலாந்து பந்துவீச்சைச் சமாளிக்கலாம் எனும் நம்பிக்கையில், பதுங்கலை மறந்து, பொறுப்பாக ஆட முடியாமல் திணறினர்.

சூழ்நிலைக்கு ஏற்ப அதிரடியாகவோ, நிதானமாகவோ ஆடவேண்டும் என்பது ஓர் உத்தி என்றால், எந்த நிலையிலும் தாக்குதல் ஆட்டம் ஆடுவது இன்னொரு வகை உத்தி. அதாவது, விக்கெட் இழக்காமல் இருந்தால் அதிரடியாக ஆடுவது; எடுத்த எடுப்பில் நான்கு விக்கெட் இழந்தாலும் அசராமல் அதே அதிரடி ஆட்டத்தை ஆடுவது! சமீப காலமாக மக்கல்லம் தலைமையிலான நியூசிலாந்து அணி இப்படித்தான் ஆடுகிறது. அவுஸ்திரேலிய அணிக்கும் இது பழக்கப்பட்ட பாணிதான். ஆனால், இதில் உள்ள சிக்கல் என்னவெனில், இது எல்லா நிலைகளுக்கும் பொருந்தாது என்பதுதான். சில நேரங்களில் நிலைமையை புரிந்துகொண்டு, கூட்டுக்குள் ஒடுங்கிக்கொண்டு நிதானமாக ஆடவேண்டும். கிரிக்கெட் மொழியில் சொல்வதானால் தலையைத் தொங்க போட்டுக்கொண்டு ஆடி, முதலில் விக்கெட்டை காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

ஆனால், இங்கிலாந்தில் அவுஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் அதிரடியாக ஆடுவதா, சுழலுக்கு ஏற்ப நிதானமாக ஆடுவதா எனத் தெரியாமல் தவித்தனர். கில்கிறிஸ்ட்டுக்கோ, மத்யூ ஹைடனுக்கோ இந்த தயக்கம் இருந்ததில்லை. ஸ்டீவ் வாவிற்கும், ரிக்கி பொண்டிங்குக்கும் இருந்ததில்லை. ஆனால், என்ன செய்வது?

மைக்கேல் கிளார்க் தலைசிறந்த ஆட்டக்காரர் என்பதிலோ மகத்தான கப்டன் என்பதிலோ சந்தேகம் இல்லை. ஆனால், முதுகு வலியின் பாதிப்பு கிளார்க் யுகத்தை முன்கூட்டியே முடிவுக்குக்கொண்டுவந்துவிட்டது. கிளார்க்கும் இதை உணர்ந்து ஆஷஸ் தொடரோடு ‘குட்பை’ சொல்வதாக அறிவித்துவிட்டார். சவாலான நிலையில் ஸ்டீவ் ஸ்மித் அவுஸ்திரேலிய கப்டனாகியிருக்கிறார். அவுஸ்திரேலிய அணியை அவரால் கரை சேர்க்கமுடிகிறதா என்பதைப் பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆஷஸ் தொடர் அவுஸ்திரேலியாவுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கலாம். அதன் வெற்றிக் கர்வத்திற்கு சரயான அடியாகவும் அமைந்திருக்கிறது. ஆனால், இது டெஸ்ட் கிரிக்கெட்டின் கம்பீரத்தைக் கச்சிதமாக உணர்த்தியிருக்கிறது. ■



Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers & Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

# Lycamobile
Call the world for less

# இலங்கை

**5p**
நிமிடத்திற்கு
வீட்டுத்தொலைபேசி

**8p**
நிமிடத்திற்கு
கைத்தொலைபேசி

இச்சலுகையை பெற்றுக்கொள்ள
**SAVE** எனும் குறுந்தகவலை **2525** எனும் இலக்கத்திற்கு அனுப்புங்கள்

**3p**
நிமிடத்திற்கு
டயலொக் தொலைபேசி
இணைப்புக்களுக்கு

அனைத்து **UK PLAN**
கொள்வனவின் போதும்
இச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம்

## UK PLAN

**£12**
மட்டுமே
/30 நாட்கள்

**1000**
UK நிமிடங்கள்

**2GB**
இணைய பாவனை

வரையறையற்ற
குறுந்தகவல்கள்

இங்கிலாந்து லைக்காமொபைல்
பாவனையாளர்களுக்கு வரையறையற்ற
நிமிடங்கள் மற்றும் குறுந்தகவல்கள்

இச்சலுகையை பெற்றுக்கொள்ள **12044** எனும்
குறுந்தகவலை **3535** எனும் இலக்கத்திற்கு அனுப்புங்கள்.



Top-up your SIM
online or where you see
the following signs:

PayPoint, epay, TESCO, ASDA, Martin McColl, Sainsbury's, WHSmith

Customers may not be able to use
Electronic Top-Up at all locations
where the top-up logo appears

Lyca mobile
Call the world for less

இலவச SIM அட்டையை பெற்றுக்கொள்ள www.lycamobile.co.uk
என்ற இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள் அல்லது
020 7132 0322 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

Customers should opt-in by texting SAVE to 2525 to be eligible to get the special rates, Customer who did not opt-in will be charged at standard rates. Opt-in save promotional tariff is valid from 25.02.2015. Customers with India 1p/min promotion ( top up offer) should not opt-in to this special rates. If you opt-in to this promotion, you will not be able to avail India special rates.Promotional tariff valid for 30days from the Opt-in. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid until 30/09/2015. Special International rates for UK Plans customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with UK PLAN 7.5 and above(Except UK plan 5). Customer will be moved to standard rates once the plan expired.Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice.